# கௌதம புத்தர்

முதல் நூலாசிரியர் :

இந்திய அரசாங்க ஜனாதிபதி, பாரத ரத்தினம்,

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

தமிழாக்கம் :

வி. எஸ். வி. இராகவன்

விற்பனை உரிமை :

வள்ளுவர் பண்ணை

137, பிராட்வே, சென்னை.1

முதற்பதிப்பு: அக். 1963
உரிமை ஆசிரியருக்கே

விலை ரூபாய் 2-00

அச்சிட்டோர் :
ஜீவன் பிரஸ், சென்னை-5 (793)

The translator and publishers thank
*Dr. S. Radhakrishnan, the Oxford University Press,*
and *the British Academy* for permission to issue this
translation of part II of the Introduction to
Dr. S. Radhakrishnan's *The Dhammapada,* published
by the Oxford University Press in 1950.

Publishers :

LOTUS PUBLISHERS

2, KONDI CHETTY STREET,
MADRAS-1.

# முன்னுரை

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சித்தார்த்த கௌதமர் (கி. மு. 563-483) என்னும் பேரறிவாளராகிய ஞானப்பிரானுரால் இந்தியாவில் போதிக்கப்பட்ட புத்த மதமானது சுய நலத்தை அறவே விட்டு அதினினின்று விடுவிக்கப் பெற்று, அன்பு, அருள், ஆனந்தம், இரட்சிப்பு ஆகிய உட்பொருளேத் தனது மூலசூத்திரங்களின் கருப்பொருளாகக் கொண்டு, இன்று அது உலக முழுவதும் பரவிப் பல கோடிக்கணக்கான மக்களால் போற்றப்படுவது கண்கூடு. அரண்மனைப் போகங்கள் யாவற்றையும் ஒருங்கே உதறித் தள்ளி, பற்பல கலேகளேயும், வேதங்களேயும், ஆகமங்களேயும், நீதி நூல்களேயும் அலசி ஆராய்ந்து, மனத்துக்கு எவ்வித ஆறுதலும் கிடைக்கப் பெருது, கடைசியாக அரசமரமாகிய போதி மரத்தின் கீழ் ஞானத்தில் அமர்ந்து, உலகமே அதிசயிக்கத்தக்க ஞானப்பேற்றையடைந்த புத்த பிரானுரது போதமும், தத்துவமும், புண்பட்ட இதயம் கொண்ட மக்களுக்கு அப்புண்ணை ஆற்றுவிக்கும் பண்பட்ட சஞ்சீவியாகப் பயன்பட்டு வருகின்றன. சுயநலத்தை அறவே ஒழித்து, உலகிற்குத் தொண்டு செய்வதையே பெரும் பேருகக் கொண்ட புத்த மதம், ‘அன்பு மதம்’ என்றும், ‘அருள் மதம்’ என்றும் பலவேறு பெயர்களால் வழங்கப்பட்டு வருவது, அது தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கும் சீரிய குறிக்கோளின் பெருமையை உணர்த்துவதாகும்.

புத்த மதக் கோட்பாடுகளின்படி, மனிதனது பிறவி, அவன் மனத்திற் கொள்ளும் ஆசையின் பலனுய் உண்டாகிறது. தன்னலத்தைக் குறிக்கோளாகக் கொண்ட ஆசையை ஒழித்து விட்டாலன்றி, பிறப்பைப் பற்றிய உயர்ந்த உண்மைகள் புலப்

படா. அப்பேருண்மையை யறிய புத்த மதம் எண்வகை வழிகளை விதித்திருக்கிறது. அவ்வெண்வகை வழிகளாவன: சரியான நம்பிக்கை, சரியான தீர்மானம், நேர்மையான பேச்சு, தூய்மையான குணம், அன்றாடத் தொழில் நிறைவு, உண்மை யான முயற்சி, பதட்டமின்மை, தன்னலம் விட்டொழித்த தியானத்தின் ஆனந்த அனுபவம் என்பன. இவ்வெண்வகை வழிகளாற்பெறப்படும் பெரும்பேறே நிருவாணம் என்று சொல்லப்படுகிறது.

அன்பு மதத்தை ஏற்படுத்தியவரும், ஞானப்பிரானுராய் விளங்கிய புத்த மதத்தாபகருமான புத்த பிரானுரது உயரிய தத்துவங்களை, இன்றைய ஞானப்பிரானுரும், பாரத தேசத்துத் தவப் பெரும் புதல்வரும், இந்திய அரசாங்கத்தின் இன்றைய ஜனுதிபதியுமாய் விளங்கும் பேரறிஞர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் தமக்கேற்ற தனிப் பெருஞ் சொற்களால் விளக்குகின்றுரெனின், அதைவிட நமக் குக் கிடைக்கக்கூடிய பேறு வேறு யாது உளது? இந்தியாவின் தத்துவத்தையும் மதத்தையும் மேல் நாட்டிற்குத் தகுந்த முறையில் எடுத்துரைப்பதில் உயர்திரு டாக்டர் எஸ். ராதா கிருஷ்ணன் அவர்களை இதுகாறும் எவரும் விஞ்சியதில்லை. தாமே ஒரு தத்துவ போதகராகவும், ஆழ்ந்த மதப்பற்றுக் கொண்ட ஞானியாராகவும் விளங்கும் அவர், மேடைப் பேச்சுக்கு வேண்டிய மேதையும் ஆற்றலும் கொண்ட சொல்லின் செல்வராவார். "பிரிட்டிஷ் கழகத்தின் முன், உலக மேதைகள் தொகுதியில் (Master Mind Series) நிகழ்த்திய அவருடைய பேருரையால், அவரே ஒரு பெரிய உலக மேதை யாய் விளங்கியது அன்று காணப்பட்டது. இந்நாட்டின் மிகவும் புகழ் பெற்ற எழுத்தாளர்கள், தத்துவ ஞானிகள் ஆகிய பலர் கூடிய கூட்டத்தின் முன், ஒரு சிறு குறிப்புமின்றி எவ்விதத் தட்டுத் தடங்கலும் ஏற்படாமல், அவர் நிகழ்த்திய பேருரையானது அங்கிருந்தவர்களைப் பெரிதும் வியக்கச் செய்த தோடு, புத்த மதத்தை மட்டுமல்லாமல், இந்து மதத்தின் பண்பாடுகளனைத்தையும் நம் நாட்டிற்கு அறிமுகப்படுத்தி விட்டது. இதைவிட, அவர் தம்முடைய நுண்ணிய தெளிந்த புத்திவன்மையாலும், தெளிவான ஆன்மிக உணர்ச்சியாலும்,

தமது சிறப்பார்ந்த உருவத்தாலும் அங்குக் கூடியிருந்த பெரு மக்களுக்கு அழிவற்ற ஒரு சிந்தனைச் சித்திரத்தை உண்டாக்கி, தமது பேருரையைக் கேட்க விழைந்து கூடிய அனைவரையும், அதை மற்றவர்களுக்கும் போதனை செய்யுமாறு ஊக்குவித் தார்,'' என்று மேனாட்டு இலக்கிய மேதை ஒருவரே அப்பேரு ரையைக் கேட்டு எழுதினாரென்றால், டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களது மேதைக்கு வேறு ஒரு விளக்கம் அளிப்பதும் தேவையோ ?

இத்தகைய மேதையும், பண்பாடும், தத்துவ ஞானமும் கொண்டு விளங்கும் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் நிகழ்த்திய 'கௌதம புத்தர்' என்ற ஆங்கிலப் பேருரையின் தமிழ் மொழி பெயர்ப்பே இப்புத்தகத்தின் உருவமாகும். முதனூலிற் காணப்படும் அத்துணை வேகமும், ஆழ்ந்த கருத்தும், சொல்லின் அழகான கோவையும், அதே உயிர்ப்பும், மொழிபெயர்ப்பில் அப்படியே கொண்டுவர முடி யாமல் சிதைவுறும் என்பது எவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய தொன்றே. இருப்பினும், உலக மேதை டாக்டர் எஸ். ராதா கிருஷ்ணன் அவர்களது மேதையைப் போற்றும் அன்பர்களின் குழுவில் நானும் ஒருவன் என்ற காரணத்தைக் கொண்டு, அன்பின் மேலீட்டால், அவர் பொன்மொழிகளைத் தமிழில் மொழிபெயர்க்கத் துணிந்தேன். ஆகையால், இது ஆசையால் ஏற்பட்ட துணிவேயாகும். இளமை, ஞானமின்மை, தொழி லீடுபாடு ஆகிய பற்பல குறைபாடுகளுக்குமிடையே வெளிவந் துள்ள இம்மொழிபெயர்ப்பில் குற்றங்குறைகள் மலிந்திருப்பது இயல்பே. அவைகளைப் பெரியோர்கள் பொறுத்து, எளியேனை ஆசி வழங்கி, ஆதரிக்குமாறு அவர்களை என் இதயபூர்வமாக வேண்டுகின்றேன்.

தாம் இயற்றிய மற்ற ஆங்கில நூல்களுள் சிலவற்றையும், தமிழில் இதையும் மொழி பெயர்த்து வெளியிட மிக்க அன்பு டன் அனுமதியளித்த இந்திய அரசாங்க ஜனாதிபதி, பாரத ரத்தினம் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு நான் எத்துணைக் கடமைப்பட்டுள்ளேன் என்பதைச் சொற்களால் வருணித்துக் கூறல் இயலாது. உலகப் பேருபகாரியாரான

அவர்களுக்கு எனது உளம் க னி ந் த நன்றி என்றென்றும் உரித்தாகுக !

என் நண்பரும் பேரன்பருமான உயர்திருவாளர் மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், தமது பல வேலைகளுக்கிடையில், இப்புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியில் அரிய திருத்தங்கள் பல செய்து தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றி என்றும் உரித்தாகுக !

தமிழன்பர்கள் இந்நூலுக்குப் பேராதரவு அளிப்பார்களாக !

எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிக ! வாழ்க இந்தியப் பண்பாடுகள் !

தமிழாக்க ஆசிரியன்

# உள்ளுறை


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| I. | வாழ்க்கை வரலாறு | ... | 10 |
| II. | நான்கு பேருண்மைகள் | ... | 33 |
| III. | புத்தரும் உபநிஷத்துகளும் | ... | 53 |
| IV. | தத்துவார்த்தக் கருத்துகள் | ... | 70 |
| V. | ஆன்மிகப் பாரமார்த்திகம் | ... | 103 |

''புத்தம் சரணம் கச்சாமி ;
தம்மம் சரணம் கச்சாமி;
சங்கம் சரணம் கச்சாமி ''

# கௌதம புத்தர்

(கி. மு. 563 — 483)

இச் சொற்பொழிவு ஏற்பாட்டில் இதுகாறும் கலை, விஞ்ஞானம், தத்துவம், இலக்கியம் ஆகிய பல விதத் துறைகளில் வீறு பெற்று விளங்கிய பல பெரியோர்களது வரலாற்று விளக்கங்கள் இடம் பெற்று வந்தனவாயினும், அவர்கள் யாவரும் மேல் நாட்டுப் பண்பாட்டினைச் சேர்ந்தவர்களே. கௌதம புத்தரின் வரலாற்றில், கீழ்த் திசையினின்று வெளிப் போந்த பேரறிவுப் பெருஞ் சுடரை நாம் காண்கிறோம். மனித இனத்தின் வாழ்க்கைப் பாதையிலும், எண்ணத் திலும், பெருஞ் சத்தியை ஊடுருவச் செலுத்திய வர்களுள் அவர் இரண்டாமவர் என்று எண்ணப்படாத நிலையை அடைந்தவர் ; ஒரு புனித மதத்தைத் தாபித்த பெருந்தகையாளர் ; அவரது மதம் மற்ற எந்த மதத்தை யும் விடப் பொருளாழத்திலோ, கருத்து மேம்பாட் டிலோ, பரந்த ஞானத்திலோ குறைந்து காணப்படுவ தன்று. உலக மேதைகளது அறிவு வர்க்கத்தோடு அவர் எண்ணப்படக் கூடியவராவர். அவர் தம்முடைய கொள்கைகளைப் பண்பாடு பெற்ற மக்கள் யாவரும் தங்களுக்கேற்றவை யென்று அவ்வளவு அருமையாகப் போற்றக்கூடிய சத்தி படைத்தவராவர். ஏனெனில், அவரை அறிவுக் கருவூலமாக எண்ணுமிடத்தும், அவரது நீதியைப் போதிக்கும் நேர்மையைச் சிந்திக்கு மிடத்தும், ஆன்மிகக் கொள்கையை ஊடுருவப் பார்க் கும் நிலையைக் கருதுமிடத்தும், அவர் சிறிதும் சந்தே கத்துக்கிடமின்றி, வரலாற்று விளக்கத்தில் மிகவும் உன்னதமான இடத்தைப் பெற்றவராவர் என்பது வெள்ளிடை மலை.

# I

# வாழ்க்கை வரலாறு

சரித்திரப் புகழ் பெற்ற அவர் பெயர் (கௌதம புத்தர்) சந்தேகத்துக்கு இடமானதே என வாதிக்கப் பட்டாலும்,[1] அவரைப் புகழ் அடைந்தவரல்லரென்றும், அவரது காலத்தைச் சரியாகக் கணக்கிட்டு அளவிட முடியாதென்றும், அவருடைய வாழ்க்கை மேலெழுந்த வாரியாகவாவது சித்திரிக்கத் தகுந்ததாயில்லை யென்றும், அவருடைய மதத்தின்கண் காணப்படும் சிக்கல்களைத் தத்துவார்த்தமாகக் களைந்தெறிவதற்கு அவர் போதித்த போதனைகளை ஆதாரபூர்வமாகத் தெரிந்துகொள்வது முடியாத காரியமென்றும் பல வாறு சில மேதைகளே இன்றைய நிலையில் காட்டக் கூடியவர்களாகக் காணப்படுவார்கள். அதுவும் அவர்களால் முடியாத செயலே என உறுதியாகக் கூறிவிட லாம். அவரைப்பற்றிய ஆதிகாலத்துக் கட்டுக்கதைகள் பலவற்றையும் ஆராய்ந்து, அவைகளில் காணப் படும் அவருடன் பேசிப் பழகியவர்களின் வரலாறு

---

1. எமிலி சீனர்ட்டு (Emile Senart) எழுதிய "Essai sula legende du Buddha" (1875) பார்க்கவும்.

களும் உண்மையானவைகளே என்பதை நான் இங்கு எடுத்துக்காட்ட வரவில்லை.[1]

1. பரம்பரை வரலாறு பின்வருமாறு விளக்கம் அளிக்கிறது:

தர்மமும், விநயமும் புத்தர் நிருவாணமடைந்தவுடன் கூட்டமொன்றில் சரிபார்த்து படனம் செய்யப்பட்டனவென்றும், நூறு ஆண்டுகள் கழித்து, வைசாலி என்னும் நகரில் இரண்டாவது கூட்டத்தில் விநயம் மீண்டும் ஓதுவிக்கப்பட்டதென்றும், அதில் நடைமுறையில் காணப்படும் பத்துக் குற்றங்கள் கண்டனம் செய்யப்பட்டனவென்றும் தெரிகிறது. இலங்கை வரலாறு வழியாக நோக்குமிடத்துப் பௌத்த பிக்ஷுகளின் மூன்ருவது கூட்டம் ஒன்று அசோகரது காலத்தில் கி. மு. 247-ஆம் ஆண்டில் கூட்டப்பட்டது என்பது தெரிகிறது. அசோகர் காலத்தில் அவருடன் வாழ்ந்த மத பரிபாலகர்களால் படிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள சுத்த பிடகம் (Sutta Pitaka) என்னும் நூலில் காணப்படும் பகுதிகளின் ஏழு பாடங்கள் அசோகரால் பாப்ரு ஸ்தூபியில் செதுக்கப்பட்ட எழுத்துகளோடு ஒப்புமைக் காட்டப்பட்டு, அவை இரண்டும் ஒன்றே என்று கருதப்பட்டு வந்திருக்கின்றன. இதனுல் தெரிந்துகொள்ளத் தகுவது அப்புத்தகத்தில் காணப்படும் பௌத்த மத பாடங்கள் அசோகர் காலத்தில் நடைமுறையில் இருந்தன என்பதாகும். சாஞ்சியில் (Sanchi) காணப்படும் பட்டயத்தில் 'தம்மகதிகா' (Dhammakathika) அதாவது 'நீதிநூற்போதகர்' என்றும், 'பேடகி' (Petaki) அதாவது பிடகங்களை (Pitakas) நன்கு அறிந்தவரென்றும், 'சுத்தாதிகினி' (Suttatikini) அதாவது சூத்திரங்களை நன்கு அறிந்தவரென்றும், 'பசனேகாயிகா' (Pacanekayika) அதாவது ஐந்து நிகாயங்களையும் (Nikayas) கற்றுத்தெளிந்தவர் என்றும் பொருள்படும் சொற்கள் காணப்படுகின்றன. இவை அக்காலத்திலேயே பிடகங்கள், சொற்பொழிவுகள், ஐந்து நிகாயங்கள் ஆகியவைகள் புகழ் பெற்றிருந்தன என்பதைத் தெரிவிக்கின்றன. இப்பட்டயங்கள் கி. மு. இரண்டாம் நூற்ருண்டைச் சார்ந்தவை என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. இதனுல், புத்தரைப் பற்றிய நாட்டுக் கதைகளும், வரலாற்று விளக்கங்களும் அசோகர் காலத்தில் மிக்க உறுதிப்பாடடைந்தன என்பது போதரும். இதற்கு ஆதாரமாகச் சீன மொழி பெயர்ப்புகளும், ஐவகை நிகாயங்களுக்கேற்ற சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அக் கதைகளிலே அவை யாவும் புத்த பிரானுருடைய வாக்குகளே என்று கூறப்படினும், அவற்றில் காலக் குளறுபடியும், செய்திகள்

அக்காலத்தில் உலக வழக்கில் எழுதும் பழக்கம் அருகிக் கிடந்தது. அதனுல், கவனத்திலிருந்து சொல்லப்படும் செய்திகள் இப்பொழுது சொல்லப்படுவதை விடச் சரியானவையாகவும், ஒப்புக்கொள்ளக்கூடியன வாகவும் இருந்தன. இதைவிடப் பழம் பெருமை வாய்ந்த இருக்கு வேதமானது, கவன பூர்வமாகவே நம் வரைக்கும் மிகவும் குறைந்த பாட பேதங்களுடன் வந்திருப்பதே அதற்குப் போதிய சான்ருகும். இதைப் போன்ற பல பிற்கால நூல்கள் மிகுந்த பாட பேதங் களோடு காணப்படுவது இங்கு நோக்கத் தக்கது.[1]

புத்தரைப் பற்றிய கற்பனேகளும் கதைகளும் வரலாறுகளும் பிற்காலத்தில் பல விதமாகத் திரித்துக் கூறப்படினும், மதத் தாபகரின் நினைவு கூறும் மொழி களேயும், அவருடைய செயல்களேயும் சரியான நிலே யிலே நாம் அறிந்துகொள்ளக் கூடும். புத்தரது பிறப்பு வகையினேப் பற்றிய சரித்திர ஆதாரமற்ற கதை களும், தெய்விகமாக மதிக்கப்பட்டது காரணமாக அவதரித்த கதைகளும், அவருடைய சீடர்கள் அவரைப் பற்றி நம்பிக்கை ஏற்படுவதற்காகக் கூறியனவே யன்றி, நியாயமும் உண்மையும் தோன்றக் கூறியன வாகக் கொள்ளுதற்கிடமில்லே. இருப்பினும், பாலி மொழியில் காணப்படும் கதைகளுக்கும், சம்ஸ்கிருதத் தில் எழுதப்பட்டுள்ள அவருடைய வாழ்க்கையின்

---

வேறுபாடும் மலிந்து காணப்படுகின்றன. அவை புத்த வசனம் (Buddha Vachana) அல்லது பிரவசனம் (Pravachana) அதாவது சிறந்த சொற்கள் என்னும் பெயர் கொண்டுள்ளன. புத்தர் பிறந்த காலத்திலிருந்தே, அவரைப் பற்றிய பல கதைகள் உருவாக்கப்பட்டனவென்பது நன்கு தெரிகின்றது.

1. பேராசிரியர் மேக்டானல் எழுதுகிருர்: வேதக் கோட்பாட்டின் சாரமாகக் கருதப்பட்ட இருக்கு வேதம் நம் வரைக்கும் ஒரே நிலேயில் வாய்மொழியாகத் திருத்தம் இன்றியே வந்துள்ளது. அத்தகைய காலம் கி. மு. 1000-க்குக் குறைவாக இருப்பதற்குச் சாத்தியமில்லே.—A History of Sanskrit Literature (1900)—பக்கம் 46, 47.

முக்கிய நிகழ்ச்சிகள், அவர் வாழ்ந்து வந்த உலகம், அவருடைய இளமைப் போதனைகள் ஆகியவற்றைச் சித்திரித்துக் காட்டும் இலங்கை வரலாற்று விளக்கங்களுக்கும் அடிப்படையான ஒற்றுமை ஒன்றினைக் காணலாம். இளமை நிகழ்ச்சிகளைச் சித்திரித்துக் காட்டும் கதைகளிலும், புத்தர் இளைஞராய் வாழ்ந்து வந்தபொழுது நிகழ்ந்தனவாகக் காட்டும் கதைகளிலும் ஒருவித மாயப் போக்குக் காணப்படினும், வழிவழியாய் வரும் அவருடைய பரம்பரை வரலாற்று விளக்கங்களை மறுப்பதற்குரிய காரணம் இல்லை. அவர் கி. மு.563-ஆம் ஆண்டில்,[1] கபிலவஸ்துவில், சாக்கியர் எனப்படும் க்ஷத்திரியர் குடும்பத்தில், நேப்பாள தேசத்து எல்லையில், காசிக்கு வடக்கில் நூறு மைல் தொலைவில் **சுத்தோதனர்** என்பவருக்குத் திருமகனாராய் அவதரித்தார். அவ்வாறு அவர் பிறந்த இடத்தைப் பேரரசர் **அசோகர்** பிற்காலத்தில் ஒரு மதிற்சுவரெழுப்பி அடையாளம் இட்டுக் குறிப்பிட்டுள்ளது இன்றைக்கும் காணப்படுவதாகும்.[2] அவரது இயற்பெயர் **சித்தார்த்தர்** என்பதே.

1 பரம்பரைக் கதைகள், புத்தர் எண்பதாம் வயதில் முத்தியடைந்ததாகத் தெரிவிப்பதில் ஒன்றுபடுகின்றன. மற்றும், அவ்வாறு முத்தியடைந்த ஆண்டு கி. மு. *483* என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. வின்ஸென்ட் ஸ்மித்து என்பவர், புத்தர் இறந்த வருடம் கி. மு. *543* என்று கருதுகிறார். (The Journal of the Royal Asiatic Society, *1918*, பக்கம். *547*; Oxford History of India *1923*—பக்கம் *48*.)

2. அம்மதிலில் இத்தகைய கல்வெட்டு காணப்படுகின்றது:

"அரசரான தேவனும்பிரிய பிரியதரிசின்—இது அசோகருடைய சிலாசாஸன விருது—இருபது வருட கால அரசாட்சி செய்யும்பொழுது, அவர் தாமே இங்கு வந்து இவ்விடத்தைத் தொழுது சென்றார். இதற்குக் காரணம் புத்த சாக்கிய முனிவர் இவ்விடத்தில் பிறந்தாரென்பதே"......போற்றுதற்குரிய அவர் பிறந்த இடம் இது என்பதைக் குறிக்க அசோகர் இவ்விடத்தில் ஒரு கற்றூணை நிறுவச் செய்தார். Hultzch—Inscriptions of Asoka (*1925*), பக்கம். *164*.

**கௌதமர்** என்பது அவரது குடும்பப் பெயராகும். அவர் பிறக்கும்பொழுது அங்கிருந்த சோதிட வல்லுனர்கள், அவர் அரசாட்சியை ஏற்று நடத்த இசைந்தால் பேரரசராகி விளங்குவார் என்றும், நாடு சுற்றும் துறவியரின் வாழ்க்கையை பேற்கொண்டால், புத்தராகப் பரிணமிப்பார் என்றும் தெரிவித்தார்கள். ஒருவர் ஒரே சமயத்தில் சக்கரவர்த்தியாகவும், புத்தராகவும் இருக்க முடியாது. ஏனெனில், மதத் தத்துவங்களை ஆராய்பவர்களுக்கு இவ்வுலகப் பற்று அறவே நீங்க வேண்டுவது இன்றியமையாததன்றோ? குழந்தையைக் காணவந்த அசிதர் என்ற முதிய தீர்க்கதரிசியார், சிமியோன் இயேசுவைக் கண்ட மாதிரி, அக்குழந்தையின் எதிர் காலப் புகழை எடுத்துக் கூறி, அவ்வளவு காலம் வரை தாம் அதைக் கண்டு களிக்கவும், அவருடைய தெய்விகச் சொற்களை இருந்து கேட்கவும் முடியாமைக்கு வருந்தி அழுததாகச் சுத்த நிபாதத்திலிருக்கும் கதையால் அறிகிறோம். குழந்தை பிறந்து ஏழு நாட்களுக்குப் பிறகு, அதன் தாய் இறந்துவிடவே, அவள் தங்கையான மகாபிரசாபதி—சுத்தோதனரின் இரண்டாம் மனைவி—அக்குழந்தையை வளர்த்து வந்தாள் உரிய காலத்தில் கௌதமர் தம் உறவினருள் ஒருத்தியான **யசோதரையை**[1]த் திருமணம் செய்துகொண்டு **இராகுலன்** என்ற மகனைப் பெற்றார். கௌதமருடைய தகப்பனார், தம் மைந்தர் எந்தவிதமான துன்பத்தையும் காண்பதைத் தவிர்க்கவேண்டும் என்று எண்ணினார் எனவும், விதியோ அல்லது தெய்வ எத்தனமோ, அவர் போகும் வழியில் ஒரு நொண்டியையும், ஒரு நோயாளியையும், இறந்த ஒருவனது சடலத்தையும், ஊர் சுற்றும் ஒரு துறவியையும் ஒருவர் பின் ஒருவராக வருமாறு செய்ததெனவும், அதனால் கௌதமர் கடைசி

---

1. இவளுக்குப் பத்தகச்ச, கோபா என்னும் வேறு பெயர்களும் உண்டு.

யில் மத ஆசார சீலத்திலும், மனம் நிறைவு அடைதலி லும் விருப்பம் கொண்டு விட்டார் எனவும் கூறும் கதைகள் அறிவிப்பன யாவையெனில், கௌதமர் மதா சார விஷயத்தில் பற்றுள்ளவர் என்பதும், உலக வாழ்க் கையில் காணப்படும் இன்பங்களும் ஆசைகளும் மன நிறைவை அளிப்பனவாகா என்பதுமேயாகும். துறவற வாழ்க்கையின் தூயத்தன்மையே அவரை மிகவும் வசீ கரித்துவிட்டது என்பதை, "பத்தி மார்க்கத்தின் சிறந்த சாதனத்தையும் முடிவான பலனையும் பெறுவதற்காகத் தம் நாட்டினருட் பலர் வீட்டைத் துறந்து, உறைவிட மில்லாப் பெரு வாழ்க்கையில் புகுந்து விடுகின்றனர்,"[1] என்ற கொள்கை அடங்கிய அவருடைய உரையாடல் களிலும், தத்துவ போதனைகளிலும் அடிக்கடி நாம் கேட்கிறோம்.

அவர் தகப்பனார் தம் மைந்தரது மனத்தை உலக இன்பங்களில் ஈடுபடுமாறு செய்யச் செய்த ஏற்பாடுகள் அனைத்தும் பயனற்றுத் தோல்வியுற்றன. கௌதமர் தமது இருபத்தொன்பதாம் வயதில் இல்லத்தைத் துறந்து, துறவிக் கோலத்தை மேற்கொண்டு, உண்மை யைக் காண விழையும் துறவியராய்த் தம் வாழ்க்கை யைத் தொடங்கிவிட்டார். இதுதான் மகத்தான துறவறம் எனப்படும்.[2] உலக ஆசாபாசங்களில் ஈடுபட் டுள்ள நாம், இந்துக்களின் மனம் அக்காலத்தில் மதத்தில் எவ்வளவு பற்றுக்கொண்டது என்பதையும்,

---

1. பிருகதாரணியக உபநிஷத்துக் கூறுவதைக் கவனிக்க: "ஆன்மாவை அறிந்து கொண்ட பிறகு அந்தணர் என் போர் நெடுநாள் வாழவேண்டும் என்ற அவாவினையும், பொருள் சேர்க்கும் ஆசையையும், உலகின் இன்ப வாழ்க்கை யினை அடையும் அவாவினையும் அறவே துறந்து, துறவியராய்ச் சென்றுவிடுகின்றனர்." (பிக்ஷாசர்யம் சரந்தி.—iii. 5)

2. பிற்காலக் கதைகளிலே அவர் தம் மனைவியையும் குழந்தையையும் விட்டுப் பிரியும் காட்சி ஒரு சோக நாடக மாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

அம்மதத்தின் இறுதிக் கட்டத்தில் காணப்படும் பேரின் பத்தையடைய எத்தகைய இன்னல்களையும் போராட் டங்களையும் ஏற்கத் தயாராயிருந்த தென்பதையும் அறிந்து கொள்வது மிகமிகக் கடினமான செயலே யாகும். கௌதமரின் ஊடுருவும் மனப்பண்பு அவரை **ஆலார காலாமா, உத்தக ராமபுத்தா** என்ற அந்தண முனிவர் களுக்குச் சீடராக்கிற்று. அவர்கள் தங்கள் கோட் பாட்டின்படி, கௌதம புத்தருக்குத் தர்மமும், விநயமும் போதித்தார்கள். அவர்களிடமிருந்து கௌதமர் நம்பிக் கையின் அவசியம், சீலகுணம், மனத்தை ஒரு நிலையில் நிறுத்தும் தவத்திறம் ஆகியவற்றை ஒருவாறு கற்றுக் கொண்டாராயினும், அவர்களுடைய போதனைப் பொருள்கள் அவருக்குச் சரியெனத் தோன்றவில்லை. முடிவில்லாத மூளையைக் குழப்பும் ஆதர்சிக போதகர்க ளுடைய போதனைகளிலிருந்து உலகத் துன்பங்களின் எவ்வித நோய்தீர்க்கும் மருந்தையும் கண்டுகொள்ள முடி யாது. கௌதமர் இடைவிடாத யோக சாதனைகளினால் ஞானசித்தியைப் பெறும் உறுதிப்பாட்டுடன், தம் முடைய சீடர் ஐவருடன், மகிழ்ச்சியும் அழகும் நிரம்பப் பெற்றதும், புலன்களுக்கு இதமானதும், மனத்துக்குத் தூண்டுதலை யளிக்கக் கூடியதுமான **உருவேலா** என்ற காட்டினுட் சென்றுவிட்டார். சாந்தியும், அழகும் வாய்ந்த இடங்களில், மனத்துக்கு முழுநிறைவையும், ஆர்வத்தையும் கொடுக்கக்கூடிய புனிதமான வாழ்க்கை எளிதாக நடத்தப்பெறும் என்பது இந்தியாவில் நிலவி வந்த பொதுவான கொள்கையாகும். இந்தியத் தாயின் கோயில்களும் மடாலயங்களும் நதிக்கரைகளின் ஓரங் களிலோ அல்லது மலைச்சிகரங்களின் மீதோ காணப்படு கின்றன. பத்தி மார்க்கம் பெருக்கமடைந்து காணப் பட்ட விடத்தும், மதத்தின் சார்பாக, இயற்கைக் காட்சி, தட்ப வெப்ப நிலைமை ஆகியவற்றின் முக்கியத்து வங்களை மறந்து பறிகொடுத்து வாழ முயலவில்லை.

இத்தகைய அழகு வழிந்தோடுமிடத்தில், கௌதமர் கடுமையான யோக சாதனைகளில் ஈடுபட்டுக் கடுந் தவத்தை மேற்கொண்டார். உலர்ந்த கட்டைகளல்லாத ஈரமுள்ள இரு கட்டைகளைத் தேய்த்தபோது எவ்வாறு நெருப்பு உண்டாகாதோ, அவ்வாறே ஐம்புலன்களையும் வெல்லாதவர்கள்—ஆசையை அடக்காதவர்கள்—ஞானப்பேறு பெறமுடியாது என்பதை அவர் உணர்ந் தார். அதுகாரணமாகக் கடும்பட்டினி கிடந்து, மனத்தை ஒரு நிலையில் நிறுத்தும் பலவித யோக சாதனைகளைப் பயின்று, பற்பல தவ விரதங்களையும் தம் தினசரி வாழ்க்கையில் மேற்கொண்டார். உடல் நிலை தளர்வு எய்த எய்த ஆன்மிகச் சத்தியானது பன்மடங்கு பெருக்கமடைந்தது. இக் கடுந்தவக் காலத்தில், பல சமயங்களில் இறப்பின் வாயிலை அவர் எட்டிப் பார்த்த துண்டாயினும், வாழ்க்கைப் புதிரைப் பற்றிய கருத்து சிறிதேனும் அவருக்குப் புலப்படவில்லை. அது காரண மாகக் கடுந்தவத்தால் ஞானப்பேறு அடைய முடியா தென்று கருதி, அதற்குரிய வேறு வழிகளைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர். தாம் இளமையில் ஒரு முறை கண்டறிந்த மாயாவாதத்தின் தன் மையை நினைவுகூர்ந்து, அதை இப்பொழுது மேற் கொண்டு, அந்நிலையில் ஒழுக முயன்ருர். இவ் விறுக்கமான நிலையில், ஆசை புகட்டுபவனுன மாரன் தன் முழுச் சத்தியையும் கௌதமர் மீது ஏவிஞன். அவரை எல்லாவகையான பயத்திற்கும் பற்றுக்கும் ஆளாக்க முயன்ருன்; அவரைப் பலவித உபாயங்களால் தன் வழியில் திருப்ப முயன்ருன். ஆயினும், அவன் முயற்சிகள் யாவும் பயனற்றுப் போயின. இவற்ருல், அவருடைய உள்மனநிலை சலனமுருது ஒரே நிலையில் தொடர்ச்சியுற்று நின்றது என்பதும், மிகுந்த மனப் போராட்டத்துக்குப் பிறகே, அவர் தம்முடைய பழைய கொள்கைகளிலிருந்து விடுபட்டுப் புதிய முறைகளைத்

தழுவ முயன்றார் என்பதும் பெறப்படும். அவர் தமது தவச்சிந்தனையில் தீவிரமாய் மூழ்கி,[1] அறிவுக் கருவூலத்தின் நான்கு படிகளையும் கடந்து, முடிவில் தம்மைத் தாம் அறிந்துகொள்ளும் நிலையினையும், ஏற்றத் தாழ்வில்லாச் சரிசமமான நிலையினையும் பெற்றார். இப் பரந்த பேரண்டங்கள் அனைத்தும் ஒரு நியதிக்குட் பட்டே நடக்கின்றன என்பதையும், அவற்றில் தத்தளிக்கும் சீவராசிகள் பல உள்ளன என்பதையும், அச்சீவராசிகள் இன்பமாகவோ துன்பமாகவோ, பெருமையாகவோ சிறுமையாகவோ, ஒரு வாழ்க்கை நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குத் தொடர்ச்சியாகப் பரிணமித்துக் கொண்டிருக்கின்றன என்பதையும் அவர் கண்டார். இவ்வாறு தியானத்தில் அமர்ந்த ஓர் இரவின் முடிவு நேரத்தில், அவரது அறியாமை அழிக்கப் பட்டது; பேரறிவு முளைத்தெழுந்தது. அப்பொழுது அவர் முழுச் சிந்தனையுடனும், ஆர்வத்துடனும், உறுதி மனப்பான்மையுடனும் உட்கார்ந்திருந்தார். கௌதமர் அப்பொழுதே ‘போதி’ அல்லது பேரறிவு விளங்கப் பெற்று ஞானப் பிழம்புப் புத்தராய்த் தோன்றினார்.[2]

புத்தர் தாம் அறிந்தவற்றைப் போதிப்பதற்குத் தயக்கம் கொண்டிருந்த பொழுது, பிரமதேவர் அவ்வுண்மைகளைப் பிரசாரம் செய்யுமாறு வேண்டினார் என்று பௌத்தக் கதைகள் கூறுகின்றன. இது எதை அறிவிக்

---

1. இலலிதா விஸ்தாரத்தை ஒப்பு நோக்குக :
“இஹாஸனே சுஸ்யது மே சரீரம்
துவகஸ்தி மாம்ஸம் பிரளயம் ஸ யாது
அப்ராப்ய போதிம் பஹுகல்ப துர்லபாம்
நைவாஸநாத் காயம் ஏதத் ஸலிஸ்யதி.”

2. ‘புத்தர்’ என்னும் திருநாமம் கிறிஸ்து அல்லது மெஸ்ஸையா என்பதைப் போன்றதொன்றாம். ஆனல், இப் பெயர் ஒரு நபரைமட்டும் குறிப்பிடுவதன்று. கௌதமர் ஞான ஒளி பெற்றதாகக் கூறப்படும் போத்கயா என்னுமிடத்தில் மகாபோதி என்னும் கோவில் கட்டப்பட்டு விளங்குகின்றது.

கிறதென்ருல், தாம் இனிச் செய்யவேண்டிய காரியம் யாது என்று தம் மனத்திற்குள் சர்ச்சை செய்யும் தருணம், சோக்ரதருக்குப் பைசாசம் உள்ளே அறிவித்த மாதிரி புத்தருக்கும், வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெறும் எண்ணத்திற்கு எதிராக ஓர் அறிவிப்புக் கிடைத்தது. அவர் தமது உபதேசத்தை இவ்வாறு முடிக்கிருர்:

"நித்திய சீவன் அல்லது பவ்விய சீவனுடைய கதவுகள் திறக்கப்பட்டு விட்டன. எவருக்குக் கேட்கக் காதுகள் இருக்கின்றனவோ, அவர் நம்பிக்கையோடு கேட்பாராக!'' என்று கூறித் தம்முடைய கொள்கைகளைப் பரப்பப் புறப்படுகிருர். மிகவும் எளிய போதனைகளைமட்டும் செய்து நின்றுவிடாமல், மக்கள் எவ்வித வாழ்க்கையை மேற்கொண்டு ஒழுகவேண்டும் என்று தாம் அறிவுறுத்திஞரோ, அதே வாழ்க்கையைத் தாமும் மேற்கொண்டு ஒழுகிக் காட்டினர். தமது கடுந்தவத்திலும் இறுதிவரை தம்முடன் இருந்து வந்த சீடர் ஐவரையும் முதன் முதலாக இப்புதிய மதத்தைத் தழுவுமாறு செய்தார். துறவிகள் வாழ அனுமதிக்கப்பட்டதும், விலங்குகள் கொல்லப்படாததுமான மான்கள் வாழும் பூங்காவில்—இப்பொழுது விளங்கும் **சாரநாத்து** என்னுமிடத்தில்—அவர் தமது முதற் கோட்பாட்டைப் பிரசங்கம் செய்தருளினர். சீடர் பலர் அவரிடம் திரண்டு வந்து சேர்ந்தனர். மூன்று மாதங்கள் கழிந்தபின் அவருடன் சுற்றுப் பிரயாணத்தில் முழுவதும் இருந்து வந்த அன்புமிக்க **ஆனந்தர்** என்பவர் உட்பட்ட அறுபது சீடர் இருந்தனர். புத்தர் அச்சீடர்களுக்கு ஒரு நாள் பின்வருமாறு கூறினர்:

"பலருடைய இலாபத்தைக் கருதியும், பலருடைய நன்மையைக் கருதியும், உலகத்தவரது வாழ்வுக்காகக் காட்டும் பரிவு காரணமாகவும், நல்லவருக்காகவும் தேவர் மனிதர் ஆகியோரது இலாபத்துக்காகவும், நன்மைக்காகவும், நீங்கள் இப்பொழுதே வெளிக்கிளம்பிப்

பல இடங்களுக்கும் செல்வீர்களாக! உங்களுள் எந்த இருவரும் ஒரே வழியில் செல்லாதீர். முதலிலே உன்னதமானதும், இடையிலே மகத்தானதும், முடிவிலே மகத்தானதுமாய் விளங்கும் கொள்கையை, முழுத்தன்மையுடனும், சொல் மாறுமலும் பிரசாரம் செய்வீர்களாக! கலப்பற்ற புனிதத் தன்மை வாய்ந்த வாழ்க்கையை ஒவ்வொருவர் மனத்திலும் நிலை நிறுத்துமாறு வற்புறுத்திச் சொல்வீராக!''

நாற்பத்தைந்து ஆண்டுகள் புத்தர் தாமே பலப்பல இடங்களுக்கு நெடுந்தூரம் பிரயாணம் செய்து, பல அபிமானிகளைச் சேர்த்துக் கொண்டார். அந்தணர்களும், தபோதனர்களும், முனிவர்களும், ஒதுக்கப்பட்டோரும், பெருந்தகை அணங்குகளும், பாவ மன்னிப்பைக் கோரும் பாவிகளும் இக்குழுவில் சேர்ந்து கொண்டார்கள். புத்தரது முழு வேலையின் பெரும்பகுதி, தம்முடைய சீடர்களுக்கு அறிவுறுத்துவதிலும், சங்கங்கள் நிறுவுவதிலும் செலவிடப்பட்டது. நமது காலத்தில் அவர் இருப்பரேல், அவர் ஒரு சிறந்த மேதையாகவே கருதப்படுவார்.

புத்தருடைய உபந்நியாசங்களைப் படிக்கும்பொழுது, அவர் காரணங் காட்டி அழைத்துச் செல்லும் வழியானது நம்மைக் கவர்கிறது. அவரது நீதி வழி நேர்மையான கொள்கைகளையே முதற்படியாகக் கொண்டுள்ளது. அது ஒரு பகுத்தறிவுப் பார்வையாகும். மனித இனத்தைப் பற்றியும், அதன் விதியைப் பற்றியும் காணப்படும் தீர்க்க தரிசனத்தை வழி மறிக்கும் ஒட்டடைகள் யாவற்றையும் அவர் அகற்றிச் சுத்தம் செய்ய முயல்கிருர். அறிவு நிறைந்தனவாகக் காணப்படும் தம் சொற்களைக் கேட்போரை—உண்மையில் அறிவற்றவர்களே அவர்கள்—தங்கள் அதிதீவிர பத்தியினுல் வெளிப்படும் சொற்களுக்குத் தகுந்த ஆதாரம் காட்டுமாறு பந்தயம் கூறுகிருர். பலர், கடவுளைப்

பற்றி நேரடியான அறிவைப் பெற்று விட்டதாகப் பறைசாற்றிய காலம் அது. அவர்கள், கடவுள் இருக்கிருரா இல்லையா என்பதோடு, அவர் என்ன நினைக்கிருர், என்ன முடிவுக்கு வருகிருர், என்ன செய்கிருர் என்பனவற்றைப் பற்றியும் உறுதிப்பாட்டுடனே கூறி வந்தார்கள். புத்தர் இம்மாதிரியான ஆன்மிகப் போர்வையில் விளங்கும் பல பெயர்களைக் கண்டித்துமிருக்கிருர். **தேவிஜ்ஜ சுத்தா** என்னும் புத்தகத்தில், பிரமாவைப் பற்றிய அறிவைப் பரப்பும் ஆசிரியர்கள் பிரமாவை நேருக்கு நேராகப் பார்த்ததே இல்லை என்பதை நிலை நாட்டுகிருர். ஒரு மனிதன், தான் காதலிக்கும் அணங்கு எவள் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாமல், அத்தகையாள் மீது காதலைச் செலுத்துவது போலவும், எந்த இடத்தில் அரண்மனை இருக்கவேண்டும் என்பதைக் குறிப்பிட்டுக் கொள்ளாமலே அவ்விடத்திற்கு மாடியமைப்பது போலவும், ஆற்றைக் கடக்கும் ஒருவன் அக்கரையை இக்கரைக்குத் தன்னிடம் வந்து சேருமாறு அழைப்பது போலவும் பலவிதமாக அவர்கள் விளங்குகிருர்கள்.[1] நம்முள் பலருக்கு மதப்பற்றும் அதற்கேற்ற மனமும் இருக்கின்றன. ஆனுல், இப்பற்று எப்பொருளை நோக்கிச் செலுத்தப்பட வேண்டும் என்பது புரியாமல் விழிக்கிருேம் பத்தி நியாயமானதானுல், அது சத்தியத்தின் அஸ்திவாரத் தளத்தில் நிலைநாட்டப்பட வேண்டும். புத்தர் அவர்களுக்குப் **பிரமவிஹாரத்தை**—அதாவது பிரமாவோடு ஒன்று பட்டு வாழும் தத்துவத்தை—விவரித்துக் காட்டுகிருர். எல்லோரிடத்தும் எவ்வித விரோதமும் பொருமையும் அற்ற அன்போடு நிலவும் மனநிலையே அல்லது சிந்தனையின் சித்திரமே அத்தத்துவத்தின் சாரமாகும். ஆயினும், எண் வகை வழியாகச் சொல்லப்படும் **நிருவாணம்** என்னும் நிலையை அது எவ்வாற்ருலும் குறிப்பிடுவதாகாது.

---

1 தீகா 1 : 235.

பல திறப்பட்ட போதனைகளைக் கூறும் பொழுது, அவர் தம் சீடர்களை, தங்களுக்குக் கூறப்படும் போதனைகள் யாவும் நேர்மையானவையாகவும், வாழ்க்கை அனுபவத்தோடு ஒட்டியவையாகவும் இருக்கின்றனவா என்பதை நன்கு ஆராய்ந்தே ஒரு முடிவுக்கு வருமாறும், அவற்றைக் கூறியவரிடம் காண்பிக்கப் படும் மரியாதைக்காக அவற்றைக் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றும் வற்புறுத்தி அறிவுறுத்துகிறார்; இதற்குத் தம்மையும் விதிவிலக்காகக் கருதினாரல்லர். அவர் பின் வருமாறு கூறுகிறார்:

"மற்றவர் கூறுவனவற்றைக் கேட்டு, அவைகளை ஒப்புக் கொள்ளாதீர்கள்; வழிவழி வந்த காரணத்துக் காக—அதாவது பரம்பரையாக வந்தவை என்ற விசேடத்துக்காக—அவைகளை ஒப்புக்கொள்ளாதீர்கள், மற்றும், அவசரம் அவசரமாக, 'அது அப்படித்தான் இருத்தல் வேண்டும்" என்ற ஒரு முடிவுக்கும் வரவேண்டா; நம்முடைய புத்தகங்களில் காணப்படுகின்றன என்ற காரணத்துக்காக எந்தவித கருத்தையும் ஒப்புக் கொள்ள வேண்டா; அல்லது 'இவை நம்மால் ஒப்புக் கொள்ளத் தக்கனவே,' என்ற காரணத்தாலும், அன்றி, 'அவை உங்கள் போதகரது அருள்வாக்கு,' என்ற காரணம் பற்றியும் அவைகளை ஒப்புக்கொள்ள வேண்டா."[1]

---

1. "ஓ! காலாமாரே, உமக்கு ஏற்கெனவே சொல்லி யிருக்கிறேன் !

ஆனால், நீர் அதை ஒப்புக் கொள்ளலாம்; அது பலரது கூற்று என்பதற்காக அன்று; அது வழிவழி வந்த பரம்பரை வழக்கம் என்பதற்காகவன்று; அது அப்படியே ஆதிகாலத்திலும் சொல்லப்பட்டதால் அன்று; அது மதக்கோட்பாட்டில் கூறப்பட்டிருக்கிறது என்பதால் அன்று; வாதம் காரணமாக அன்று; அது செல்லும் தனிப்பட்ட வழிக்காக அன்று; சரியான பார்வையின் நிமித்தம் வந்த காரணத்துக்காக அன்று; தவறான கொள்கைகளைப் பொறுத்துக் கொள்வதற்காக அன்று; ஆனால் உங்களுக்கு நீங்களே, புகழ் பெற்றதும் பழிப் பற்றதும் ஆம் என ஒப்புக்கொண்டபோது, நன்மைக்கும்

மிகவும் உருக்கமான சொற்களால், தமக்கேற்பட்டுள்ள புகழை நினைத்து, அது காரணமாகத் தங்களுடைய எண்ணங்களை ஊறுபடுத்த வேண்டா என்று தம்முடைய சீடர்களைக் கேட்டுக் கொள்கிறார்.

சாரிபுத்தர் :—அம்மாதிரியான நம்பிக்கை எனக்கு உண்டு. ஐயன்மீர், நான் நினைப்பது என்னவெனில், ஞானப்பிரானுராகிய உங்களைவிடச் சிறந்தவரோ, அல்லது அறிவில் மிக்கவரோ இது வரையில் எவரும் இருந்ததே இல்லை.''

---

ஆனந்தத்திற்குமே அது என்பதை அறிந்துகொண்ட பிறகே அதை ஒப்புக் கொள்ளுங்கள்.''

''இதிகோ காலாமா, யம்தம் அவோசும்ஹா
எத்தா தும்ஹே காலாமா மா அனுஸ்ஸவேன
மாபரம்பராய மா இதிகிராய வா மா பிதகஸம்பாதானேன
மா தக்க ஹேது மா நயஹேது ஆகார பரிவித்தக்கேன
மாதித்திநிஜ்ஜானக்கந்தியா மா பவ்யரூபதாய
மா சமனோ நோகருதி, யதா தும்ஹே காலாமா
அத்தனு வா ஞானே யாதா
இமே தம்மா, குசலா, இமே தம்மா
அனவஜ்ஜா இமே தம்மா வினுபஸ்த்தா இமே தம்மா
சமத்தா சமாதின்னு ஹிதாய ஸுகாய ஸம்வத்தந்திதி
அத தும்ஹே காலாமா உபஸம்பஜ்ஜா
விஹரெய்யாதா தி—
இதி யம் தம் உத்தம் இதம் ஏதம் பதிச்ச உத்தம்.''
(அங்குத்தரா—iii—653)

இதையும் ஒப்பு நோக்குக :

'புத்திசாலிகள் பொன்னைக் காய்ச்சியும், வெட்டியும், சாணைக் கல்லில் தீட்டியும் பரிசோதிப்பது போல, நீங்களும், என்னிடத்தில் ஏற்பட்ட மரியாதைக்காக அல்லாமல், என் சொற்களைப் பரிசோதித்த பிறகே ஏற்றுக்கொள்ள வேண்டும்.'

''தாபாஸ் சேதாஸ்சா நிகசாத் ஸ்வர்ணம்
இவ பண்டிதைஹி:
பரீக்ஷ்யா பிக்ஷாவோ கிராஹ்யம் மத்வஸோ
ந து கௌரவாத்.
(ஞானேசார—சமுச்சயம்—31)

"அப்படியானால், சாரிபுத்தரே, நீர் இதுகாறும் ஆதி முதல் விளங்கி வந்த புத்தர் யாவரையும் அறிவீரோ ?"

"அறியேன், ஐயன்மீர் !"

"அது போகட்டும், இனி வரப்போகிற புத்தர்களைப் பற்றியாயினும் உமக்குத் தெரியுமா ?"

"தெரியாது, ஐயன்மீர் !"

"நீர் என்னையாவது அறிந்து என் மனத்தை ஊடுருவப் பார்த்ததுண்டா ?"

"அதுவும் இல்லை, ஐயன்மீர் !"

"இவ்வாறிருக்க சாரிபுத்தரே, உம்முடைய சொற்கள் ஏன் இவ்வளவு பகட்டாகவும், தைரியமாகவும் விளங்குகின்றன ?"

புத்தர் போதனைகளில் மறைப்பு என்பதே இல்லை. உள்மறைவாக உண்மைகளை அறிந்து வைத்திருப்பவர்களை அவர் இழிவாகக் கண்டித்துப் பேசுகிறார். "சீடர்களே! மூன்று பேர்களுக்கு மட்டுமே இரகசியம் உரியது; பரசியமன்று. அம் மூவர் யாவர்? இரகசியம் பெண்களுக்கு உரியது, பரசியமன்று. இரகசியம் பொய்யான கொள்கைகளுக்கு உரியது; பரசியமன்று. இரகசியம் தெய்வஞானத்திற்கு உரியது ; பரசியமன்று...முழுத்துவம் அடைந்த புத்தர் கூறும் கொள்கைகளும் நியாய ஏற்பாடுகளும் எல்லா உலகிலும் பிரகாசிக்கும். அவை இரகசியமல்ல."

புத்தர் தமது மரணத்திற்குச் சற்று முன்னர், தம் சீடரான ஆனந்தரிடம் பின்வருமாறு கூறினார்:

"நான் என்னுடைய கொள்கைளை, வெளிப்படைக் கொள்கைக்கும் இரகசியக் கொள்கைக்கும் வேறுபாடு இல்லாதவாறே பிரசாரம் செய்துள்ளேன். இவற்றின் உண்மைகளை நோக்குமிடத்து, ஆனந்தரே, எப்பொருளை யாவது தமக்கென மறைத்து வைத்திருக்கும் குரு ஒருவரது மூடிய கைகளைப்போல, **ததாகதர்** எதையும் மறைத்துவைக்கவில்லை."[1]

---

1. மகாபரி நிப்பாண சுத்தா, 32.

புத்தர் தம்முடைய சொற்பொழிவுகள் பலவற்றிலும் தம்மைக் கேள்வி கேட்போரிடம் சோக்ரதரது வழிபோலவே நடந்து கொண்டிருக்கிறார்; அவ்வழி வாயிலாகவே, அவர்கள் தங்களுக்குத் தெரியாமலே, தாங்கள் தொடங்கிய நிலையைவிட மாறான நிலையை ஒப்புக்கொள்ளுமாறு ஊக்கியிருக்கிறார்; ஆன்மிக விடுதலை என்னும் சுமையை வேண்டா என்று வெறுத்துத் தம்மை அண்டினவர்களை இலேசில் விடமாட்டார். அதிகாரப் பூர்வமான கட்டளை ஒன்றை ஒப்புக்கொண்டு, அதனால் அவர்கள் உண்மையைத் தேடும் முயற்சியைக் கைவிட்டு விடக்கூடாது; விளக்கொளி போலத் தாங்களே ஒளிவிடக்கூடிய சுதந்தர மனிதர்களாக வேண்டும். அவர்கள் தாங்களே தங்களுக்கும் உதவியாய் இருத்தல் வேண்டும். அவர் மேலும் கூறுகிறார்: "தம்மைத் தமக்கே விளக்காகப் பயன் படுத்திக் கொள்பவரைப்போல நீங்களும் இருப்பீர்களாக! வெளிப் புறத்துச் சரணாகதி எதையும் நீங்கள் நாடவேண்டா. நீங்கள் சரணாகதியை உறுதியுடன் நாடிச் செல்வது போல, என்றும் உண்மையையும் உறுதியாகப் பற்றுங்கள்."[1]

"உன்னத பீடத்தில் எழுந்தருளியிருக்கும் ஆசாரிய புருஷரே நம் மனத்திற்குள் எழுப்பப்படும் ஆன்மிக ஒலி. புத்தருடைய போதனைகளில் 'கட்டளைகள்' எனக் காணப்படுவன இல்லை. அவர் அக்காலத்தில் அருகியிருந்ததும், நம்மிடத்தில் பொதுவாகக் காணக்கூடாததுமான பரந்த மனப்பான்மையுடன், குற்றச்சாட்டினுக்கு மறுப்புக்கூற மறுக்கிறார் மதத்திற்குப் பெரிய பகைமையாக விளங்குவது, 'எம்மதமும் சம்மதமே' என்ற மனப்பான்மை யின்மையே என்பது அவருக்குப் புலப்பட்டது. ஒரு பொழுது அவர் **அம்பலத்திகா** என்னு

*1. "அத்ததீப, அத்தஸரண, அனன்னஸரண; தம்மதீப, தம்மஸரண." (மகாபரி நிப்பாண சுத்தா - 33, 35 ஐயும் பார்க்க.)*

மிடத்திலுள்ள பொதுமக்கள் அறையில் புகுந்து, அங்கு அப்பொழுது கௌதமர், தம்மைப் பத்தி இல்லாதவர் என்று கூறி, தாம் நிலைநாட்டிய துறவறப்பாதையின் சீர்மைப் பாட்டினைக் குற்றஞ்சாட்டிச் சென்ற ஓர் அந்தணனைப் பற்றித் தம் சீடர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டு பின்வருமாறு கூறினர்:

"சகோதரர்களே, மற்றவர்கள் எனக்கெதிராகவோ, எனது மதத்துக்கெதிராகவோ, எனது சற்சங்கத்துக்கு எதிராகவோ பேசினல், நீங்கள் அவர்களைக் கோபிப்பதற்கும், மன நிம்மதி இழப்பதற்கும், அவர்களிடம் அருவருப்புக் கொள்வதற்கும் உரிய ஒரு காரணமும் இல்லையே! அப்படி நீங்கள் செய்வதாயிருந்தால், நீங்கள் உங்களுக்கே ஆன்மிக இழப்பை வருவித்துக் கொள்வதுமன்றி, அவர்கள் சொல்வது நியாயந்தானு, நியாயமற்றதா என்பதைக் கூர்ந்தறிவதும் உங்களால் முடியாத காரியமாகிவிடும்."

பேரறிவு பெருகியுள்ள 2500 ஆண்டுகளுக்குப் பிறகும், புத்தர் கூறியது ஒரு சிறந்த தீர்க்கதரிசனக் கருத்தாகவே மிளிர்கிறது. நாம் ஏற்கெனவே கொண்ட தவருன கருத்தைப் புகழ்வதனுலோ, அல்லது புண்படுத்துவதனுலோ, கோட்பாடுகள் உண்மையானவை என்று கூறுவதற்கில்லை. எத்தகைய நம்பமுடியாத செய்தியாயினும், புத்தர் அவைகளைக் கண்காணிக்கத் தயங்கினுரென்பதோ, பயப்பட்டாரென்பதோ இல்லை. நிதான புத்தியுடன் கருத்துகளை அலசியெடுத்து, மனிதர்களுக்கு நியாயப்பிரமாணத்தின் அத்திவாரத்தின் மீது தங்கள் வாழ்க்கையைப் புதிய கட்டடமாக நிர்மாணிக்க உதவி செய்வதே, காலத்தின் கோளாற்றையும், அதிதீவிரப் போக்கையும் ஒப்பேற்றும் வழியாகும். மற்ற மதங்களைப் பற்றிக் குறைகூறும் வழக்கத்தை அவர் கண்டிப்பாக வெறுத்தார். "அது எப்படி இருக்கிறது என்ருல், ஒருவன் அண்ணுந்து வானத்தை

நோக்கித் துப்பிஞல், அவ்வெச்சில் வானத்தை எவ்வாற்ருலும் பாழ்படுத்தாமல், திரும்பிவந்து துப்பினவனையே அசுத்தப் படுத்துவதுபோல இருக்கிறது,'' என்று அவர் கூறிஞர்.

புத்தர் கோபத்தால் கொதித்தெழுந்தார் என்று கூறத்தக்க ஒரு பொழுதோ அல்லது அன்பற்ற சொல் ஏதேனும் அவர் நாவிலிருந்து புறப்பட்டது என்று சொல்லக்கூடிய ஒரு நிகழ்ச்சியோ நிகழ்ந்தது இல்லை. அவர் தம் இனத்தார் செய்யும் குற்றத்திற்குப் பெரிதும் பொறுமை காட்டி வந்தார்; உலக மக்களைக் கொடியவர்கள் என்பதைவிட அறியாதவர்கள் (அறிவிலிகள்) என்றும், சண்டையிடுபவர்கள் என்பதைவிடச் சமாதானமாக வாழத் தெரியாதவர்கள் என்றும் கருதிஞர்; எதிர்ப்பினை அமைதியாகவும், தைரியமாகவும் வரவேற்ருர். அதஞல், மூளைக் கொதிப்போ கடுங் கோபமோ அவரிடத்தில் காணப்பட்டதில்லை. மரியாதை கொண்ட பண்பாடும், நல்லெண்ணமும்—மருந்துக்காக நிந்தை சிறிது கலந்துகொண்ட நடத்தையுமே—அவரிடத்தில் காணப்பட்டன. ஒரு பொழுது, அவர் தமது யாத்திரையில் சுற்றிவரும்பொழுது, ஓர் இல்லறத்தாரால் மடக்கப்பட்டு, கடினமான அவச்சொற்களால் தூற்றப்பட்டார். புத்தர் அவரை நோக்கி, “அன்பரே! இல்லறத்தார் ஒருவர் பிச்சைக்காரன் ஒருவன் முன்னர் உணவை வைத்தார் என்று பாவித்துக்கொள்ளும். அவன் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டாஞகில், அவ்வுணவு யாருக்குச் சொந்தமாகும்?'' என்று கேட்டார். அதற்கு அவ்வில்லறத்தார், “ஏன், அது இல்லறத்தவருக்குச் சேர வேண்டுவதுதானே?'' என்று விடை பகர்ந்தார். புத்தர், “ஆகையால், நீவிர் கூறிய சுடு சொற்களையும், கெட்ட எண்ணத்தையும் நான் ஏற்க மறுத்தேனுஞல், அவை உம்மையே சார்ந்துவிடும் அல்லவா? ஆஞல், நான் நண்பன் ஒருவனை இழந்துவிட்டகாரணத்தால், இன்னும்

வறியவனுகச் செல்லவேண்டும்.''[1] கட்டாயப்படுத்தி மதமாற்றம் செய்வது புத்தருக்குத் தெரியாதது. நடத்தையேதான் அவரது கொள்கையின் அத்திவாரமாகும்; நம்பிக்கையன்று. பண்பும் பழக்கமும் உண்டாக்க அவர் விரும்பினுர். நம்முடைய மடமையான ஆசைகள் காரணமாக, நாம் மகிழ்ச்சியற்றிருக்கிரேும். நாமே களிப்படைய வேண்டுமானுல், நமக்குள் புதிய ஓர் இதயப்பண்பை உண்டாக்கி, புது நோக்கோடு அதைக் காண வேண்டும். கெடுதல் வாய்ந்த எண்ணங்களை அடக்கி, தூய எண்ணங்களையே எண்ணப் பழக்கப் படுத்திக்கொண்டால், மகிழ்ச்சியில்லாத கெட்ட மனத்தை மகிழ்ச்சி நிறைந்த நல்ல மனமாக்கிவிட லாம். மதமாற்றம் நிகழ்வதைப்பற்றி அவர் சிறிதும் கவலைப்படவில்லை. அந்தணரது புனிதமிக்கயாகத்தீயின் அருகில் உட்கார்ந்து கொண்டே, அவ்வந்தணரது தொழுகையைக் குறை கூருது, தமது கொள்கையைப் பற்றிய பொருள் பதிந்த சொற்பொழிவுகளாற்றுவார். **சிஹா** என்ற சமணர் புத்த மதத்தில் சேர்ந்த பொழுது, அவர்வீட்டுக்கு அடிக்கடி வந்துபோகும் சமணத் துறவி களுக்கு உணவும், பரிசுகளும் முன்பு கொடுத்தது போலவே கொடுத்துவரவேண்டும் என்று அவர் வற் புறுத்தப்பட்டார்;[2] தனியான பெருந்தன்மையுடன் தம் கொள்கைகளை வெளியிட்டு, மற்றதைச் சத்தியத்தின் ஊக்குவிக்கும் சத்திக்கு விட்டுவிட்டார்.

பிக்ஷுகளின் ஒழுங்குமுறைப்பாட்டில் சிற்சில சில்லறைக் கருத்துகளைப் பற்றி முடிவு செய்வதற்கு, நற்குணமும் நன்னடத்தையுமே உருவாய் விளங்கிய அப்பேரருளாளர் அடிக்கடி அழைக்கப்படுவார். ஓர் ஏற்பாட்டை நிலைநாட்ட வேண்டுமென்ருல், உலக மக்களோடு ஒத்துப்போகவும், சமுதாயத் தேவைப் பாட்டிற்கு விட்டுக்கொடுக்கவும் தயாராய் இருத்தல் வேண்டும். சாதாரணமாக, நம் சமூகத்தில் அமைதி

1. மஜ்ஜிமா, 75. 2. மகாவக்கா, vi. 31-II.

நிறைந்த வாழ்க்கையில்லாதவர்களுக்கு அது ஒரு புகலிடமாய் விளங்க வேண்டும். அவர் தாபித்த சங்கத்தின் உள்ளே பல சங்கடங்கள் தோன்றின. **தேவதத்தன்** எனப் படும் கௌதமருக்குச் சிற்றப்பன் மகன், அவருக்குப் பிறகு, அச்சங்கத்திற்குத் தலைமை தாங்க விழைந்தான்; அவருக்கு எதிராகச் சதிகள் பல செய்தான்; ஆனால், அவரால் இறுதியில் மன்னிக்கவும் பட்டான். ஒரு பொழுது, துறவியார் ஒருவர் சீதபேதி காரணமாக அவதிப்பட்டுக் கொண்டு, தம் படுக்கையிலேயே மல மூத்திரங்களைக் கழித்துக்கொண்டிருப்பதைக் கௌதமர் கண்டார்; உடனே அவருடலைச் சுத்தம் செய்து, தம் நண்பர் ஆனந்தரின் உதவியால் அப்பிணியாளரின் படுக்கையை மாற்றித் தம் சீடர்களிடம், "பிக்ஷுகளே, எனக்குப் பணிபுரிய விரும்புபவர் எவராகிலும் இங்கிருந்தால், எனக்குச் செய்வதே போல இப்பிணியாளருக்கும் பணி புரிவீராக!" என்று கூறினர். பௌத்த சங்கத்தில் சாதி வேறுபாடுகள் இல்லை. "பிக்ஷுகளே! கங்கை, யமுனை, அசிரவதி, சரயூ, மாஹீ போன்ற மாபெரு நதிகள் சமுத்திரத்தில் கலக்கும் பொழுது, தங்களுடைய பழைய பெயரையும், கிளைப் பெயரையும் தாங்காமல், எவ்வாறு சமுத்திரம் என்ற ஒரே பெயரால் வழங்கப் படுகின்றனவோ, அதுபோல க்ஷத்திரியர்கள், பிராமணர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் எனப்படும் நான்கு வருணத்தவர்களும் ததாகதர் விவகரித்தருளிய கோட்பாட்டிலும், சங்கத்தின் முறையிலும், இல்லத்திலிருந்து இல்லமற்ற வாழ்க்கையில் எப்பொழுது புகுந்தனரோ, அப்பொழுதே அவர்கள் தங்களுடைய பழமைவாய்ந்த பெயர்களும் பிரிவுகளும் — நாம கோத்திரங்களும் — இல்லையாகி, பிக்ஷுகள் என்ற ஒரே பெயராலேயே வழங்கப்படுவார்கள்."[1]

---

1. உதான: v — 5. முண்டக உபநிஷத்தை ஒப்பு நோக்குக:

புத்தருடைய காலத்தில் பெண்கள் இந்தியாவில் தனித்து நின்று வாழவில்லை; பரிசுத்தமும் புனிதத் தன்மையும் அடைவதற்கு அவர்களும் தகுதியானவர்களே என்று புத்தர் அறை கூவினார். அவர், தம்முடைய வாழ்நாட்களின் இறுதி ஆண்டில், **அம்பபாலீ** என்ற வேசியுடன் விருந்து உட்கொண்டார்; ஆயினும், பெண்களைத் தம் சங்கத்தில் அனுமதிப்பதில் நீண்ட ஆலோசனையும் தயக்கமும் கொண்டார்.

"ஐயன்மீர், பெண்களிடத்தில் நாங்கள் எவ்வாறு நடந்து கொள்வது?"

"ஆனந்தரே, அவர்களைக் கண்ணெடுத்தும் பார்க்காதீர்."

"ஒருக்கால் நாங்கள் பார்த்துவிட்டால் என்ன செய்வது?"

"பேச்சுக்கொடுப்பதைத் தவிருங்கள்."

"அவர்களே எங்களிடம் பேசினால், அப்பொழுது நாங்கள் என்ன செய்வது?"

"கண்களை அகலத் திறந்து விழிப்பாயிருங்கள்."

ஆனந்தர் வீர மனப்பான்மை கொண்டவர். ஆகவே, சங்கத்தில் பெண்களை அனுமதிப்பதற்கான காரணங்களைக் காட்டி வாதாடினார். இறுதியில் தம் ஆசாரிய புருஷரது அரிய இசைவையும் பெற்றுவிட்டார். அது சரியான வழியேயாயினும், அவ்வளவு விரைவாக நடந்தேறும் செயலன்று. "ஆனந்தரே, பெண்கள் இச்சங்கத்தில் சேர நீர் என் இசைவைப் பெற்றிராவிடின், இப்புனிதமான மதம் இன்னும் நெடுங்காலம்

---

" சமுத்திரத்தில் விழும் நதிகள் தங்கள் பெயரும், உருவமும் (நாமரூபம்) இல்லாதனவாகி எவ்வாறு ஒன்றுபடக் கலந்துவிடுகின்றனவோ, அதேபோல, தன் பெயர் உருவம் ஆகியவற்றினின்று விடுபட்டவன், அப்பாலுக்கும் அப்பாலாய் நின்ற தெய்விகப் பிறவியுள் ஒன்றாகக் கலந்துவிடுகிறான் "

(iii. 2.8)

வாழ்ந்திருக்கக்கூடும். இதன் சிறந்த நியாயப் பிரமாணங்கள் இன்னும் ஆயிரம் ஆண்டுகளேனும் நிலைத்திருக்கும். ஆனால், அவர்கள் இச்சங்கத்தில் நுழைய என் இசைவை நீர் பெற்றுவிட்டதனால், இம்மதம் இன்னும் ஐந்நூறு ஆண்டுகளே நிலைத்து நிற்கக் கூடியதாய் இருக்கும்.''[1] ஏனெனில், ஒரு பெண் மதச்சார்புள்ள சங்கத்தில் நுழைய விரும்பினால், அவளுடைய உறவினரின் இசைவு இன்றியமையாதது; ஆனால், மனிதனோ, பிரமாணப்படியாகிலும் தனக்குத்தானே நிர்ணயித்து நடந்தேறும் நிலையில் இருந்தான். ஆனால், சங்கத்தின் விதிகளோ, எவ்வாற்றானும் முடிவுற்று விளங்குவனவல்ல. "நான் மறைந்தபோது, சங்கமானது குறைந்ததும் சிறியதும் ஆன கட்டளைகள் யாவற்றையும் ஒழித்துக் கட்ட விரும்பினால், ஒழித்துக் கட்டட்டும்,'' என்று புத்தர் கூறுகிறார்.

மகாபரி நிப்பாண சுத்தாவில் அவரது மரணம் மிகுந்த பரிவுடனும், சுருக்கத்துடனும் கூறப்பட்டுள்ளது. புத்தர் மரணமடையும் பொழுது, அவருக்கு எண்பது வயது ஆகியிருந்தது. அவர் உடல் பிரயாணத்தாலும், ஏற்பட்ட இன்னல்களாலும் மிகவும் தளர்ந்து காணப்பட்டது. கி. மு. 483-ஆம் ஆண்டில், காசிக்கு 120 மைல் வடகிழக்கில் உள்ள **குசிநகரம்** என்னும் சிற்றூருக்கு அருகில் விளங்கிய கிராமமொன்றில், அவர் தம் ஆவியை நீத்தார். சோக்ரதர், இயேசுநாதர் ஆகிய இவர்களுடைய 'கோர மரணத்துக்கு'ப் புத்தரின் அமைதி நிறைந்த மரணம் - சாந்தமயமான மரணம்- நேரிடையாக ஒப்புநோக்கத் தக்கதே ஆகும். இம்மூவரும் வெவ்வேறு தன்மையில் தத்தம் காலத்திலேயே நிலவியிருந்த வைதிகக் கொள்கையை எதிர்த்தவராவர். உண்மையில் சோக்ரதர்

1. மகாபரி நிப்பாண சுத்தா, v-23.

ஆதென்சின் தேச மதாசாரத்தை எதிர்த்த விதத்தைக் காட்டிலும்,[1] இயேசு யூத குருமார்களது மதத்தை எதிர்த்த விதத்தைக் காட்டிலும், புத்தர், வேதக் கோட்பாடுகளையும், வைதிகச் சடங்குகள் நடைபெறுவதையும் வெகு தீவிரமாகவே எதிர்த்தார்; ஆயினும், தம் எண்பதாம் வயது வரை வாழ்ந்து, பெருவாரியான சீடர்களைச் சேகரித்துக் கொண்டு, தம் வாழ்நாளிலேயே சிறந்த சன்மார்க்க பௌத்த சங்கத்தைத் தாபிதம் செய்து விட்டார். வைதிகரல்லாதார் நடத்தப்பட்ட முறையில் காணப்பட்ட வேறுபாடே இந்திய மதப் பண்பு மாற்றமடைவதற்குரிய காரணமாக இருந்திருக்கலாம்.

---

1. "சோக்ரதர் அடிக்கடி வீட்டிலும், நகரத்துப் பொதுப் பலி பீடங்களிலும் பலி கொடுத்து வருவது காணப்பட்டது," என்று ஸெனபன் கூறுகிறார். (மெமோரா பிலியா 1. 1. 2)

பிளேட்டோ என்பவரது கருத்தின்படி, சோக்ரதரது இறுதிக் காலச் சொற்கள் பின்வருமாறு :

"கிரிட்டோ, ஆஸ்கலேபியஸ் தெய்வத்துக்கு ஒரு சேவல் பலியிட எனக்குப் பிரார்த்தனை உண்டு. அக்கடனைச் செலுத்த நினைவு கொள்வீரா ?" (பீடோ, 118)

# II

# நான்கு பேருண்மைகள்

**பு**த்தர் திருவாய்மலர்ந்தருளிய போதனைகளின் பாடம் நம் வரைக்கும் வந்திருக்கின்றன.[1] அவை புத்தருடைய சொற்களா எனவும், அவருடைய கொள்கைகளா எனவும் ஐயுறுவதற்குத் தகுந்த காரணங்கள் இல்லை. அவைகளின் போதம் மிகவும் எளிமை வாய்ந்ததே யாகும். மத ஆசாரமுள்ள வாழ்க்கையை எவர் ஒருவர் மேற்கொண்டு நடத்த விரும்புகிறாரோ, அவரை இரு அதிதீவிரக் கொள்கைகளான, 'தானே சுக போகங்களில் அழுந்துதல்', 'தானே பலியாதல்', என்பனவற்றிற்கு இடையேயுள்ள நடுத்தரமான பாதையைக் கடைப்பிடிக்குமாறு கூறுகிறார். பிறகு புத்தர், துன்பம், துன்பத்தின் காரணம், துன்பம் துடைத்தல்,

---

1. பாலி மொழியில் காணப்படும் அவருடைய சரிதையை ஆராய்ந்தால், காசியில் புத்தர் அருளிய நான்கு பேருண்மைகளும், எண்வகை மார்க்கங்களும், மகாபரி நிப்பாண சுத்தாவில் காணப்படும் சொற்பொழிவுகள் சிலவும், தம்மபதம், உதானு, இதிவுத்தகா என்பவற்றின் 'புத்தரின் திருவாக்கு' என்று நமக்குக் கிடைத்திருக்கும் சில பாடல்களும், சுருக்கமான சொற்களும், புத்தர் அருளியனவே என்று தெளியப்படும். இவை ஏறக்குறைய அதே உருவத்தில் நேப்பாள சம்ஸ்கிருத நூல்களிலும், திபெத்து, சீனம் ஆகிய பிரதேச மொழிகளின் மொழி பெயர்ப்புகளிலும் காணப்படும்.

துன்பம் துடைப்பதற்குரிய வழி ஆகிய நான்கு உண்மைகளைப் பற்றியும் விவகரிக்கிறார்.

1. "பிறப்பு துன்பமானதே. வயோதிகமடைவது துன்பமானதே. நோய் துன்பமானதே. மரணம் துன்பமானதே. நாம் வெறுக்கும் பொருள்களோடு உறவு கொள்வதும், அவைகளிலிருந்து பிரிந்து செல்வதும் துன்பமானவைகளே. ஒருவர் தமக்குத் தேவையான பொருளைப் பெறாதபோது, அதுவும் துன்பமானதே." பிறப்பும், இறப்பும், துன்பமும், இன்பமும் உலகில் காணப்படும் பொதுச் செயல்களேயாகும். அவை இயைவு இல்லாமையையும், வேற்றுமைப்பாட்டையும் தெரிவிக்கின்றன. ஆன்மிக நோய் எனவிளங்கும் மனித துக்கங்களின் வேர்ப் பகுதியில் போராட்டம் மிகுந்துள்ளது. அது நிலையற்ற வாழ்க்கையின் ஊடே காணப்படும் பொதுத் தன்மையாகும். ஆனால், அது நிலைத்து நிற்கக் கூடியதன்று ; மாறுதலடையக்கூடியதே. அதிலிருந்து விடுதலை பெறவும் கூடும்; விடுதலை பெற்றும் ஆக வேண்டும்.

2. "ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காரணம் உண்டு. அது ஏதாவது ஒரு பலனை விளைவிக்கின்றது. இவ்வெளிய உண்மையே இப்பேரண்டத்தையும், மனிதரையும், தேவரையும், ஆகாயத்தையும், பூமியையும் ஆள்கின்றது. கருத்தைக் கவரும் பற்பல உலகங்களின் தொடர்ச்சியும், முடிவேயில்லாது மாறிவரும் வளர்ச்சியும் அழிவும் கொண்ட பிணைப்போடு எல்லையில்லாத இடைவெளியில் பரந்து நிற்கும் இப்பேரண்டத்துக்கேயல்லாது, புனித வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளுக்கும், வரலாற்றுடன் இணைந்த செயல்களுக்கும் அது பொருந்தக் கூடியதே. துன்பம் உண்டாவதற்கான முக்கிய காரணத்தைத் தீர ஆராய்ந்து கண்டுபிடித்து, அதை நீக்கிவிட்டால், துன்பம் தானே மறைந்துவிடும். அதற்குக் காரணம் **தன்ஹா** (சம்ஸ்கிருத திருஸ்ண)

என்று வழங்கப்படும் 'வாழ வேண்டும்' என்ற பற்றுக் கோடேயாகும்.''[1]

இவ்வுண்மை பின்பு பன்னிரண்டு பிணையல் கொண்ட காரணச் சங்கிலிக் கோவையில் விரிவாக விவகரிக்கப்படுகிறது.[2] அஞ்ஞானமும், பற்றும், ஒரே கோட்பாட்டின் இரு பக்கங்களான அனுமானமும், செயற்கை முறையும் போன்று பிணைக்கப்பட்டிருக்கின்றன. அஞ்ஞானத்தின் பிறப்பே வாழ்க்கைப் போராட்டத்திற்கு அறிகுறியாய் அமைந்துவிடுகிறது; அதுவே வாழ்க்கையின் பிணைப்பினையும் தகர்த்தெறிந்து விடுகிறது. அவ்வறியாமை, பெரிதாகக் காட்டப்படும் தன் உணர்ச்சியுள்ளும், தன்னைப் பிரித்துக்கொண்ட தன்மையிலும், உலக நல்லியக்கத்துக்கு எதிரான போராட்டத்திலும் தன்னைத்தான் காட்டிக்கொள்கிறது. பற்றும் ஆசையும் கிளம்பி, ஆன்மாவை அலைக்கழித்து, அதைச் சங்கிலியால் பிணைத்துத் தப்பிச் செல்ல முடியாத அடிமைத் தளையில் இறுதியாகக் கொண்டுவந்துவிடுகிறது. அறியாமை (அஞ்ஞானம்) பகுத்தறிவினாலும்

---

1. பிருஹதாரணியக உபநிஷத்தை ஒப்பு நோக்குக :
"மனிதன் பல வித ஆசைகளால் ஆக்கப்பட்டிருக்கிறான். அவன் ஆசை எவ்வாறிருக்கிறதோ, அதைப் போலவே அவன் எண்ணமும், அவ்வெண்ணத்தைப் போலவே அவன் செயலும் அமையும். அவன் என்ன என்ன செயல்களைச் செய்கிறானோ, அவற்றிற்குரிய பலனை அவன் அனுபவித்தே தீருவான்." (iv-4)

2. அறியாமையை விணவியவிடத்து ஏற்படுவது மனச்சார்பு; மனச்சார்பு காரணமாக அறிவும்; அறிவு காரணமாகப் பெயரும், உருவமும் (நாமரூபங்கள்) ; பெயரும் உருவமும் காரணமாகத் தொடர்பும் ; தொடர்பு காரணமாக நுகர்ச்சியும்; நுகர்ச்சி காரணமாக இச்சையும்; இச்சை காரணமாகப் பற்றும்; பற்று காரணமாக உண்டாதலும்; உண்டாதல் காரணமாகப் பிறப்பும்; பிறப்புக் காரணமாக வயோதிகம், இறப்பு, துன்பம், விசனம், கட்டம், துக்கம், மெலிவு, சோர்வு முதலியனவும் ஏற்படும்.

இச் சங்கிலிக் கோவையின் வரிசைக்கிரமம் மாறிப் பற்பல பாடபேதங்களாகக் காணப்படுகின்றன.

(புத்தி), ஆசை கட்டுத் திட்டம் கொண்ட வாழ்க்கை வாழ்வதாலும் அழிக்கப்பட்டு விடுகின்றன.[1]

'வெறுப்பினின்று விடுதலை' என்பது சார்புள்ள சொற்ருெடரே; புத்தர்கூட அதினின்று அறவே விலகினவர் என்று அறுதியிட்டுக் கூற இயலாது. நடந்தேறுவன கர்மமும், மறு பிறப்புமே என்பதை அவர் ஒப்புக்கொள்கின்ருர். ஒருவன் தன் செயலுக்குத் தகுந்தாற்போல ஆகின்ருன். நாம் நம்முடைய நல்லொழுக்கம் கொண்ட அறவுலகத்தை எந்நேரமும் ஆக்கிக் கொண்டிருக்கிருேம்; அது நல்லதற்கோ, தீயதற்கோ தெரியாது. ஒவ்வோர் எண்ணமும், உணர்ச்சியும், வெறுப்பும் நம்முடைய வளர்ச்சியில் ஏதோ ஒன்றைக் குறிப்பிடுவதற்குக் காரணமாகும். மனித இனம் எப்பொழுதும் நாகரிகத்தையே நாடி நிற்கின்றது. நினைக்க முடியாத மிக மிகப் பழைய காலத்து எண்ணங்களும் செயல்களுமே இவ்வுலகத்தின் உள்ளுறையை உண்டாக்கியிருக்கின்றன. அளவிட்டுக் கூற முடியாத, எல்லையற்ற தர்மக் கோட்

---

1. ஒப்பு நோக்குக : "மனிதனுக்கு இருக்கிற ஆசைகள் (காமங்கள்) முடிவு பெற்றவிடத்து (இல்லாது நின்ற விடத்து), உடன் இறப்பவன் இறவாதவனுகி, இங்கே, இந்த உலகிலேயே பிரமத்தை அடைகின்ருன்." (கடோபநிஷத்து—iv-10)

ஒப்பு நோக்குக : தம்மபதம் கூறுகிறது: "ஆசையைப் போன்ற தீ இல்லை; துவேஷத்தைப் போன்ற பூதம் இல்லை. மடமையைப் போன்ற தூண்டில் இல்லை. வெஃகாமை போன்ற வெள்ளம் இல்லை." (251)

ஒப்பு நோக்குக : மகாபாரதம்: "காமபந்தனம் எவேதம் நான்யத் அஸ்தீக பந்தனம்." மற்றும் பகவத் கீதை, ii—70—71 பார்க்க.

மற்றும், இதிவுத்தகா கூறுகிறது: "இவ்வுலகிலோ அல்லது அடுத்த உலகிலோ எந்த விதமான துன்பங்கள் (பொல்லாத விதி) இருப்பினும், அவை யாவும் அறியாமை (அவிஜ்ஜாமூலகா) ஆகிய மூலத்திலே வேர் ஊன்றியிருக்கின்றன; அவை பற்றுகளாலும், ஆசைகளாலும் கிளர்ந்தெழுகின்றன."

பாட்டின் ஆட்சியின் கீழ் வாழ்க்கை மலர்வதைப் புத்தர் காண்கிறார். நாம் எப்பொழுதும் நம்முடைய செயல்களி னால் ஏற்படும் பலனினின்று தப்ப முடியாது. நோயும், நட்டமும், தோல்வியும், ஏமாற்றமும், பற்றுதலினால் ஏற்படும் புண்களும், காரியசித்தி முற்றுப் பெறாத நிலை களும் ஆகிய துன்பமயமான ஒவ்வொன்றும் அறக் கோட்பாட்டைத் தெரிவித்தும், 'நீதி விளைவு' என்னும் நியதியினால் நிர்ணயிக்கப்பட்டும் இருக்கின்றது என்பது குறிக்கப்பட்டுள்ளது. சுயநலத்துக்கேற்ப ஊறுபாடு களும், சுயநலமற்ற வாழ்க்கைக்கேற்ப உள் மன நிறைவு என்ற பரிசும், **இசெய்க்கல்** கூறிய ஆர்வ மிகுந்த சொற்களில், 'நம்முடைய செயல்களுக்குகந்த ஈடுபாடு' என்ற முறையில், நாம் என்ன செய்தோமோ, அதை உணர்ந்துகொள்ளும் தன்மையும் — ஆகிய இவைகளின் உருவமே புத்த பிரானுருடைய ஆழ்ந்த கொள்கைகளாகும். புத்தர் கூறுகிறார் :

"என் செயலாற்றல் என்னுடைய சொந்தமானதே ; என் செயலாற்றல் என்னுடைய பிதுரார்ஜிதமே ; என் செயலாற்றல் என்னைக் கருத் தாங்கும் கர்ப்பாசயமே ; என் செயலாற்றல் நான் சேர்ந்த சாதியினுடையதே ; என் செயலாற்றல் என்னுடைய புகலிடமே.''

ஆட்சிமுறைச் சட்டத்துக்கு இரட்சிக்கும் தன்மை யும் உண்டு ; அத்தன்மை, 'கொடுமையான எல்லையற்ற நரகம்' என்பதன் கோரக் காட்சிகளை அறவே நீக்கிவிடு கின்றது. மீள முடியாது என்றெண்ணப்படும் எந்த இடமும் நிலையாக நிலைக்க முடியாது. சுவர்க்கமும் நரகமும் கூட முடிவுள்ளதும் நிலையற்றதுமான ஒழுங்கு முறைச் சட்டத்துக்கு உட்பட்டிருக்கின்றன. அவை எவ்வளவு கடுமை வாய்ந்தும் நீடித்தும் இருப்பி னும், அவற்றுக்கு முடிவு என்பது ஒன்று உண்டு; அவை எப்பொழுது எவ்வாறு முடிவடைகின்றன என்பது நம்மைப் பொறுத்தே யிருக்கிறது. இனிமை பயப்பதாக

மாற்றப்பட்ட ஒவ்வோர் உணர்ச்சியும், வெல்லப் பட்ட ஒவ்வோர் ஆபாசக் குறிக்கோளும், எதிர்த்து வெற்றி பெற்ற ஒவ்வோர் அடக்கக் குறைபாடும் இம் முயற்சியில் சேர்ந்தனவே. இதனுல், 'கொடுத்து வைத்ததுதான் நமக்குக் கிடைக்கும் ; அதுவும் நம் மீது நாமே ஏற்றிட்டுக்கொண்டதாகும்' என்னும் கருத் தின்மேல் நிலைநாட்டப்பட்ட ஏழ்மைத்தனத்தையோ, அல்லது துன்பத்தையோ பற்றி நாம் கவலை கொள்ள வேண்டா என்று நினைப்பது கூடாது. அவ்வாறு எவனுகிலும் நினைத்தாலும், உயிர் வாழும் எல்லா சீவ ராசிகளின் சகோதரத்துவத்துக்கும் தன்னுடைய இயற்கையானது ஒரு தடைப் பொருளாகிவிட்டாலும், அவன் இரட்சிப்பு மன்னிப்பு ஆகியவற்றிற்குரிய பிரதி நிதியாய் இருந்துவர மறுத்துவிட்டபடியால், நியாயம் அல்லது சட்டம் அவனைக் கடுமையாகவே தண்டிக்கும். நியதி நடந்தேறுவதற்குரிய காரணம், தன் தேவதை ஒன்றன் இடை நுழைவால் நிகழ்வது என்பதன்று. தெய்வ அநீதி என்பதன் அச்சசந்தரு நிழலும், தானே வலையில் மாட்டிக் கொள்ளுதல் என்பதன் அச்சந்தரு உருவமும் அறவே விலக்கப்பட்டு விட்டன.

மானிட உடலானது பலவித கூட்டுப் பொருள் களின் உருவமே (ரூபம்); அதற்குரிய சஞ்சரிக்கும் சத்தியோடும், நுகரும் ஐம்புலச் சத்தியோடும், உணரும் சத்தியோடும் (வேதனு), இந்திரிய ஞான சத்தியோடும் (சம்ஞானு), பார்த்தல், கேட்டல், நுகர்தல், சுவைத்தல், தீண்டல் ஆகிய பலவேறு சத்திகளோடும் மனிதன் வெளியுலகோடு வாணிபத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டிருக்கிருன் ; பிறவிக் குணங்களாகிய (சம்ஸ் காரங்கள்) முற்பிறவியிலிருந்து ஏற்பட்ட காரியத்தில் விருப்பும், நிறைவேற்றும் சத்தியும், நன்மைக்கும் தீமைக்கும் முற்பிறவியிலிருந்து வந்த பண்புகளும், அவைகளிலிருந்து தொகுக்கப்பட்ட பிறவித் தொடக்கத்

திற்குரிய குணங்களும் ஆகிய இச்சத்திகளெல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டதே எண்ணம் (விஞ்ஞானம்) ஆகும். மனத்தில் நிலைபெற்று எழும் கருத்துருவம் முதல், உருவமற்ற தியானத்தில் முடிவடையும் எல்லா மனவெழுச்சிகளும் இதில் அடங்கும். ஒரு மனிதனது உட்புற வாழ்க்கையானது எண்ணங்கள், பற்றுகள், இச்சைகள், எழுச்சிகள் ஆகியவற்றின் தொடர்ச்சியே யாகும். இவை யாவும் தங்குவதற்கு உறைவிடமாய் விளங்கிய உடலானது இறப்பால் சடலமாக வீழ்ந்த விடத்து, உள்ளே மறைந்து நிற்கும் உணர்ச்சி உருவான ஆவியானது, ஒரு புதிய உடலை நாடி, அதில் பாய்ந்து, முன் இறந்தவனுடைய நடத்தை யினுல் ஏற்பட்ட பலன்களால், துன்பப்படவோ அல்லது சுகப்படவோ, ஒரு தொடர்பை—உடலோடு தொடர்பில்லாவிடினும்—மனோதத்துவ வழியில் உண் டாக்கிக் கொள்கின்றது. உடலில்லாத உயிரோடு தொடர்பு கொண்டிருக்கும் தாதுக்களான ஆசா பாசங்கள் யாவும் மாறிக்கொண்டே யிருக்கின்றன. பிற விக்குக் காரணமான தாதுக்களாகிய பற்றும் ஆசையும் ஒழிந்தவிடத்து, அதோடு தொடர்பு கொண்ட உயிரும் தன் தளையினின்று நீங்கப்பெற்றுப் பிறப்பும் இல்லாத தாகச் செய்துகொள்ளும். என்றும் நிலைத்து நிற்கும் ஆன்மா என்பதொன்றில்லாது போனுல், உடல் செய்யும் செய்கையின் பயன்கள் யாவும் யாரைச் சாரும்? இக் கேள்விக்குப் புத்தர் விடை கூறுகிருர்: "ஆசையின் உரிமைக்கு அடங்கிய ஒருவன் தன் எஜமானன் எண் ணத்திற்கு அப்பாற் செல்லச் சிறிதேனும் நினைப் பானு?"[1] முதன் முதல் தோன்றிய பாடங்களில் இந்தச் சங்கடத்துக்கு விளக்கம் கொடுக்கப்படவில்லை. குணு குணங்கள் கொண்ட மனநிலை மட்டும் தொடர்ச்சி பெற

---

1. சம்யுத்தா, iii. 103.

றுள்ளது என்பது நன்கு வலியுறுத்தப்பட்டிருக்கிறது.[1] ஆதலால். ஆன்மாவின் தன்மையையும், அதன் மறு பிறப்புகளையும் நன்கு உணர்ந்த ஒருவன், மறு பிறப்புக்குரிய சிறந்த காரணங்கள் குறிப்பிட்ட ஒரு வாழ்க்கையில் மிகப் பெருமிதமாகத் தோன்றினாலும், அவ்வொரு வாழ்க்கையை மட்டும் சிறந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதமாட்டான்.

3. அஞ்ஞானத்தை அறவே அகற்றுவதற்குக் கடுமையான அறவாழ்வு அவசியமானதே. சீலமும், பிரஞ்ஞையும் அதாவது நற்குணமும், ஊடுருவப் பார்க்கும் அகக்கண்ணும், ஒன்றினொன்று பிரிக்க முடியாமல் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றன. புத்தர் நியாயங்களையோ, வழிபாடுகளையோ, நியதிகளையோ, சடங்குகளையோ பற்றிக் கூறவில்லை. மகிழ்ச்சியுடன் கூடிய வாழும் வழி எதுவென்றால், நற்காரியங்களிலேயே ஊக்குவிக்கும் நல்ல இதயமும், நல்ல மனமும் கொண்டிருப்பதே. மனத்திலும், செயலிலும் காணப்படும் சாதாரண நற்பண்பே அவருடைய மதத்துக்கு அடிப்படையாகும். புறச்சக்தி அல்லது தெய்விகம் என்பதன் எல்லாவிதத் தொடர்பினின்றும் வாழ்க்கையைப் பிரித்தெடுத்து, ஒரு மனிதன் தனக்கு நன்மையோ தீமையோ ஏற்படுத்திக்கொள்வது தன்னைப் பொறுத்தே இருக்கிறது என்று அறிவுறுத்து

---

1. மகாநிதான சுத்தாவில், 'தாயின் கருவிலிருந்து உலகில் மறுபிறப்பெடுத்து வெளிவருவதன் முன்னர், உணர்வதற்குக் காரணமாகிய தன்னறிவு (ஞானம்) புகுத்தப்படுகிறது,' என்ற குறிப்புக் காணப்படுகிறது. அது காரணமாக, பழம் பிறப்புக்கும் புதிய பிறப்புக்கும் உள்ள தன்னறிவுத் தொடர்ச்சியை யறியலாம். ஆனால், விரிவுரையாளர்கள், 'உயிர் எந்த உருவத்தில் உடலோடு ஐக்கியமடைகிறது?' என்பதைப் பற்றிக் கருத்து வேற்றுமை கொள்கிறார்கள் உதாரணமாக, புத்தகோசர் என்பவர், அவ்வுயிர், அதாவது தன்னறிவுத் தன்மை (உணர்வு நிலை) உடலோடு தொடர்பு கொள்கிறது என்பதை மறுக்கிறார்.

கிறார். அவர் அடிக்கடி பின்வருமாறு கூறுவதைக் கேட்கிறோம்: "வம்மின் சீடர்காள். துன்பம் அறவே நீங்குவதற்குச் சன்மார்க்கப் புனித வாழ்க்கையை மேற் கொள்ளுங்கள்." பண்பு பெற்ற எண்வகை மார்க்கங் களும், பூரணத்துவம் வாய்ந்த ஏணிப் படிகளுக்கு ஒப் பாகும். அவ்வேணியின் முதற்படி நான்கு பேருண்மை களைப் பற்றிய சரியான அறிவாகும்; நேர்முறையான கொள்கையாகும். இதை, உபநிஷத்துகள் கூறும் ஞானம் என்பதனோடோ, அல்லது ஆஸ்திகர்களின் நம்பிக்கை யோடோ தொடர்பு படுத்திச் சங்கடப்படுதல் கூடாது. ஆனால், இவ்வுண்மைகள் புத்திபூர்வமாக மட்டும் நிலவும் வரை, இவைகளுக்கு உயிர்ப்பு இராது. இவைகளைத் தனது கூறுபாட்டிலிருந்தே ஒவ்வொருவனும் கண்டு பிடித்து நிரூபிக்க வேண்டும். இவற்றின் முதற்படியே அறிவு எழுச்சியாகும். சத்தியத்தையும், குறிக்கோளை யும் அறவே மறந்து வாழும் வழக்கத்தைக் கைவிட வேண்டும் என்று சொல்லும் சொற்களே அம்முதற்படி அளிக்கும் கட்டளையாகும். அது எண்ண மாற்ற மட்டுமன்று; ஆன்மாவின் முழுத்தன்மையையும் மாற் றக்கூடிய இயற்கையின் உண்மையான சீர்படுத்தும் தன்மையேயாகும். துறவு, ஈகை, அன்பு ஆகிய இவை களிடம் இழுத்துச் செல்லும் விருப்பத்துக்கு ஒரு வழி காட்டியாகும்.[1] அது சுகபோகங்களை வெறுக்க உறுதி

1. தீகா 1. 124. மஜ்ஜிமா - 41இல், புத்தர் கூறுகிறார்: "ஒரு நல்ல மனிதனது அதிதீவிர விருப்பமானது எப்பொழுது காரியாமிசத்தில் இயங்கும் என்றால், நீதி நூல்கள் கூறும் குற் றங்களை அறவே ஒழித்த பிறகும், தன்னுடைய விவேகானுகூல புத்தி மூலமாக, இவ்வுலகத்திலேயே ஆன்ம ஞானம் பெற்று, அதிலேயே இலயித்து, குற்றமில்லாத புத்தியிலும் செயலிலும் தன் மனத்தைச் செலுத்தி நின்றால், அப்பொழுது அவன் விரும்பினால், அவ்விருப்பம் ஈடேறப்பெறுவான்."

ஒப்பு நோக்குக: ஜேம்ஸ் v—16: "அறவழியில் நடப்பவ னது தளைக்குந்தன்மை, அது செயலாற்றும் முறையிலேயே

கொள்ளுதலும், மற்றவரிடத்துப் பொருமை கொள்ளா திருத்தலும், தீங்கு புரியாதிருத்தலுமாம். சரியான முறையில் பேசும் நற்பேச்சானது, பொய் சொல்லு தல், திட்டுதல், புறங்கூறுதல், கொடுஞ்சொற் கூறுதல், வீண் பேச்சுக் பேசுதல் ஆகிய பல வற்றினின்றும் நம்மைத் தடுத்து விடுகிறது. சரியான, முறையான, நடவடிக்கை என்பது, பிற உயிரை வௌவாமல் இருத்தலும், அல்லது நாம் கொடுக்காத தொன்றைத் திரும்பப் பெறுவதைத் தவிர்த்தலும், அல்லது வேறு காரணங்களால் மிகுதியாகப் பெறு வதைத் தவிர்த்தலுமாகும். ஆயுத வியாபாரி, அடிமை வியாபாரி, கசாப்புத் தொழிலாளர், விஷ வியாபாரி ஆகியவர்களுக்கே உரிமையான பாதகங்களை—பெரி யோர்கள் கூடாதென ஒதுக்கியிருக்கும் பாதகங்களை— நடைமுறையில் கொள்ளாதிருத்தலே நேர் முறையான வாழ்க்கையாகும் ; அதுவே வாழ்வாங்கு வாழ்தல். புத்தர் தம்முடைய பௌத்த பிக்ஷுகளை எக்காரணங் கொண்டும் சேனையில் வீரராகச் சேரக்கூடாது என்று தடுத்துவிட்டார். எண்வகை மார்க்கமானது நீதி நூற்களஞ்சியச் சட்டத்திற்கும் மேலானதாகும். அது வாழ்க்கையின் பாதையே யாகும். கொடுமை வாய்ந்த அரசாங்கங்கள் கிளம்பாதவாறு அவற்றை அடக்குத லும், ஏற்கெனவே அவ்வாறு கிளம்பியவற்றைக் களைந் தெறிதலும், நல்ல அரசாங்கங்களைத் தோற்றுவிக்க ஊக்குவித்தலும், அவ்வாறு தோன்றின நல்ல அரசாங் கங்களைச் செப்பனிட்டுச் சிறந்தவை ஆக்கலும் ஆகிய இவை நேர்மையான முயற்சியாலே உருவாக்கப்பட வேண்டும். இது மனப் பண்பாட்டின் தொடக்க நிலையா

---

பெரும்பாலும் அமைந்திருக்கிறது.'' இது செய்துகொண்ட மனுவிற்குக் கடவுள் அளிக்கும் பதிலன்று. ஆனல், இது பிரபஞ்ச இயற்கை நியதிக்கு ஏற்பட்ட தொடக்க புத்த மதத் தின் வியாக்கியானமாகும்.

கும். மனித மனத்தின் உட்புறம் அல்லது கீழுலகத்தை யறியவும், கெட்ட ஆசைகளேயும் இச்சைகளேயும் வேரொடு அறுத்துத் தள்ளுவதற்குரிய வழிகளே ஆராயவும், சுய நினைவுக்கும் அதாவது சூக்கும புத்திக்கும் மற்றப் பாகமான வெளி உடல் ஆகியவற்றிற்குமுள்ள நிலேயைச் சமன் செய்து வைக்கவும், தன்னைத்தானே தெரிந்து தெளிதல் என்னும் பழக்கமானது பயன்படும் சாதனமாகும். மற்றவர்களிடத்து மட்டும் மனிதன் 'பொய்யும் புனைசுருட்டும்' வாய்ந்தவன் அல்லன்; தன்னிடத்தும் அத்தகைய நிலேயையே ஏற்படுத்திக் கொள்கிருன். நாம் தூய்மையானதும், சுயநலமற்றது மான குறிக்கோளிலிருந்து நம் எண்ணங்களே ஏற்படுத்திக்கொள்வதில்லே; ஆனால், வாழ்க்கையில் ஏற்படும் ஏதாகிலும் ஒரு தோல்வி காரணமாகவோ அல்லது ஒரு வித வெறுப்புக் காரணமாகவோதான் நாம் அவ்வாறு செய்கிறோம். நம் பெருமை ஊறுபடுத்தப்பட்டதென்பதாலோ, அல்லது நம் காதல் சரிவர முற்றுப்பெறவில்லே என்பதாலோ, அல்லது நமக்குச் சொல்லிக்கொள்ள முடியாததும், வெட்கப்படக் கூடியதுமான உறுப்புக் கோளாறு ஏதாகிலும் இருப்பதாலோ, நாம் கடுகடுத்த சிந்தையும் கொடுமையுமுடையவர்களாகி விடுகிறோம். மனிதனைப் பற்றிய சிறப்புவாய்ந்த செய்தி யாதெனில், அடிக்கடி அவன் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்கின்றான் என்பதே. நம்மில் அநேகமாக யாவருமே, ஏறக்குறைய எந்நேரமும் யந்திரங்களாகவே இருக்கிறோம். நம்முடைய எண்ணங்களும் உணர்ச்சிகளும் வழக்கப்படுத்தப்பட்ட ஒரு திட்டத்தைத் தொடர்ந்து இயங்குகின்றன. நாம் ஆன்மிகப் பரிசோதனையால், அர்த்தமற்ற இயந்திரம் போன்ற செயல்களின் காரணத்தைத் தகர்த்தெறிந்து, மனத்தின் வழக்கப் பாகுபாடுகளில் ஊன்றி நிற்கும் நிலேயை அழிக்க முயன்று, ஆன்மாவை அறிந்து

கொள்கிறோம். சோம்பலும், மந்த புத்தியும், கெட்ட ஆசைகளைப் போன்று ஆன்மிக முன்னேற்றத்துக்குத் தீமை விளைப்பனவாகும். உடலையும், ஆன்மாவையும் ஒரு வழியாகக் கவனித்துக் கொள்வதே சரியான மன நிலை எனப்படும். அது எதுவென்றால், ஆன்மாவைத் தன்வயமாக்கிக் கொள்ளுதலும், மிக்க கவனமாயிருத்தலும், தடுமாற்றத்தையும் வெறுப்பையும் வெல்லுதலுமாகும். அதாவது, இயந்திர பூர்வமாகவோ அல்லது அவசிய மில்லாமலோ எவற்றையும் செய்ய இசைவு தராத சுய ஞானத்தின் வழியாகத் தன்னைத்தான் வெல்லுதலேயாகும்.

பொருள்களை நித்தியத்துவத்தின் தன்மையிலே காண வேண்டும். சரியான சிந்தனை யென்பது நான்கு சிந்தனைகளின் உருவமாகப் பரிணமிக்கிறது. புத்தருடைய நல்வாழ்வுக்குரிய கட்டளைகள் சுருசுருப்புத் தன்மை இல்லாத நிலைக்குக் கொணர்ந்து, எதையும் வேண்டாதவாறும், எதையும் செய்யாதவாறும் ஆக்கி விடுகின்றன என்ற புதுமையான எண்ணம் நிலவி வருகிறது. இலாப மூட்டும் உண்மையை நம்மிடத்தில் வெல்லுவதற்குரிய தீவிர உறுதியும், அத்தகைய உறுதிக்குத் தேவையான முயற்சியும், தர்ம வாழ்க்கையைக் கடைப்பிடிப்பதில் செலவிடப்பட்ட வாழ் நாட்களும், உன்னதத்துக்குச் சற்றே குறைவான நிலையை யடையத் தளர்வே காண முடியாத அடிக்கடி தோன்றும் எண்ணத்தின் உறுதிப்பாடும் ஆகிய இவை யாவும், மனித எண்ணமானது வீரச் செயல் புரியக் கூடியதாயும், சாகசங்கள் அடையக் கூடியதாயும் உள்ளது என்ற ஐயமிலாத் தன்மையைச் சார்ந்தே நிற்கின்றன. **'சிந்தனை'** அல்லது **'தியானம்'** என்பது எண்ணத்தை நிலை நிறுத்துதலாகிய மனத்தின் ஒரு வகை முயற்சியாகும். அது கனவுத் தோற்றமன்று ; ஆனால், மிகவும் முனைந்து மனத்தை ஒருமுகப்படுத்திவைக்கும்

செயலாகும் ; அதில் எண்ணமும் மனமும் ஒன்ருகக் கலந்துவிடுகின்றன. புத்தருடைய போதனைகளின்படி, ஒவ்வொரு மனிதனும் தனது இறுதிக் காலத்தில் முத்திப்பேற்றை — தனிமையாகவே, தன் மன வலிமையைக் கொண்டே — அடைய வேண்டும் என்பதும், அவ்வாறு பெரிய காரியமொன்றில் நுழைய இவ்வுலகத்தில் காணப்படும் சகல மன உறுதிகளும் தேவை என்பதும் பெறப்படும். **'பரவசநிலை'** என்பது, கொடுக்கப்படுவதே தவிர, அதை முயற்சியால் பெறமுடியாது என்ற பொதுக் கொள்கை உண்மைக்குப் புறம்பானதே. உன்னத அனுபவப் பரவச நிலைகள் யாவும் நமக்குக் கொடுக்கப்படுகின்றன என்ற நிலையில் பொருந்தலாமே தவிர, வேறல்ல. யோகியின் பரவச நிலையின் உட்கிரகிக்கும் தன்மையைப் போன்று, அவருடைய மௌன நிலை இருப்பதில்லை. யோகியின் வாழ்க்கையானது மிகவும் கடுமையான கட்டுப்பாடுகளுக்கு அடங்கியதேயாகும். சரியான சிந்தனை என்பதுதான் அதன் முடிவும், எண்வகை மார்க்கத்தின் கிரீடமுமாகும். மனமும் புலன்களும் வேலை செய்யாது சும்மாவிருந்தவிடத்தும், வேதனை தரும் எண்ண அலைகள் ஓய்ந்ததுந்தான், ஆன்மாவின் உன்னதமானதும் பரிசுத்தமானதுமான நிலையை உணர முடியும். அப்பொழுது தனது கட்டுப்பாட்டுக்குட்படாத இயற்கை இன்பத்தை ஆன்மா அனுபவித்து ஆனந்தமடையும். அதுதான் உன்னதமான வாழ்க்கையின் உயரிய இலட்சியப் பொருளாகும்; அப்பொழுதுதான் அஞ்ஞானமும் பற்றும் இல்லாதனவாகி, அவற்றிற்குப் பதிலாக ஊடுருவச்செல்லும் தன்மையும், புனிதத் தன்மையும் வாய்க்கின்றன. அது சாந்த நிலை வழி வந்த சிந்தனையும், மனம் தனக்காகத் தயாரித்துக் கொண்ட பரவச நிலையுமாகும். அதுதான் ஆன்மாவின் உண்மையான ஆரோக்கிய வாழ்வாகும். இப்

பொழுதைய நோயும் வருத்தமும் உள்ள சாதாரண வாழ்க்கையுடன் ஒப்பிட்டுப்பார்த்தால், அதன் உயரிய நிலை நமக்குத் தெற்றெனப் புலப்படும். நமக்கு அதில் சுதந்தர உணர்ச்சியும், ஞானப் பேறும் எல்லையற்றன வாய் உடனுக்குடனே உண்டாகும்.

புத்த பிக்ஷுகளுக்கும் துறவிகளுக்கும் சாதாரணப் பாமர மக்களுக்கும் புத்தர் நடைமுறையில் இயங்கக் கூடிய ஒரு திட்டத்தைத் தயாரித்து அளித்துள்ளார்; அந்தணர் **கூடதந்தர்** அவர்களுக்கு அருளிய சொற் பொழிவுகளில், சாதாரண பாமர மக்களைக் கட்டுப்படுத் தும் ஐந்து நன்னடத்தை விதிகளை இயம்பியுள்ளார். அவையாவன, கொல்லாமை, வெஃகாமை, புலன்களைத் தீய வழிகளில் செலுத்தாமை, பொய்கூறுமை, கள்ளுண் ணுமை என்பன. வேலை செய்வதினின்று சும்மாவிருக் கும் நிலையை அவர் வேண்டவில்லை. சமணப் பாமரர் ஒருவர் புத்தரை நோக்கி, அவர் கிரியை செய்யாதிருக் கும் கோட்பாட்டை விவகரிக்கிருரா என்று கேட்டார். அதற்குப் புத்தர், "துறவியான கௌதமர் கிரியை செய்யாக் கோட்பாட்டை நிலைநாட்டுகிருர் என்று ஒருவர் என்னைப்பற்றி எவ்வாறு சரியாகக் கூற முடியும்? நான் செய்யக்கூடாதெனக் கூறுவது, உட லாலும், வாக்காலும், எண்ணத்தாலும் கெடுதல் விளைக் கும் செயல் புரியாதிருத்தல் என்பதே; மற்றும் கொடுமை வாய்ந்தனவும், கெட்ட செயல்களுமான பலவற்றையும் செய்யாதிருங்கள்; உடல், வாக்கு, எண்ணம் ஆகிய வற்ருல் நற்செயல் புரிக; மற்றும் பலவித நல்ல காரியங் களையே செய்துகொண்டிருக்கவேண்டும் என்றே கூறு கிறேன்," என்று பதில் கூறுகிருர். புத்தருடைய நல் வாழ்க்கை இயக்கத்தில், அன்பு ததும்பும் ஆர்வமே நற் காரியங்களைவிட முக்கியமானதாகும். இதயத்தை விடுதலையடையச் செய்யும் அன்பில் பதினுறில் ஒரு பகுதியாகக்கூட எல்லா நற்காரியங்களையும் எண்ணக்

கூடாது. இதயத்தை விடுதலை செய்யும் அன்பே அவைகளை ஆட்கொண்டு விடுகிறது. அது மிகுந்த கிரணவீச்சோடு ஒளிர்கிறது. தன்னுடைய உயிரைப் பணயமாக வைத்து, தன் ஒரே குழந்தையின் நலத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து பார்க்கும் தாய் போல, ஒவ்வொருவரும் எல்லையில்லாத அன்பினை எல்லா சீவராசிகளிடத்தும் வளர்த்து வாழ்வாராக!'' என்கிறார். விலங்குகளுக்குக் காட்டப்படும் மரியாதையானது நீதி வாழ்க்கையின் மிக முக்கியமான பகுதியேயாகும். உண்மையான பௌத்தர் விலங்குகளைத் தமது இன்பத்துக்காக உயிர்வதை செய்வதில்லை; அல்லது ஊன் தின்பதுமில்லை. அவை அவருடைய சகோதரர்களேயன்றி, தெய்வ உரிமை காரணமாக ஆட்சிமுறை நடத்தப்படும் கீழான உயிர்கள் அல்ல. ஆன்மாவும், அன்பும் நம்மைவிடக் கீழாகக் கருதப்படும் சீவராசிகளிடத்தும் உண்டு; அவைகளைப் புனிதத் தன்மையோடேயே நோக்கவேண்டும் என்பதை உறுதியோடு மொழிகிறார் புத்தர் பெருமானார். அவர் பாவம் என்பதைப்பற்றிப்பேசுவதில்லை; ஆனால், அறிவுச்சுடராலும், இரக்கத்தாலும் பண்படுத்தக்கூடிய அறியாமையையும் மடமையையும் பற்றியே பேசுகிறார்.

4. ஒரு மனிதன் தன் அறியாமையை வென்று, பாவங்களுக்கு நிலைக்களனுயுள்ள தன் செய்கைகளின் ஆற்றலை அறுத்தெறிந்தவிடத்தும், ஆசையை இல்லையாக்கிவிட்டுப்[1] பரிவுடன் தன் செய்கைக்கு வருந்துமிடத்தும், இறுதியாக ஞானப்பேற்றினை யடைந்து,

---

1. ஒப்பு நோக்குக :
''யத சர்வே பிரமுஸ்யந்தே காம, யேஸ்ய ஹ்ருதி ஸ்திதா அதமர்த்யோ மிருதோபவதி, அத்ர பிரம்ம ஸமஸ்நுதே.''
''ஒருவர் இதயத்தில் புகுந்த எல்லா ஆசைகளையும் ஒழித்த விடத்து, இறக்கும் உடம்பு இறவாத உடம்பாகி, பிரமத்துள் கலந்துவிடுகிறது.'' (பிருகதாரணியக உபநிஷத்து: iv-4)

ரூபம் அரூபம் இல்லாததும், துன்பம் இன்பம் அற்றதும் மனித மனத்தினுல் உருவகப்படுத்த முடியாததுமான ஒரு புதிய உலகில்—இவ்வாழும் உலகிற்கு முற்றிலும் மாருன வேருேர் உலகில்—பிரவேசித்து விடுகிருன். அதுவே உண்மையான ஆன்ம விடுதலை; அடுத்து வரும் பிறவிகளிலிருந்து விடுபடும் விடுதலை; அதுவே **நிருவாணம்** ஆகும். ஆனுல், புத்தர் அந்நிருவாண நிலை யின் தன்மையை விவகரிக்க மறுத்துவிடுகிருர். அக் கேள்வி பலனளிக்கக்கூடியதன்று; ஒருக்கால் அதற்கு நாம் அளிக்கும் விவரங்கள் அர்த்தமற்றனவாகவும் ஆகிவிடலாம். அது எவ்வாறு இருக்குமென்பது, சொற்களால் விவரமாகக் கூறமுடியாததொன்ரும்; ஆயினும், அதை அடையும் மார்க்கத்தை மட்டும் அவர் சுட்டிக் காட்டுகிருர்; தாம் கூறும் வழியைப் பின்பற்றிச் செல்பவர், எழில் நிறைந்த அவ்வாழ்க்கையின் காட்சியை அனுபவிப்பர் என்று உறுதிமொழி யளிக் கிருர். சடங்குகளேயோ, விரதங்களேயோ, ஒன்று அல்லது பல தெய்வங்களேயோ, தம்மையோ வணங்கும் தன்மையைப்பற்றிக்கூட அவர் எதுவும் கூறவில்லே. அவரே உண்மையை அறிந்தவர்; சத்தி யத்தின் போதகர்; தம் போதனேகள் யாவற்றையும் நீதிமுறை வாழ்க்கையின் நடுமையத்தில் வைத்துப் போற்றுகிருர். அவர் தம் காலத்து வாழ்ந்துவந்த பற்பல தத்துவ ஆராய்ச்சியாளர்களிடம் வீணுன சர்ச்சைகளில் — பயனற்ற விவாதங்களில் — ஈடு படுவதில்லே. உலகம் இடைவெளியில் எல்லே யில்லாது பரந்ததா அல்லது எல்லேயோடு முடிவடை கிறதா என்பதையும், பேரறிவு அல்லது ஞானம் கைவரப்பெற்றவர் தம் உடலேப்பற்றி நினேக்கிருரா, நினேப்பதில்லேயா என்பதையும், ஒருவர் இறப் புக்குப் பிறகு மீண்டும் பிறந்து வாழ்வாரா மாட்டாரா என்பதையும் புத்தர் விவகரிப்பதில்லே.

புத்தர் 'வெற்றுக் கொள்கைகள்' என்பனவற்றைக் கொண்டிருக்கவில்லை.[1] ஊழிதோறூழியாய்த் தமக்கே உரித்தான அறிவோடு இவ்வுலகத்தில் வந்து குதித்ததாக அவர் காரணம் கூறவில்லை. அவருடைய சுயசரித்திரத்திலிருந்து, **ஜாதகங்கள்** என்ற கதைகள் விவரிப்பது போல—பல பிறவிகளில் தாம் கட்டப்பட்டு அனுபவித்துக் கற்றுக்கொண்ட உண்மைகளாலேயே—அப்பேரறிவைத் தமதாக்கிக் கொண்டார் என்பது தெரியவருகிறது.[2] புத்தர் தம் பின்னோர்க்கு ஆன்ம முன்னேற்றத்துக்கான ஒரு திட்டத்தைப் புதியதாகக் கூறுகிறார்; பலவிதக் கோட்பாடுகள் மட்டுமன்றி, மதம் மட்டுமன்றி, அவற்றிற்குரிய மார்க்கத்தையும் காட்டுகிறார். கொள்கை ஒன்றினை ஒப்புக்கொள்ளுதல் என்பது, அதைப் பற்றிய தீவிர ஆராய்ச்சியை விட்டுவிடுவதே என்பது அவருக்குத் தெரிந்ததே.

நாம் உண்மைகளை அங்கீகரிக்க மறுப்பதன் காரணம், அவைகளுக்கு எதிரான கொள்கைகள் பல இருக்கின்றன என்பதால் மட்டுமேயல்லாமல், அவைகளுக்குத் திருஷ்டாந்தங்கள் இருக்கின்றன என்பதால் அன்று. புத்தருடைய போதனைகள் அவர் ஞானசித்தி அடைந்த உண்மைநிகழ்ச்சிகளோடு தொடங்குகின்றன. அந்த ஆன்ம அனுபவம் சொற்களால் விவகரித்துரைக்க முடியாததொன்றும். அவர் விவகரித்த கொள்கை எதுவாயினும், அஃது அவர் அனுபவித்த நிலையைக் குறிப்பிட்டும், அந்நிலையை எவ்வாறு பெறுவதென்பதைத் தெரிவித்தும் நிற்கின்றது. அவர் திருவாய்மலர்ந்தருளிய உருவகம் பின்வருவது: "தான் இருக்கும்

---

1. மஜ்ஜிமா, 1.486.

2. அங்குத்தரா, iv-36: "புத்தர் எல்லா விதத் தளைகளினின்றும் விடுபட்ட ஆன்மாவே ஆவார்; அவருடைய ஆன்மா எத்தகைய தளைக்கும் கட்டுப்பட்டதன்று."

முட்டை உடைபடாதிருக்கும் நிலையில் உள்ள ஒரு கோழிக் குஞ்சானது, வெளி உலகத்தைப்பற்றி எத் தகைய சிறந்த முறையில் அறிவைப் பெற்றிருக்குமோ, அதே தன்மை உடையனவாகும் நம்முடைய பரலோகத் தைப் பற்றிய கொள்கைகளும். உண்மையை அறிய வேண்டுமென்ருல், சற்சங்க மார்க்கத்தினைப் பின்பற்ற வேண்டுவது அவசியமே."

இதில், உலகத்தின் பேரறிஞர்களுள் சிறந்தோரைப் போன்று அவர் விளங்குகிருர். 'இளைஞர்களைத் தவருன வழியில் மயக்கிச் செலுத்துகிருர்,' என்ற குற்றச்சாட்டினுக்குச் சோக்ரதர், தமக்கு யாதொரு கோட்பாடும் இல்லையென்றும், **மெலேதன்** என்பவன் தம்முடைய சீடர்களிடமிருந்தாகிலும், அல்லது உறவினர்களிடமிருந்தாகிலும் தம் கோட்பாட்டினுல் சீரழிந்ததற்குத் திருட்டாந்தம் காட்டவில்லை என்றும் பதிலிறுத்தார்.[1] இயேசு நாதர் அர்த்தமற்ற கோட்பாடுகளை வெறுத்தார். அவர் போதித்தது ஒரு மதமோ அல்லது ஏற்படுத்தியது ஒரு கோயில் வழிபாடோ அன்று.

அவரது குறிக்கோள், வாழ்க்கையில் ஒரு புதிய வழியைக் காட்டுவதேயாகும். சிலுவையானது, ஒரு புதிய மதத்தின் சின்னமே தவிர, அவருடைய சித்தாந்தத்தின் சின்னமன்று சிலுவையைச் சுமத்தல், சீடராவதற்குரிய முக்கிய நிபந்தனையாகும். கெட்டதை நல்லதால் கடந்து முன்னேறத் தகுந்த புதிய மார்க்கத்துக்கும், நோக்கத்தை வேறு வழியில் மாற்றித் தானென்னும் பிறவிக்குணமான அகந்தையையும் உலக மதிப்பீடான புகழ் பெருமை ஆகியவற்றின் நீக்கத்தையும் குறிக்கச் சிலுவை அடையாளமாய் நிற்கின்றது. **பவுல் முனிவர்**, 'ஆன்மாவின் நற்பலன், அன்பு, இன்பம், சாந்தம், நீண்டகாலத் தொடர்ந்த துன்பம், விநயம், நற்பண்பு, நம்பிக்கை, அடக்கம், கள்ளுண்ணுமை,'

1. அப்பாலஜி. 22.

24:33
N68

ஆகியவைகளைக் கூறி, அவைகளை, 'விக்கிரக வழிபாடு, இகல், மாற்றம், பொருமை, கோபம், சண்டை, கொலை மற்றும் இவைபோன்ற பல' என்பவற்றைக் குறிக்கும் 'ஊன் உடலின்' வேலைகள் என்றவற்றிற்கு எதிரிடையாக ஒப்பிட்டுக் காட்டுகிறார்.[1] **தாமஸ் அக்வினஸ் முனிவர்**, தம்முடைய அந்திய காலத்தில் எய்திய நீண்ட காலப் பரவசநிலை காரணமாக, எதையும் எழுதி வெளியிட மறுத்துவிட்டார். தம் காரியதரிசியான **ரெஜினல்டு** மிக மிக வேண்டியுங்கூட, அவர் அதற்கிணங்கவில்லை. **ராபர்ட் பிரிட்ஜெஸ்** என்பவர், 'டெஸ்டமெண்ட் ஆப் பியூடி'[2] என்னும் பகுதியில், அந்நிகழ்ச்சியைப் பின்வருமாறு வருணிக்கிறார் :

"நேப்பிள்ஸில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில்
பரவச நிலையினை அவர் அடைந்த பொழுது,
மனிதவர்க்கத்துக்கும் அப்பால் நின்ற
மாய உலகினில் புகுந்த காட்சியை
உரைப்பேன் மகிழ்வுடன் கேளீர் நீவீர்!
அதற்கப்பால் காட்சி கொடுத்தோர்
அரிஸ்தாதலோ அல்லது கிறிஸ்துவோ,
என்பதைப்பற்றி அவர் யாதும் எழுதிலர்;
சொல்லவும் இல்லை; மைக்கூடும் பேனாவும்,
தரை மீது வைத்ததுதான்! யாதும் அறிந்திலர்!
கேட்பாரும் இலராகித் திகழ்ந்தனரன்று;
ரெய்னால்ட்ஸ் என்ற உயரிய நண்பர்
அவரைத் தம் மௌன பீடத்துக்கு
அழைத்தும் இருப்பர்; அதற்கவர் உரைத்தார் :
"மகனே, உனக்கோர் இரகசியம் பகர்வேன்
கூறாய் எவரிடமும் அதைநான் உளவரை;
என் எழுத்தும் முடிவினையடைந்து விட்டது.
நான் கண்டது யாதெனில்,

TAMIL NADU ARCHIVES MADRAS No. 109920

1. கொலாஷியன்ஸ், V—22—3,—20—I.
2. The Testament of Beauty.

இதுவரை நான் எழுதினதும் கற்பித்ததும்
எனக்குச் சிறியனவாகவே காட்சியளித்தன;
ஆகையால், கடவுளை நம்பி
கோட்பாட்டின் இறுதி இறப்பைப் போல,
நானும் என் வாழ்க்கையின் இறுதியை
வேண்டுகின்றேன்; அதுவே எனது விழைவாம்.''

நமக்குக் கிடைக்கும் சாசன திருட்டாந்தங்களைக் கொண்டு, புத்தருடைய வாழ்க்கையைப் பற்றியும், அவருடைய போதனைகளைப் பற்றியும், பழைய பரம்பரை வரலாறுகள் நமக்கு என்ன அறிவிக்கின்றன என்பதைக் கண்டோம். அவருடைய குணநலன்களும், போதனைகளும் தம் மத உலகினுக்கு வெகு அழகாக ஒத்துப் போகச் செய்தாலும், அவருடைய அடிப்படைச் சாத்துவிகமும், சுருசுருப்பான அன்பும், மனிதர்க்கு மகிழ்ச்சிக்கும் துன்பத்தினின்று விடுதலை பெறுவதற்கும் உகந்த ஒரு வழியினைத் தந்தருளிய செயலும், அவருடைய சமகாலத்துப் பேரறிஞர்களையும், பிற்காலத்தவர்களையும் 'அவர் ஒரு கர்த்தர்' என்று எண்ணும்படி செய்துவிட்டன.[1] இறுதியில் காணப்படும் சிற்சில நியாயங்களைத் திருட்டாந்தங்கள் கொண்டு விளக்கமுடியாத நிலைமைக்கு அவர் சரியான விளக்கம் அளிக்க மறுத்ததால், அதைப்பற்றிப் பற்பல கோட்பாடுகளின் சர்ச்சைகள் ஏற்படுவதற்கு அவர் காரணராயினர். குறைந்த விரத நிபந்தனைகளுக்கேற்ற மனநிலை கொண்டவர்களுக்காக, தங்கள் உரிமை கெடாத வண்ணம், குறைந்த அனுட்டானமும் தத்துவார்த்தமும் கொண்ட பல வகைக் கிளைகள் புத்த மதத்தில் கிளைத்தெழுந்தன.

---

1. மகாபதான சுத்தந்தாவில் புத்தருடைய தெய்விக நிலை பற்பல திருட்டாந்தங்களுடன் நன்கு நிலைநாட்டப்பட்டிருக்கிறது.

# III

# புத்தரும் உபநிஷத்துகளும்

**பு**த்தர் எவ்வெவற்றை உண்மையிலே போதித்தார் என்பதையோ, அல்லது அவருடைய முதல் சீடர்கள் அவர் என்ன போதனை புரிந்தார் என்று நினைத்தார்கள் என்பதையோ அறிய, நம்முடைய கற்பனை மனத்தை இந்தியாவின் கி. மு. ஆறும் நூற்றாண்டுக்கு இழுத்துச் செல்லவேண்டும். சிந்தனையாளர்கள், மற்றப் பாமர மக்களைப் போன்று, காலத்திலும் இடத்திலும் சிறிய அளவிலே வேரூன்றி இருக்கமாட்டார்கள். அவர்கள் நடத்தைக்கு எவ்வாற்றாலும் குறைவுபடாது வாழும் வாழ்க்கையில் உருவாக்கப்படும் சிந்தனைச் சுடர்களின் உருவங்கள், தங்களுக்குச் சுற்றிலுமுள்ள எண்ணம், செயல் ஆகியவற்றின் பழக்க வழக்கங்களினால் பெரும் பாலும் உருவாக்கப்படுகின்றன. பெரிய மேதைகள் எனப்படுபவர்கள் நிரந்தரமாக நிலவக்கூடிய தங்களு டைய சொந்தக் கருத்துகளையே காலத்தின் கருத்தாக வெளியிட்டு வாழ்வார்கள்; ஆனால், தாங்கள் வாழும் காலத்தையே மேம்பாடு அடையச் செய்யமாட்டார்கள்; அவ்வாறு செய்வதும் முடியாததொன்றாம். அவர்கள் விடை அளிக்கும் கேள்விகளும், தங்கள் காலத்தில் வாழும் சான்றோர்கள் கேட்டுக்கொண்டிருக்கும் கேள்வி களேயாகும். அவர்கள் அளிக்கும் விளக்கம், பரம்பரை

யாக அவர்களுக்குக் கொடுக்கப்படும் வியாக்கியானங்களைப் பொறுத்திருக்கிறது. மிகவும் புத்தம் புதியனவான வியப்பு மிக்க செய்திகளை வெளியிடுவதாயினும், முற்றுப் பெருத எண்ணங்களையும் வழிவழி வந்த கொள்கைகளையும் அவர் போகும் புதிய வழியில் பயன்படுத்துகின்றனர்.

தாங்கள் தங்கள் காலத்துக்கு மேம்பட்டவர்களாய் இருப்பினும், அவர்கள் அக்காலத்தோடு முடிவடைந்தவர்களல்லர். எண்ணங்கள் ஒழுங்கீனமாகக் குதித்துப் போவதில்லை. பழைய கொள்கைகள், புதிய வியாக்கியானங்களும் மெருகும் அளிக்கப்பட்டு, புதிய கோட்பாடுகளாய் முன்னேற்ற மடைகின்றன. சரித்திர உணர்ச்சியே இல்லாத விமரிசகரிடம், மற்றும் பலர் அடைந்ததைப்போன்றே, கௌதமரும் மிகவும் துன்பமடைந்திருக்கிருர். அவரைத் தீவிரமாகவும், கீழ்மையாகவும் சரித்திர உணர்ச்சியேயில்லாத மனப்பான்மையுடையவரெனப் பேசியிருக்கிருர்கள். புத்த மதமானது சென்ற நூற்ருண்டின் பிற்பகுதியிலேதான் மேலைநாடுகளில் நன்கு அறியப்பட்டது; அப்பொழுதுதான் உலகத்தின் பலவேறு பகுதிகளில் விஞ்ஞானத்தினுலும், அறிவு முதிர்ச்சியினுலும் ஏற்பட்ட சமுசய வாதமான நாத்திகத்தின் அலைவீச்சுப் பரவி நின்றது. பிரத்தியட்சாத்தும தரிசனம், சமுசய வாதம், நாத்திகம், மனித வர்க்கத்தின் கட்டுப்பாடுகளுக்குள் அமைந்த வாழ்க்கை ஆகியவைகளுக்கு நல்ல மதிப்பு உண்டாயிற்று. சந்தேகம், அவநம்பிக்கை ஆகியவற்றைத் தாக்கும் இலக்கியங்களிற்கூட, புத்தரது பெயர் மிகுந்த மரியாதையுடனேயே குறிப்பிடப்பட்டுள்ளது. மனித வர்க்கப் பண்பாளர்கள் தங்களுடைய கோட்பாடுகளான இன்பம், பெருந்தன்மை, மனித வர்க்கத்தின் மனவலிமை ஆகியவைகளை முதன்முதல் முயன்று முன்னுக்குக் கொண்டுவந்த காரணத்துக்காக, அவரைப் பெருமைப்

படுத்தி நிற்கின்றூர்கள். மனிதன் இயற்கையின் உண்மையை அறிய முடியாது என்று நினைத்துப் பறைசாற்றும் மக்களும், அறிய வேண்டுவதற்குரிய உண்மையே இல்லை என்று வாதிக்கும் மற்ற மக்களும் புத்தருடைய பெயரையே பயன்படுத்துகின்றூர்கள். நிலையற்ற கொள்கையின்மையால் உயிர்ப்பரிணுமம் பற்றித் தடுமாற்றம் எய்தி, அறிவாளிகளெனக் கொண்டாடப்படும் சமுஸயவாதிகள், அவரை உதாரண புருஷராகச் சுட்டிக் காட்டுகின்றூர்கள். சமதர்மக் கற்பனையாளர்களும், நெறிமுறையோடு வாழும் யோகிகளும், நியாயவாதத் தீர்க்க தரிசிகளும் அவருடைய போதனையால் கவரப்பட்டு, அப் போதனையைத் தங்கள் தங்கள் கட்சிகளுக்கு அநுகூலமாகப் பயன்படுத்திக் கொள்கிறூர்கள். நம் காலத்துக்கு அவருடைய போதனைகள் மிகப் பெரியனவாய் இருப்பினும், அவர் வாழ்ந்து வந்த சூழ்நிலையைப்பற்றி வெகு நன்ருகத் தெரிந்து கொண்டாலன்றி, அவைகளின் உண்மையான முக்கியத்துவத்தை நாம் நன்கு அறிந்து கொள்வது மிகக் கடினமான செயலாகவே இருக்கும். சரித்திரக் கற்பனையோடு பார்ப்பது என்பது எளிய செயலன்று. அதற்குக் காரணம், புத்தர் தமது வாழ்க்கையில் விவகரித்துள்ள எளிய சொற்களும் கோட்பாடுகளுங்கூட, பிற்காலச் சந்ததியாரின் குற்றச் சாட்டுகளுக்கு இலக்காகி உள்ளன; அவை பலவேறு கருத்துகளைப் பெருக்கமடையச் செய்து விட்டன. அதனல், பிற்காலத்தில் வழங்கிய கோட்பாடுகளை மனத்தில் கொண்டு, அவருடைய அருள்மொழிகள் சிலவற்றைப் படிக்க நாம் ஆசைப்படுவது இயல்பேயன்ருே? மதச் சார்புற்ற எண்ணமாயினுஞ் சரி, தத்துவச் சார்புற்ற எண்ணமாயினுஞ் சரி, எல்லா உயர்ந்த எண்ணங்களும், அவற்றை உருவாக்கியவர் சிறிதேனும் நினைக்காத பற்பல அர்த்தங்களைக் கொடுக்கும் தன்மையுடையனவாய் இருக்கும். பிற்காலத்தில்

தோன்றிய விவகரிப்பை ஒதுக்கி வைத்துவிட்டு, நம்மால் எவ்வளவு தூரம் அவரை அறிய முடியுமோ, அவ்வளவு தூரம் அவரைப் பின்பற்றிச் சென்று, அவரைக் கி. மு ஆறும் நூற்றாண்டின் சிந்தனையாளரா கவும், வாழ்ந்து, உழன்று, மிகவும் சிறப்புப் பொருந்திய தனியான நிலவரங்களில் போதனைகள் புரிந்தவராகவும் கண்டுகொள்வது, இப்பொழுது நமக்கு மிகமிகக் கடின மான செயலும், நுண்ணிய காரியமுமாகும். அவ்வாறு ஒழுங்குபடுத்தல், தெளிவான காரணங்களை முன்னிட்டு முற்றுப்பெறாத செயலாகவே இருக்கும். ஆனால், இவ் வாறு முயன்று தெளிந்து பெற்ற வரலாறானது, பெரும் பான்மையான வரையறையில் மட்டுமாவது, உண் மைக்குப் பெரும்பாலும் ஒத்துப்போகும் சம்பவப் படக் குறிப்பு ஒன்றை அளித்து நிற்கும். நம் கற்பனை மனத்தை இந்தியாவின் கி. மு. ஆறும் நூற்றாண்டுக்கு இழுத்துச் சென்றோமானால், பற்பல எண்ண அலை களும், நம்பிக்கையும், பழக்க வழக்கங்களும், சர்வஸ ஜீவத்வ வாதம், கண்கட்டு வித்தை, மூடபத்தி ஆகிய இவை யாவும், இவற்றைவிட உயர்ந்த நிலையிலுள்ள அத்துவைத ஐக்கிய வாதத்தில் ஒன்றுபட்டு நிற்பதை நாம் காணலாம். உண்மையைத் தேடும் மனிதனது முயற்சியும், அதைத் தன்னுடன் சரியான உறவில் பிணைத்துக்கொள்ளும் முயற்சியும் ஆகிய இவை துவைதம், நானாவிதத் தத்துவம் என்பனவாகப் பரிண மித்தன; ஆனால், இவை யாவும் அடிப்படையான சில காரணங்களை முன்னிட்டு ஒப்புக்கொள்ளப் பட்டனவே யாகும். வாழ்க்கை என்பது பிறப்புடன் தொடங்குவதும், இறப்போடு முடிவடைந்துவிடுவதும் அன்று; அது தொடர் சங்கிலிபோல, எண்ணற்ற பிறவிகளால் ஆக்கப் பட்டதாகும். அதில் ஒவ்வொரு பிறவியும், அதற்கு முந்தின பிறவியில் செய்த வினைகளுக்குத் தகுந்தவாறு, பலனால் நிகழ்ச்சிகள் நிர்ணயிக்கப்பட்டும், கட்டுப்

பாட்டுக்குட்பட்டும் காணப்படுகின்றது. விலங்கு, மனிதன், தேவர் உருவங்கள் யாவும் இச்சங்கிலிப் பிணைப்பில் காணப்படும் வளையங்களே. நற்காரியங்களால் நம்முடைய நிலையை நாமே உயரச் செய்து கொண்டு, தேவலோகத்துக்குச் செல்கின்றோம்; கெட்ட செய்கைகளினால் அதைத் தாழ்வடையச் செய்துவிடுகிறோம். எல்லா உயிர்களும் எப்பொழுதாவது ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டுமென்ற காரணத்தால், உண்மையான இன்பம் என்பதைத் தேவலோகத்திலோ அல்லது இப்பூவுலகத்திலோ தேடக் கூடாது. என்றுமுள்ள நிலையான வாழ்க்கையைப் பெறுவதன் காரணத்தின் பொருட்டுப் பிறவிச் சுழலிலிருந்து விடுபடும் தன்மையே மதாபிமானியின் குறிக்கோளாகும்; அதுவே மோட்சம், பாவ விடுதலை, பிரமத்தோடு ஐக்கியமாதல், நிருவாணம் என்ற பலவேறு சொற்களால் குறிக்கப்படுகின்றது.

இவ்வாறு பிறப்பினின்று விடுதலை பெறும் வழிகள் பலவாறு கொள்ளப்பட்டன. அவைகளில் குறைந்த பட்சம் நான்கு பெரு வழிகளைத் தெரிந்தெடுக்கலாம்: (1) தெய்வ வணக்கமும், வழிபாடும் தேவ அருளைப் பெறச் சிறந்த சாதனங்களாகும் என்று வேத கீதங்கள் தெரிவிக்கின்றன. (2) தேவதைக்கு அளிக்கப்படும் சிறிய உணவுப் பலிகளிலிருந்து கிளர்த்தெழுந்த உயிர்ப் பலி வழக்கமே சடங்குகளில் பெயர் பெற்றதாய் விளங்கிற்று. அது உபநிஷத்துகள் தோன்றிய காலத்துக்கு முன்னரே சிக்கல் பொருந்தியதாகி விட்டது. அதனுடைய பற்றுத்தன்மை உபநிஷத்துகளால் ஒப்புக் கொள்ளப்பட்டாலும், அஃது இம்மைக்குரிய அருளைப்பெறச் சிறந்த ஒரு சாதனமாகவும், மோட்ச சாம்ராச்சியத்தில் வாழ்வு அளிப்பதாகவும் போற்றப் பட்டு வந்தது. (3) துறவறம் சில மக்கட் குழுவின

ரால் போற்றப்பட்டு வந்தது.[1] கட்டுப்பாடுகளினுலும், ஒழுங்கு முறையாலும், மனத்தை ஒருமைப்பாடடையச் செய்வதனுலும், ஒருவர் மனத்தின் வலிமையையும் எண்ணத்தின் வேகத்தையும் பெருக்கிக் கொள்ளலாம். துறவறத்தைப் போற்றி வந்த அன்பர்கள், ஆசைகளை அடக்கியாள்வதாலும், தமக்குத் தாமே கொடிய தவ விரதங்களை ஏற்றுக்கொண்டு, அவைகளைச் சகித்திருத்தலாலும், ஒருவர் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட சத்திகளைப் பெறக்கூடும் என்ற முறையற்ற ஆசையால் ஏமாற்றப்பட்டார்கள். தவம் அல்லது கட்டுப்பாட்டுக்குட்பட்ட யோக சாதனையானது பலியூட்டலை விட மேலானது என்றும்,[2] அதுவே பிரம ஞானத்தைப் பெறச் சாதன மென்றும் கருதப்பட்டு வந்தது.[3] (4) வித்தியா அல்லது ஞானம் அல்லது உண்மையை உட்கண்ணுல் நோக்குதல், இவற்றைத் தொடர்ந்து வரும் ஆசையை அடக்கி ஆளுதல், உலக பந்தங்களிலிருந்தும் அதன் ஈடுபாட்டிலிருந்தும் விடுதலை பெறுதல் ஆகியவற்றையே உபநிஷத்துகள் வற்புறுத்துகின்றன. வித்தியா என்பது படிப்பு மட்டுமன்று; அது ஆழ்ந்த தீவிர சிந்தனையுமாகும். அது பரமாத்துமாவினேடு ஒன்றுபட்டு வாழும் நிலையை உணர்த்தலே யாகும். அந்நிலையில் உலக பந்தங்களும், பாசங்களும் தாமாகவே அறுந்து விழுந்து விடுகின்றன. சுய இச்சை ஈடுபாட்டிற்கும், சுய இச்சை அடக்கம் செய்வதற்கும் இடையேயுள்ள நடுவழியைப் போதித்த புத்தர், கடைசியில் கூறிய கொள்கையைச் சார்ந்தே நிற்கின்ருர்.

புத்தருடைய போதனைகள் எந்த உபநிஷத்திலிருந்து பெறப்பட்டனவோ,[4] அவ்வுபநிஷத்து, நமக்குத்

---

1. இருக்கு வேதம், x. 136; x. 190.
2. சாந்தோக்கிய உபநிஷத்து, iii. 17.
3. தைத்திரீய உபநிஷத்து, iii. I. 5.
4. புத்த பிரானுர் கூறுகிருர்: "அந்தணர்களால் அறியப்பட்ட நான்கு உண்மைகளும் என்னுடைய உயரிய புத்திபூர்வ

தெரிந்த உலகமானது—உட்புறமாயினுஞ் சரி, வெளிப் புறமாயினுஞ் சரி—இயல்பான உண்மைத் தன்மை யைக் கொண்டிலது என்பதை நிலைநாட்டுகின்றது.

இயல்பான உண்மைத் தன்மை அதை அறிந்தவ னுக்கே உரியதானது; அவ்வாறு அறியப்பட்டதே தன் னயத்துக் கெல்லாம் தன்மையான ஆன்மா ஆகும். இந்த உயர்ந்த தத்துவத்தின் ஞானமும், மனிதனுடைய ஆன்மாவும், பேரண்டத்துப் பரமாத்துமாவும் ஒன்றே என்பதை உணர்தலே மோட்சம் எனப்படும். அது ஒன்றின் தன்மையைக் குறிப்பிடுவதேயன்றி, ஓய்வு எடுத்துக் கொள்ளும் ஓர் இடத்தைக் குறிப்பிப்ப தன்று; அது ஆன்மிகப் பயிற்சியாலும், ஞான ஒளி யாலும் பெறக் கூடிய வாழ்க்கையின் முக்கிய குண மாகும். இந்தக் குறிக்கோளைச் சென்றடையுமட்டும், கர்மத்தின் நியதியாலும் மறு பிறப்பின் நியதியாலும் மனிதன் கட்டுப்படுத்தப்படுகின்றான் தனிப்பட்ட சீவாத்துமாவும், பேரண்டப் பரமாத்துமாவும் ஒன்றே

---

மாகத் தெரிந்து கொள்ளப்பட்டு, வெளியுலகிற்கு அறிவிக்கப் பட்டனவாகும்." (அங்குத்தரா, iv.185; சம்யுத்தா, xxii.90).

தம்முடைய தர்மக்கோட்பாட்டைப் புராதன (Purana) மான தென்றும், நித்தியமான தென்றும் (Saswatha or Sanathana) குணப்பாகுபாடு செய்கின்றார். அதை, மறைந்தும், புதைந் தும் கிடந்த மிகப் பழைய ஒரு நகரத்தைக் கண்டுபிடிப்பதற்கு ஒப்பிடுகிறார் (நகரசுத்தா). அவர் வேதத்தையும் (Vedajnana) அதாவது வேதஞானத்தையும் அல்லது வேதாந்தத்தையும் (Vedantajnana) அதாவது வேதாந்த ஞானத்தையும் அறிந்த வராகக் கூறப்படுகிறார். (சம்யுத்தா, i. 168; சுத்த நிபாதா, 463)

மாக்ஸ்முல்லர் எழுதுகிறார்: "புத்த மதம் உன்னதமான பிராமணீயமாகும்; அதில் கொடுமைச் சடங்குகள் யாவும் அழிக்கப்பட்டுவிட்டன; குருமார்கள் ஒதுக்கப்பட்டு, அவர் களிடத்தைப் பிக்ஷுகள் ஏற்றார்கள்; இப்பிக்ஷுகளே, முற் காலத்தில் காடுகளில் கடுந்தவம் புரிந்து ஞானப்பேறு பெற்ற முனிவர்கள் வழிவழி வந்த உண்மைச் சந்ததிகளும் பிரதிநிதி களும் ஆவார்கள்." (Last Essays, Second Series 1901, P. 121.)

என்ற நிழற் பீடத்தில், எண்ணற்ற கோட்பாடுகள் பெருகின; அவற்றில் பத்தனது உபாசனைத் தெய்வமானது பிரபஞ்சப் பரமாத்துமாவினோடு ஒருங்கு கண்டுகொள்ளப்பட்டது. ‘அனுமானப்பிர பஞ்சம் உண்மையானதன்று; மனிதன் நிலைத்திருப் பவனல்லன்; இவை இரண்டும் ஒரு நியதியால் ஆளப் பட்டு, மாற்றங்களுக்கு ஏதுவானவை; இந்த உலகத் தொடர்ச்சியினையும், காலத்தையும் கடந்து முன்னேறி, நிருவாணம் பெறுவதே ஒவ்வொரு மனிதனுக்குமுரிய கடமையாகும்’, என்ற கொள்கைகளைப் புத்தர் ஒப்புக் கொள்கின்றார். மதக் கோட்பாடுகளை எதிர்த்தாலும், உண்மையானதும், நிலையுள்ளதுமான ஏதாவது ஒன்று இப்பிரபஞ்சத்திலாவது, தனிப்பட்ட மனிதனிடமாவது, விடுதலை பெறும் வழியிலாவது இருக்கிறதா என்ப தற்குப் புத்தர் நமக்குப் பதில் கூற மறுத்துவிட்டார். எல்லையற்ற பூரணத்துவத்தின் முழுமையான பாகத் தைத் துவைத பாகமாகக் கருதப்படும் இவ்வுலகத்தி னோடு எதிரிடையாக உபநிஷத்துகள் ஒப்புமைப் படுத்திக் காட்டுகின்றன. அந்த நிலை, ஒழுங்கீனம், கட்டுப்பாடுகள், துன்பம் ஆகியவை கொண்டதாகும். உபநிஷத்துகளின் போதனைகளுக்கும், புத்தரின் போதனைகளுக்கும் வேறுபாடு ஏதாகிலும் இருப்பின், அது உலக அனுபவங்களின் கருத்துகளைப் பற்றிய தல்லாமல் (சம்ஸாரம்), நிலையான மோட்ச நிலை உற் பத்தியின் கருத்துப் பற்றியதே யாகும் (நிருவாணம்).

புத்தர் மௌனம் சாதிப்பதன் விளக்கத்தை அறிய முயல்வதற்கு முன், அதற்குரிய அவர் கருத்தை நாம் அறியவேண்டும். உயர்ந்த சிறந்த நீதிமுறை வாழ்க்கையே புத்தரின் போதனைக்குத் திறவு கோலாகும். வாழ்க்கை, பிரபஞ்சம் என்பவற்றின் கருத் துகள் அவருடைய சொந்தமான கடினமிக்க அனு பவங்களிலிருந்து உண்டானவையே. ஒவ்வொன்றும்

நிலைபெற்றிருப்பதற்குக் காரணம் ஒன்று உண்டு. அக் காரணத்தை அப்புறப் படுத்திவிட்டால், அதனால் உண்டாகும் பலனும் மறைந்துவிடும் எல்லாத் துன்பங்களின் மூல காரணத்தையும் ஒழித்துவிட்டால், துன்பமே மறைந்துவிடும். தம்முடைய சூழ் நிலையில் பரந்து காணப்பட்ட[1] யாக மதங்களும், மந்திர மதங்களும் வாக்களித்த மருந்தானது, நோய்க்கும் தனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லாமல் இருந்தது.

மனத்தைத் தூய தாக்கி, அறக்கோட்பாடுகளைக் கடைப் பிடித்தலே துன்பத்தின் காரணத்தை அறவே நீக்குவதற்கான ஒரே வழியாகும். விரைவு காரணமாகத் தனி மனிதன் குணத்தைப் பண்படுத்தும் முறையினை, அறவாழ்க்கையிலிருந்து ஒதுக்கித் தள்ளப்படும் கோட் பாடுகளைப் புத்தர் கண்டித்துள்ளார்.

'நாம் தெய்விகமானவர்கள்,' என்னும் உபநிஷத்து களின் கூற்று உண்மையானால் முயன்று தேடவேண் டியதற்கோ அல்லது குறியெதிர்ப்பை நாடி முன்னேறு

---

1. "பிலவாகி ஏதா அர்த்ருதா யக்ஞரூபா" என்பதை ஒப்பு நோக்குக. சமுசார சாகரத்தைக் கடக்க யாக யஞ்ஞாதிகள் பயனற்ற படகுகளே யாகும். (முண்டக உப நிஷத்து 1.2.7.). மற்றும், "நானுத்யாயாத் பஹூன் ஸப்தான் வாசோ விக்லாபனம் ஹிதத்." இச்சொற் கூட்டத்தைப் பற்றிச் சிந்தனை செய்யாதே; அது மூச்சு விரயமே யாகும். (பிருகதாரணியக உபநிஷத்து: iv 4.21; iii 8.10 ஐயும் பார்க் கவும்.) ஓர் அந்தணர் தம் கையில் யஞ்ஞம் செய்து, பாக்கி யுள்ள அவிசுகளை யேந்திப் புத்தர் முன் வந்த பொழுது, புத்தர் அவருக்குக் கூறினார்: "அந்தணரே, நெருப்பில் குச்சி களை இடுவதால் மட்டும் தூய்மை வந்து விடும் என்று நினைக்க வேண்டா; அது புறச் செயலேயாகும். ஆகையால், யான் அத்தகைய செய்வினையை விட்டுவிட்டு என் அகத்தின் உள்ளே இருக்கும் நெருப்பினை மட்டும் தூண்டிவிடுகிறேன். அது எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கிறது." இந்த யாகத்தில் நாக்கானது யாகத்தின் கரண்டியாகவும், இதயமானது நெருப் பெரிக்கப்படும் அக்கினிக் குண்டமாகவும் விளங்குகின்றன. (சம்யுத்தா, 1.168)

வதற்கோ உரிய விஷயங்கள் இல்லாதனவாகிவிடும். கணக்கற்ற ஆன்மாக்கள் சடத்தில் கலந்துள்ளன என்ற கொள்கையைச் சமண சாங்கியக் கோட்பாடுகள் கொண்டிருக்கின்றன. அவை பின்வருமாறு கூறு கின்றன:

"மனிதனுடைய கடமை துறவறக் கட்டுப்பாடு களில் அடங்கியுள்ளது. அதன் மூலமாக மாறிக் கொண்டிருக்கும் தன்மை வாய்ந்த இவ்வுலகப் பொருள் களிலிருந்து, மாருத நிலையான கருப்பொருளை விடுவிக்க முடியும். 'ஒரே பரமாத்துமா,' என்ற தத்துவத்தைக் கொண்ட உபநிஷத்துகளையோ, அல்லது 'எண் ணற்ற ஆன்மாக்கள் உண்டு,' எனக் கருதும் சாங் கியக் கொள்கைகளையோ நாம் நம்பினுலும், ஆன்மாவின் இயல்பு என்றைக்கும் மாருதது என்றும், என்றும் மாற்ற முடியாதது என்றும் கருதப்படுகின்றது. நன்னெறி வாழ்க்கையின் பயிற்சியானது அதை மாற்றக்கூடிய நிலையினை உணர்த்துகின்றது. மனிதன் தெய்வாமிசம் பொருந்தினவன் அல்லன்; ஆனால், அவன் தெய்விக மனிதனுக வேண்டும்; அவனது அந்தத் தெய்விக நிலையானது, நல்லெண்ணங்களாலும், நற் சொற்களாலும், நற்செய்கைகளாலும் உருவாக்கப்பட வேண்டும். அத்தகைய தெய்விகப் பிறவியே சத்தி வாய்ந்த—வாழும்—ஊக்கும் சீவனுகும். அத்தகைய வருக்குப் பற்பல பிறவிகளால் பொருந்தி நிற்கும் அறி வானது, சந்தேகமும் சம்பந்தமும் கால அடைவில் தோற்கடிக்கப்பட்டது என்று சொல்வது மனச்சாந்தியை மிகுதியும் உண்டாக்காது. ஊனுள்ள மனிதனே அறப்பாதையை மேற்கொள்ள வேண்டுமேயன்றி, உருண்டோடும் பிற உடல் புகும் ஆன்மாவன்று. மாறுதல் இல்லாத நிலை பெற்ற ஆன்மா, மனிதர்க ளிடையோ, அல்லது பொருள்களிடையோ இல்லை என்ற கொள்கை (சர்வம் அநாத்மம்) ஹேஷ்யமான

தன்று; அல்லது உலகம் நிலையாமை என்னும் தத்துவத்திலிருந்து வெளிப்பட்ட எண்ணமுமன்று; ஆனால், அது நீதி வழி முழுமைக்கும் அடிப்படையாகும். முயற்சியாலும், கட்டுப்பாட்டினாலும் ஆன்மாவை நாம் நிருமாணிக்க வேண்டும். ஆன்மா என்பது பரிணமித்து வளர்ந்தும், முயன்று பெறப்பட்டும், இன்னல்களாலும் உழைப்பாலும் நிருமாணிக்கப்பட்டதேயன்றி, சோம்பேறித்தனத்தால் ஒப்புக்கொள்ளக் கூடியதும், அனுபவிக்கக் கூடியதுமாகக் கொடுக்கப்பட்ட ஏதோ ஒன்றன்று. 'நான்' என்ற அகங்காரமானது நம்மை எரிக்கக் கூடிய சிந்தனைகளைக் கொண்டிருக்கிறது; நாம் அழுந்தி நிற்கும் ஆசாபாசங்களைக் கொண்டிருக்கிறது; நம்மைப் பற்றும் ஆசைப் பேய்களையும், அவற்றால் நாம் கொள்ளும் முடிவுகளையும் கொண்டிருக்கிறது. இப்பொருள்களே வாழ்க்கைக்கு ஒரு நாடக உயிர்ப்பைக் கொடுக்கின்றன. அவைகளில் நிலைபெற்றதானதோ, அல்லது உன்னதமானதென்பதோ எதுவுமில்லை. அதனாலே, நாம் இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்ட தன்மையுடையவராய் மாறிவிடலாம். மனிதனது உண்மைத்தன்மை அவன் உருவாக்கும் சிந்தனைச் சுடரில் இருக்கிறது. உணர்ச்சிகளின் மோதல்களை வேண்டாவென ஒதுக்கித் தள்ளிய பொழுது, பொருள்களின் ஆற்றோட்டத்தை நிறுத்திய பொழுது, உடற்பசியை அடக்கி இல்லையாகச் செய்த பொழுது, நம் மனத்துக்குள் நமது ஆன்மாவின் அற்புதச்சத்தியினை உணர்கிறோம். ஆன்மாவின் பிரமையானது தனக்குத் தானே இலாபமடையும் வழியைக் காட்டி, மற்றவர்களுக்குத் தீங்கை விளைவிக்கிறது. ஆணவத்தின் அனல் கக்கும் உணர்ச்சியே உலகத்தின் துயரம் யாவற்றிற்கும் வேர்போன்ற மூல காரணமாகும்.[1] 'நான்' எனப்படும் ஆணவத்துடன் மட்டும்

---

1. நாகார்ஜுனர் கூறுகிறார்: "தான் என்னும் தன்மை

விளங்குவது, கண்களை உண்டாக்கிக் கொள்ளாத ஆதி கால சீவராசிகளைப் போன்றிருக்கிறது. அது மற்றவர் உண்மையாகக் காண்பவற்றுக்குக் குருடாகவே இருக்கிறது. உடலோடும் மனத்தோடும் கொண்ட ஆசைகளை அறவே ஒழித்தபோதுதான் நாம் வளர்கிறோம்; அப்பொழுதுதான் இவ்வுலகத்தின் பரந்த தன்மையால் தொடப்படாத நிலையில் நம் வேர் ஊன்றியிருக்கிறது என்பதை அறிந்துகொள்கிறோம். ஆணவத்திலிருந்து விடுதலை பெறுதல் என்பது, நம்மைவிடக் கீழான சீவராசிகளிடத்தில் இளகிய மனத்தையும் அன்பையும் பெருந்தன்மை நோக்கோடு கொள்ளுதலே யாகும். அது பூரணத்துவத்தைத் திரும்பப் பெறுவதும், பிரபஞ்சத்தின் நல்லியக்கத்தில் ஒழுங்கான இயற்கைத் தன்மையை நிலைநிறுத்துவதும் ஆகும்.

ஆணவம் நிலையற்றது மாறுதலற்றது என்ற கொள்கையையும், இறக்கும்பொழுது அது முழுவதும் அழிந்து போகிறது என்ற கொள்கையையும் புத்தர் மறுக்கிறார். இறப்பானது எல்லாவற்றையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதாயிருந்தால், இக்குறுகிய வாழ்க்கையை இன்னும் ஆன்மிகக் கட்டுப்பாட்டால் சுமக்கச் செய்வது வேண்டப்படாத தொன்றும் என்று பலர் கற்பனை செய்யக் கூடும். ஆணவம் என்பது கூட்டானது; உயிர்ப்போடு வாழ்ந்து வருவது; மாறிக்கொண்டிருப்பது.

இயற்கையைக் கடந்த நியதியில் கருத்தைச் செலுத்துவதானது, குறிப்பையும், சத்தியையும் அற வழிப் பயன்களிலிருந்தும், உண்மை நிலவரத்தைத்

---

மறைந்தவிடத்து, தனது என்னும் கொள்கையும் மறைந்து, ஒருவர் 'நான், எனது' என்ற எண்ணங்களிலிருந்து விடுபடுகிறார்."

"ஆத்மானி அஸதி சாத்மீயம் குத ஏவ பவிஸ்யதி
நிர்மமோ நிரகங்காரா சமாத் ஆத்மாத்ம நீ நயோ."

(மாத்யமிககாரிகா, xviii; 2. பகவத்கீதை ii. 71 பார்க்க.)

துருவி ஆராய்வதினின்றும் வேறு பக்கமாகத் திருப்பு கிறது; இது காரணமாகக் கடைசியில் அடைய விரும்பும் குறிக்கோள் காலங்கடத்திச் செல்கின்றது. தங்களுக் கேற்பட்ட பொறுப்பான தொழிலைச் செய்வதற்குப் புறம்பான ஒரு பிரதிநிதியை நம்பிக் காத்துக்கொண் டிருக்கிற வரையில், மனிதர்கள் தம்மிடத்திலுள்ள சத்திகளை வாழ்க்கை நன்மையின் முன்னேற்றத்துக் காகப் பயன்படுத்துவதில்லை என்பதைப் புத்தர் தம்மைச் சூழ்ந்து காணப்பட்ட வாழ்க்கையால் அறிந்து கொண்டார்.

இயற்கையின் உன்னத நிலைக்குத் திடீரென மாறு வதற்குத் தெய்வாமிசமான கண்கட்டு வித்தையின் செயலாற்றலை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். புறச் சத்தியினை நம்பியிருப்பதென்பது, மனித முயற்சியை அர்ப்பணித்தலே என்று பொருள்படும் புகழ் பெற்ற தேவர்கள் இருப்பதைப் புத்தர் மறுக்கவில்லை. ஆனால், அவர்களை இந்நிலையில்லா இனத்தவரோடு சேர்ந்தவர்கள் எனவும், அவர்களுக்கு இன்னும் அறிவு விளக்கம் தேவை எனவும் கருதுகிறார். கோட்பாட் டாலும், உதாரண வாழ்க்கையாலும், அவர் மிகவும் இன்னல் பொருந்திய வாழ்க்கையினை உலகிற்குத் தெரிய உரைத்தவராவர்.[1] இப்பிரபஞ்சப் பாதை முழுவதுமே ஒரு நியதியால் ஆளப்பட்டு வருகிறது மனிதருடைய வாழ்க்கையில் காணப்படும் வியப்பான ஏற்றத்தாழ்வு களுக்குத் தெய்விகக் கர்த்தாவைக் காரணராகக் கருத வேண்டிய தேவையில்லை.[2]

---

1. ஒப்பு நோக்குக : அசோகர் சொல்கிறார் : "சிறிய வர்களும் பெரியவர்களும் தாங்களே முயன்று உழைப்பார் களாக." (முதல் சாசனம் அல்லது கல்வெட்டு)

2. ஒப்பு நோக்குக : கருட புராணம் :
"சுகஸ்ய துக்கஸ்ய நகோபி தாதா
பரோ ததாதீதி குபுத்திர் ஏஷா

கடவுள் சத்தி உள்ள ஓர் உருவமாக எண்ணப் படுவதையும், அக்கடவுள் நம்முடைய இன்னல்களில் பங்கு கொள்கின்றவரென்றே, அல்லது பிரபஞ்சத்தின் முன்னேற்றத்தில் தலையிடும் அதீத இயற்கையின் இராக்கதரென்றே கொள்ளும் கொள்கையை ஒதுக்கித் தள்ளுகிறார். ஆஸ்திகக் கொள்கையின் வற்புறுத்தலே மனிதனுடைய சுதந்தரத்தைப் பறித்து விடுகிறது என்பது அவருக்குப் புலனாயிற்று. அதுவே அம் மனிதனை, மனித இயல்பில்லாத முடிபுகளைப் பெறுவ தற்கு ஒரு கருவியாக்குவதும் புலப்பட்டது. புத்தரு டைய பிரச்சினை, உலக ஆன்மா—அவ்வாறு ஒன்று இருந்தால்—அது எவ்வாறு மனித உலகிற்கு அப்பாற்

---

ஸ்வயம் கிருதம் ஸ்வேநபலேன யுஜ்யதே
சரீர ஹே நிஸ்தர யத் த்வயா கிருதம்.''

"எவரும் இன்பத்தையோ துன்பத்தையோ கொடுப்ப தில்லை. அவைகளை மற்றவர் கொடுக்கிறார்கள் என்பது தவறான கொள்கையாகும். நம் சொந்தச் செயல்களே நமக்கு அவற்றின் பலனைக் கொடுத்து விடுகின்றன. என்னுடைய உடலே இன்னலைத் துய்ப்பது காரணமாகத் திருப்பிச் கொடுத்து விடுகின்றது."

முற்கால பௌத்த கவிஞர் ஒருவர் கோபத்தினால் சுடு சொற்களை அள்ளி வீசுகிறார் :

"கண்கள் உள்ளவன் பிணிக்காட்சியைக் காண்பான்;
பிரமா ஏன் தன் சிருட்டியைச் சரிவரப் படைப்பதில்லை ?
அவர் கரங்கள் எல்லையில்லாச் சத்தியினைப் பொழியு
மெனின்,
அவை ஏன் வாழ்வை மலரச் செய்ய விரிவதில்லை ?
அவருடைய சிருட்டிகள் யாவுமே ஏன் துன்பத்தில்
உழலச் சிட்சை செய்யப்படுகின்றன ?
அவைகளுக்கெல்லாம் ஏன் சுகத்தைக் கொடுப்பதில்லை ?
மோசம், பொய், அஞ்ஞானம் ஏன் நுழைகின்றன ?
ஏன் பொய் வெல்கிறது ? உண்மையும் நியாயமும் ஏன்
தோற்கின்றன ?"

(ஜாதகா, ஆங்கில மொழி பெயர்ப்பு, வெளியிட்டவர், Cowell Rouse, Vol. vi *(1907)*, p. *110)*

பட்ட பிரபஞ்சத்தில் இயங்குகிறது என்பதன்று; ஆனால், அது தனி மனிதனிடத்தும், இவ்வனுமான உலகத்திலும் எவ்வாறு விளங்குகின்றது என்பதே யாகும். பிரபஞ்சத்தை எது அடக்கி ஆள்கிறதோ, அதுவே தர்மம்; அதாவது நீதியின் நியதி யாகும். இவ்வுலகம் தெய்வங்களாலும் தேவதை களாலும் ஆக்கப்பட்டதன்று; ஆனால், மனிதர்களின் சுய இச்சைகளினால் ஆனதாகும். மனிதனுடைய வரலாறு என்பது மனித வாழ்க்கையின் முழுத் தொகுதியின் பல னும், தீர்மானங்களும், அனுபவங்களும் அடங்கியவை ஆகும். இவ்வுலகில் நாம் ஒவ்வொருவரும் புகும்பொழுது காணும் காட்சிக்குக் காரணம் இதுகாறும் நமக்கு முன்னர் விளங்கிய மனிதர்களுடைய திட எண்ணத் தாலும், செயலாலும்—ஒவ்வொருவரும் தத்தம் சத்திக் கேற்றவாறு—வாழ்க்கை வரலாற்றில் அடுத்த வினாடி என்ன நடக்கப் போகிற தென்பதை உருவாக்கிக் கொள்கிறோம். மனித எண்ணமானது சர்வ வல்லமை யுடையதன்று என்பது புத்தருக்கு நன்றாகத் தெரியும்—அவரை விடத் தெரிந்தவர் வேறு யார் இருக்கப் போகிறார்? அது இலௌகிக, மிருக, சமூகச் சூழ் நிலை களில் வேலை செய்கிறது; அது மனித வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும், தன்னுடைய மனத்தாலும், சூழ்நிலைக்கேற்ற முயற்சியாலும், மாற்றிப் புதியதாக அமைக்கக் கூடியதாய் இருப்பினும், ஒவ்வொரு முனை யிலும் தாக்கி நிற்கிறது. மனிதனுக்கும் அவன் சூழ் நிலைக்கும் தொடர்ச்சியாக ஏற்பட்டு நிற்கும் இத்தகைய மோதலே, வரலாற்று ஆடையின் நுண்ணிய இழை யாகும். மனித உழைப்புக் கருதப்பட வேண்டியதே.

இப்பொழுது காணப்படும் நிலைமைக்கு எதிரொப் பாக மதத்தின் குறிக்கோள் இலட்சணபூர்த்தியாகக் காணப்படுகிறது. ஆசையைத் தூண்டுவித்து, செயலைச் செய்ய ஊக்கி நிற்கும் தர்மமானது, இலட்சணபூர்த்தி

யின் எல்லா இறுதிக் கட்டங்களின் ஒற்றுமைப் பாடாகும். தான் கொண்டிருக்கும் உட்கிடக்கை அர்த்தங்களினுலும், பயன்களின் காரணமாகவும் நம்மை அது அடக்கிச் செல்கின்றதே யல்லாமல், நமக்குப் புறம்பே நின்று அறியப்படும் பொருளாக விளங்குவதனுலன்று. தர்மத்தின் உண்மைத் தன்மை அதன் மறுக்க முடியாத சத்தியினுல் பிணிக்கப்பட்டிருக்கிறது. அது முழுவதும் வேரின்றி ஊன்றி நிற்கவில்லை என்று வற்புறுத்திக் கூறுகிருர்; ஆனுல், தர்மம் இயற்கைக்குப் புறம்பாய் நிற்கும் உருவத்துக்கு ஒப்பிடப் படுகிறது என்பதை மறுக்கிருர். தர்மம் அல்லது அறவாழ்க்கையின் இலட்சணபூர்த்தியானது இயற்கைக்குப் புறம்பானதென்று யூகித்தால், அஃது இயற்கையான வழிகள் யாவும் கலப்படமென்பதையும், சத்தியற்றவை என்பதையுமே குறிக்கும். மனிதன் இயல்பாகக் கெட்டவனே என்றும், மறுபிறப்பு ஒருவகை அன்பீட்டத்தின் செயலே என்றும் அது குறிப்பிடுகிறது. மனித குணத்தின் மேம்பாடு, மனித முயற்சியின் இயற்கைப் பலன் என்று கொள்ளப்படமாட்டாது; ஆனுல், அது தெய்விகச் சத்தியின் உதவி காரணமாக உடனே முழுவதும் மாற்றப்பட்டிருக்கும் நிலையாகவே கருதப்படும். தர்மம், நியாயம், அன்பு ஆகியவைகளை ஊக்குவிக்கும் ஆற்றல்கள் ஊக்குவிக்கப்படும் பொருள்களிலேயே இயங்கி நிற்கின்றன என்பதே புத்தருடைய கொள்கை. தர்மத்தினுடைய சிறந்த ஆற்றலினுல் ஒழுங்கீனம், கொடுமை, எதிர்ப்பு முதலியன குறையும். தர்மம், நிலைபெற்ற வாழ்க்கைக்கு இன்றியமையாததும், கர்மத்தைப் பற்றிக் கூறும் போது, அதுவே உலகத்தை உருவாக்கி வைப்பதுமாகும். ஆன்மாவுக்கும் ஆன்மாவுக்கும் இடையே இவ்வுலகில் காணப்படும் கீழ்ப்படியுந்தன்மை, அன்பின் ஆர்வம், உள்ளார்ந்த உரையாடல், உலக அன்பினை

நெருங்கி ஒத்திருப்பது போன்ற காதல் ஆகிய இவற்றைப் போன்றவைகள் புத்தருடைய போதனை களில் இல்லை. ஆயினும், மதத்தின் சாரமும், தம்அருகில் காணப்படும் பொருள்களைப் பற்றிய உள் புறம் இவற்றின் கூரிய பார்வையும், தம்மைப் பற்றிப் பெரிய தும், அப்பாற்பட்டதுமான ஒன்றிற்குச் செலுத்தும் உயரிய வணக்கமும், உலகில் எப்பொழுதுமே சுருசுருப்பு மயமாயிருக்கும் ஒரு தத்துவப் பொருளும் ஆகிய இவைகளே அவரிடத்து அடங்கியிருந்தன

IV

# தத்துவார்த்தக் கருத்துகள்

கோட்பாடுகளைப் பற்றிய விவாதங்கள் உள்ளொளி காண்பதற்கும், அறவழி வாழ்வதற்கும் தீமை உண்டாக்குவன என்பதால், அவைகளைப் புத்தர் வேண்டாவென ஒதுக்கித் தள்ளி விட்டார். ஆகவே, அளவிட முடியாத மிகவும் ஆழமான மர்மங் கொண்ட இடங்களை நாம் சென்றடைகிறோம். அவை வெளியிடும் வெளியீட்டங்களில் சிந்தனைக்குரிய விளக்கத்தை வற்புறுத்தக் கூடாது.[1]

---

1. தம் முன்னோர்களின் கொள்கைகளையும், தம் சம காலத்தவர்களின் எண்ணங்களையும் நன்றாக அறிந்தவர் என்று கருதப்பட்ட நாகசேனர் என்பவர் கூறுகிறார்: "விடை சொல்லத் தேவையில்லாத கேள்விகள் பல இருக்கின்றன. நான்கு விதமான தனிக்கேள்விகள் இருக்கின்றன. (1) சில கேள்விகளுக்கு உறுதியாக விடையளிக்க முடியும். (ஏகாம்ஸ வியாகர்நீயா). "பிறக்கிற ஒவ்வொருவரும் இறப்பாரா?" "ஆம்" என்பதே நிச்சயமான விடையாகும். (2) சில கேள்விகளைத் தொகுதிகளாகப் பிரித்தே விடை அளிக்கப்படும். (விபஜ்யவியாகர்நீயா). "இறப்பதற்குப் பின் ஒவ்வொருவரும் மீண்டும் மறு பிறவி எடுப்பாரா?" "ஆசைகளினின்று முற்றும் விடுதலையடைந்தவர் மீண்டும் பிறப்பதில்லை; அவ்வாறு அடையாதவர் மீண்டும் மீண்டும் பிறப்பர்." (3) சில கேள்விகளுக்கு எதிர்க்கேள்விகள் எழுப்பியே விடையளிக்கப்படும். (பிரதிபிரச்சாவியாகர்நீயா). "மனிதன் உயர்ந்தவனா, தாழ்ந்தவனா?" அதற்கு எதிர்க்கேள்வியானது "எதை உத்தேசித்து?"

வாழ்க்கையின் தத்துவமும் பலனும் அதற்குப் பின்னால் காணப்படும் மர்மங்களாலும் புத்திபூர்வமாக அறிந்து கொள்ள முடியாத அநாதியான நிலையாலும் தெளியப்படும். அனுமானப் பிரபஞ்சமே எல்லாமாய் இருந்தால், உலகமும் மனிதனும் சுயமான பூரணத் துவம் பெற்றிருந்தால், அப்பாலும் மேலும் உள்ளும் இதைவிட மர்மமுள்ளதாய் எதுவும் இல்லாமலிருந் தால், அப்பொழுதுதான் வாழ்க்கையின் துன்பமும் கெடுதல்களும் பொறுத்துக் கொள்ளக் கூடியனவாக இருக்கமுடியும். மானசீகத்துக்கு மேலானதும், வரலாற் றுக்கு அப்பாற்பட்டதுமான உண்மையை நாம் நம்புகி றோம். இதற்குக்காரணம், சாஸ்திரீயஞானமானது அதன் இருப்பை வற்புறுத்துவதன்று. ஆனால், அனுமான உல கத்தைச் சூழ்ந்துள்ள மர்மத்தில் சாஸ்திரீய ஞானம் முடி வடைகிறது என்பதே காரணமாகும். கடவுளைப் பற்றி யும், அவர் நம்மிடத்தில் கொண்டுள்ள உறவைப் பற்றி யும் உன்னதமான விவரங்களையும் காட்சிகளையும் தரும் ஆஸ்திக மத வழிபாடுகள் யாவும் புறம்பானவைகளே யாகும்; அவைகள் வாழ்க்கையின் இறுதிப் பயன்களைத் தொட்டுப் பார்ப்பதில்லை. 'இல்லை' என்னும் நாஸ்திக வாதமானது முடிவின் ஆழத்துக்கு அருகில் நம் மைக் கொண்டு செல்கிறது. புத்தி பூர்வமாக ஏற்பட்ட சாஸ்திரீய ஞானத்துக்கும், தத்துவ ரீதியாக உண்டாக்

---

என்பதே யாகும். "விலங்கினத்தை ஒப்பிட்டுச் சொன்னால் அவன் உயர்ந்தவன் என்றும், தேவகணத்தைக் கருதிச் சொன்னால் அவன் தாழ்ந்தவன் என்றும் அறியப்படும்." (4) சில கேள்விகள் விடை அளிக்க வேண்டாமலே ஒதுக்கித் தள்ளப்படுவன. (ஸ்தாபநீயா). "புலனுகர்ச்சி யாவும் (ஸ்கந்த) ஆன்ம நுகர்வைப் போன்றனவா (ஸத்வ)?

(மிலிந்த பாஞ, iv. 2 iv)

ஒப்பு நோக்குக : அபிதர்மகோஸா, v. 22 :

"ஏகாம்ஸேன விபாகேன ப்ரச்சாத ஸ்தாபனீயத
வியாக்ரதம் மரணோத்பத்தி விசிஷ்டாத்மான்யதா திவத்."

கப்பட்ட விவகரிப்புகளுக்கும் ஏற்பட்ட எல்லே மர்ம மாகவே கொள்ளப்பட்டுள்ளது. "அதன் முன்னல் சொற்கள் பின்னடைவதுடன், மனமும் அதைக்கண்டு கொள்ள முடியாமல் தவறிவிடுகின்றது."[1] தாம் எவ்விதச் சொற்களேயும் வாய்மொழியாக அருளாத தனிப்பட்ட நிலேயில், புத்தர் ஒரு பெரிய மர்ம மனித ராகவே தம்மை வெளிக்காட்டி வந்தார். ஆயினும், புத் தருடைய பிற்காலச் சந்ததியிலுதித்த சீடர்கள் அவரு டைய மௌனநிலேக்குப்[2] பல கோணங்களில் வியாக்கி யானம் அளித்தார்கள். தத்துவ மயமாக்கும் தேவைப் பாட்டினே மனிதன் நீண்ட காலம் அடக்கிவைத்திருக்க முடியாது. இலங்கை வரலாற்றின் அறிவிப்புகள் ஒப்புக்கொள்ளப்பட்டால், புத்தருக்குப் பிறகு, கி. மு. இரண்டாம் நூற்ருண்டில், பதினெட்டுத்தனித்தனிப் பிரிவுகள் தோன்றி வளர்ந்தன எனலாம்.[3] புத்தருடைய மௌனத்தின் பொருளே அறிவதால், நமக்கு மூன்று விதப் பொருள்கள் வெளிப்படையாய்த் தெரிகின்றன. (1) அநித்திய உலகப் பிறப்பு இறப்புகளின் தொடர்ச் சிக்குப் பிறகு ஏதாகிலும் இருக்கிறதா என்பது அவருக்குத் தெரிந்திருக்கவில்லே. (2) இவ்வனுமானப் பிரபஞ்சமே அனேத்துமாகு மென்பதையும், அதற்கும் அப்பால் எதுவும் இல்லே என்பதையும் அவர் தெளிவாக உணர்ந்திருந்தார். (3) இப்பிரபஞ்சத்தில் இவ்வுலகிற் கும் வேறு உலகிற்கும் உண்மையான ஓர் அனுமானப் பாதை உண்டு என்பதையும், அது ஆன்மாவிலேயே கால உணர்ச்சியைக்கொண்டு மேலோங்கும் பண்பினேப் பெற்றுள்ளது என்பதையும் அவர் நம்பினுர். ஆனல், முக்கியமான வாக்குக்குக் கெட்டாத விஷயங்களுக்குத் தகுந்த காரணங்களேக் காட்ட மறுத்தற்குரிய நியாயப்

1. தைத்திரீய உபநிஷத்து, 11·4.
2. சம்யுத்தா, iv. 400; மஜ்ஜிமா, 426.
3. தீபவம்ஸா, v. 53; மகாவம்ஸா, v. 8.

பிரமாணங்களும், அறவழிக் குறிக்கோள்களும் அவர் கொண்டிருந்தார். அவருடைய இத்தகைய மௌனம் அவர் சூனிய வாதத்திற்குப் பயன்படுத்தும் போர்வை என வாதித்து உறுதிப்படுத்துவாரும் சிலரும் உள்ளனர். எல்லாம் வல்ல பரம்பொருளின் உண்மையை அவர் மறுக்கிறார்; ஆகையால், ஆன்மாவில் எத்தகைய நிரந்தரமான நிலையும் இல்லை என்றும், நிருவாணம் என்பது வெற்றுத்தன்மையின் ஓர் இரவே என்றும், அதாவது சூனியம் என்றும் கூறுகிறார். அவரை வேறு சிலர் நாஸ்திகராகக் கருதுகின்றனர். அவருக்குப் பொருள்களின் உண்மைத் தன்மை தெரியவில்லை; அப்படி உண்மை என்று ஏதாகிலும் இருப்பினும், அது தெரிந்துகொள்ள முடியாதவாறு இருக்கலாம். அவரது மௌனம் நிறுத்தி வைக்கப்பட்ட தீர்ப்பளிப்பைப் போன்றதாகும். மற்றும், அவரைச் சிலர் மாயாவாதி என்றும், அவரும் மற்ற மாயாவாதிகளைப் போன்று, அந்த உன்னத நிரதிசய நிலையைத் தெரிவிப்பதில் பின்னடைந்தார் என்றும் நினைக்கின்றனர்; அதற்குக் காரணம் அந்நிலையை உணர்ந்து அனுபவிக்க முடியுமே தவிர, அதைச் சொற்களால் விவகரித்துப்பேச முடியாது என்றே அவர்கள் காட்டுகிறார்கள். புத்தருடைய போதனைகளை நன்கு விவகரிக்கும் இக்கால விரிவுரையாளர்கள், இக்கொள்கைகளில் ஒன்றையோ, மற்றொன்றையோ தங்கள் மனப்போக்கின்படி ஒப்புக்கொள்கின்றார்கள்.

இறுதியில் சீவன்களுக்கு ஏற்படும் நிலையைப் பற்றித் தமக்குத் தெரியாத காரணத்தால், புத்தர் அதன் விவரங்களைக் கொடுக்கவில்லை. அக்காரணத்துக்காகப் புத்தரைச் சமுசயவாதியென்றோ, நாஸ்திகவாதியென்றோ எண்ணுபவர், உண்மையில் அவருடைய முக்கிய போதனைகளின் தத்துவங்களைத் தவறவிட்டு

விடுகின்றனர் என்றே கூறவேண்டும்.[1]

இத்தகைய எண்ணம், புத்தர் தம் சீடர்களுக்கு விவகரித்ததைவிட, அவருக்கு அதிகம் தெரியும் என்ற நிலைமைக்கு நேர்மாறுகத் தோன்றும். அவருடைய போக்கை முடிவான கேள்விகளுக்கு ஆணித்தரமான 'உண்டு' அல்லது 'இல்லை' என்ற விடைகளைத் தரும் இன்னலை ஏற்க விரும்பாத ஊக்கமற்ற நாஸ்திகவாத தத்துவத்தின்பாற் சார்த்துவது நியாய வரம்பிற்கு உட்பட்டதாகாது; அல்லது அவருக்கு அவைகளைப் பற்றி யாதும் தெரியாது என்று சொல்லத் தைரியம் இல்லை எனக் கூறுவதும் சரியான முறை

---

1. பேராசிரியர் ஏ. பெரிடேல் கீத்து என்பவர் நாஸ்திக வாதத்துக்குரிய காரணத்தைப் பின்வருமாறு கூறுகிறுர்: "அது இரு தன்மையுள்ள அடிப்படையின் மேல் நிற்பதாய் உள்ளது. இக்கொள்கைகளைப்பற்றிப் புத்தருக்கே உண்மை யானதும், சரியானதுமான கருத்து இல்லை. இதைப் பற்றிய விவகரிப்பானது, மனக்கட்டுப்பாட்டினை ஏற்படுத்தச் சிறிதும் பயன்படாது. அவ்வித மனக் கட்டுப்பாடே நிருவாணத்தை யடைய இன்றியமையாததாக வேண்டப்படுவதொன்றும்." "மேலை நாட்டுத் திருட்டாந்தங்கள் பிரபஞ்சத்தின் உண்மைத் தன்மையையும், காரணத் தன்மையையும் உறுதிப் படுத்துகின்றன. இவை பற்பல சிந்தனையாளர்களால் வெளி யிடப்பட்டுள்ளன; ஆனல், புத்தரால் வெளியிடப்படாத தாகும். ஆயினும், சிந்தனையாளர்கள் கூட, ஆன்மா மரணத் தோடு தானும் இல்லையாகி விடுகின்றது என்பதை மகிழ்ச்சி யோடு ஒப்புக்கொண்டோ அல்லது வெறுத்தோ கூறுகிறுர் கள்." "புத்தர் உண்மையான நாஸ்திகவாதி என்பதும், அவர் தம் காலத்தில் இருந்து வந்த எல்லாவித மதானுஷ்டானங்களை யும், கொள்கைகளையும் ஆராய்ந்தார் என்பதும், நவீன கோட் பாடுகளையும் மதங்களையும் ஆராய்வதனல் நமக்கு ஏற்படும் மனச்சந்துஷ்டியைவிட அதிகமான அமைதி அவருக்கு எவ்வாற் ருலும் கிடைக்கவில்லை என்பதும், மற்றும் அவருக்கு அவ்விஷ யத்தில் எவ்விதமான தீர ஆராய்ந்த கொள்கையோ அல்லது கோட்பாடோ இல்லை என்பதும் ஆகப் பலவித விளக்கங்களும் சட்டபூர்வமாகக் கொள்ளக் கூடியவே என்பது பெறப் படும்"

*(பௌத்த தத்துவம்—(1923), பக்கங்கள் 45, 63).*

யாகாது. நாம் ஓர் இடத்தில் இதைப் படிக்கிறோம்: "ஒருபொழுது கோசாம்பி நகரத்தில் உள்ள சின்சுபாச் சோலையில் ஞானப்பிரானுர் தங்கியிருந்தார். அவர் சின்சுபா மரத்தின் இலைகள் சிலவற்றை எடுத்து வைத்துக்கொண்டு, தம் சீடர்களை நோக்கி, "சீடர்காள், என் கையில் உள்ள சின்சுபா இலைகள் மிகுதியாய் இருக்கின்றனவா, அல்லது அங்கு உள்ள மரத்திலிருக் கிற சின்சுபா இலைகள் மிகுதியாக இருக்கின்றனவா? நீங்கள் கூறுவது என்ன?'' என்றுர். அவர்கள், "அன்பரே, நீங்கள் கையில் கொண்டுள்ள இலைகள் எண்ணிக்கையில் மிகமிகக் குறைவானவையே யாகும். அங்குள்ள மரத்தின் இலைகள் எண்ணிக்கையில் மிகுந் தனவேயல்லவா?'' என்றுர்கள். புத்தர், "சீடர்காள், அது போலவே நான் தெரிந்து கொண்டவை சிலவும், உங்களுக்கு அறிவிக்காதன மிகமிகப் பலவுமாகும். உங்களுக்குத் தெரிவித்ததைவிடத் தெரிவிக்காமலிருப் பதே மிகுதியாகும். அவை யாவற்றையும் உங்களுக்குத் தெரிவிக்காமலிருப்பதற்குரிய காரணம் யாது தெரியுமா? என் சீடர்காள், அதற்குக் காரணம் அத்தகைய விவ கரிப்பு உங்களுக்கு யாதொரு நற்பலனையும் அளிக்காது என்பதே. புனிதமடைவதில் முன்னேற்றம் காண அது ஒரு சிறிதும் உதவாது; அது உலகாயதத்திலிருந்து ஆசைகளை அடக்கியாளும் முயற்சியிலும், மறுபிறப் பெடுப்பதிலிருந்து விடுபடவும், சாந்தி ஞானம் பேரிய ஞானம் நிருவாணம் ஆகியவற்றை யடையவும் வழிகளைத் தெரிவிக்காமல் இருத்தலால், அவைகளை நான் உங்களுக்குக் கூற முயன்றேனில்லை.''[1] மலுஸ்ய புத்தர்[2] அத்யாத்மிகமான விஷயங்களை விவகரித்து விட்டு, புத்தர் அவைகளுக்குரிய காரணங்களைத் தெரி விக்காததனுல், தாம் மனநிறைவு அடையவில்லை என்று வெளிப்படையாகக் கூறுகிறுர். அவமரியாதை என்னும்

1. சம்யுத்தா, v. 437. 2. மஜ்ஜிமா, 63.

எல்லேக்கோட்டினைத் தொட்டுப் பேசுவதே போல், அவர், "என் போதகர் இவைகளுக்குத் தக்க விடைகள் அளிப்பாராஞல், நான் அவரிடத்தில் ஆசாரமுள்ள மத சம்பந்த வாழ்க்கையை மேற்கொள்வேன்; அவர் அவைகளுக்கு விடை கூறவில்லேயெனில், மத வழிப்பாட்டைத் துறந்து உலகாயதத்துக்குத் திரும்பிவிடுவேன். போதகருக்குத் தெரியவில்லே என்ருல், அப்பொழுது நேரான வழி 'எனக்குத் தெரியாது' என்று சொல்வதேயாகும்,'' என அறைகூவுகிருர். மிகவும் ஆழ்ந்த மரியாதையுடன் தாம் அக்கேள்விக்கு விடை கூற இசையவில்லே என்று கூறி, அதற்கு ஓர் உவமைக் கதையும் சொல்கிருர்: "ஒரு மனிதன் நஞ்சில் தோய்த்த அம்பொன்றிஞல் தாக்கப்படுகிருன். அவனுடைய நண்பர்கள் அவனே மருத்துவரிடம் எடுத்துச் செல்கின்ருர்கள். அம்மருத்துவர், அவன் உடம்பில் தைத்த அம்பை மெள்ள மெள்ள எடுக்க முயல்கின்ருர். ஆனல், அடிபட்ட மனிதன் கதறுகிருன். "வேண்டா! நிறுத்துங்கள்! என்னே அம்பால் எய்தவர் யார்? அவ்வாறு செய்தது பெண்ணு அல்லது அந்தணனு? வைசியனு அல்லது சூத்திரனு? அவன் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவன்? அவன் உயரமா அல்லது குளளமா? எய்யப்பட்ட அம்பு எதஞல் ஆக்கப்பட்டது? என்னும் பல விஷயங்கள் எனக்குத் தெரிகிற வரையிலும் அவ்வம்பினேப் பிடுங்கி எடுப்பதற்கு நான் ஒருப்படேன்,'' என்று பற்பல கூறிக்கொண்டே சென்ருன். இதஞல் விளேவது யாது? இக்கேள்விகளுக்கெல்லாம் விடை பகருமுன், அம்மனிதன் இறந்துபடுவான் அல்லனே? இதே போல முடிவில் காணப்படும் நிலேமையைப்பற்றிய பல கேள்விகளுக்குரிய விடைகள் சீடனுக்குக் கிடைப்பதன் முன் அவன் இறந்து விடுவான். அப்படியிருக்க, துன்பத்தைப் பற்றியும், துன்பத்தின் மூல காரணத்தைப்பற்றியும், துன்பத்தின் நீக்கத்தைப்பற்றியும, அத்துன்பம் நீங்குவதற்கான முறைகளேப்

பற்றியும் அறிவது எப்போது? இவற்றை அறியும் முன்னரே மரணம் வாய்த்து விடுகிறதே!''

தம் சீடர்களைத் தங்கள் மனப்போக்குக்கு விட்டு விடாமல், ஆன்மிகக் கட்டுப்பாட்டை அடைய முயற்சி செய்யும் அனுபவ வழியைக் காட்டுவதே புத்தருடைய குறிக்கோளாகும். நம்மைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டிய—அவரால் சரியாக விளக்கமுடியாத—பகுதிகள் பல அதில் இருக்கின்றன. அதனால், தம் சீடர்களைத் தம் வழியைப் பின்பற்றித் தாங்களே பார்த்து அறிந்துகொள்ளுமாறு ஊக்க விரும்புகிறார். அவர், "நாம் நம்முடைய எண்ணங்களை முயன்று அடக்கி, மனத்தைத் தூயதாக்கி, ஆசைகளை மாற்றி யமைத்தோமானால், பொன் போன்ற ஒளியுள்ள சுடர் அல்லது அறன் நம்மிடமிருந்து ஒளிவிட்டு நிற்கும்; முழுமையான நன்மையும், நிரந்தரமான நிலை பெற்ற தர்மமும், அப்பழுக்கற்ற கோயிலில் நிருமாணிக்கப்படும். பார்ப்பவருக்கன்றோ தோற்றம் புலப்பட்டு நிற்கும்?'' என்று கூறுகிறார். புத்தர் தாம் காசியில் செய்த உபந்நியாசத்தில், "நீங்கள் என்னுடைய போதனைகளின்படி நடந்து கொண்டீர்களானால்...... நீங்கள் இந்த வாழ்க்கையிலேயே உண்மையை நேருக்கு நேராகக் காணலாம்,'' எனக் கூறுகிறார். இவ்வளவு உறுதியுடனும், பிரமாணத்துடனும் இங்கே பேசுபவர் ஒரு நாஸ்திகர் அல்லர் என்பதை உணர வேண்டும்.

அவர் நம்பிக்கைக் கேதுவான பல கொள்கைகளை நம்பாவிட்டாலும், பிரபஞ்சத்தின் ஊடே காணப்படும் ஒழுங்கு முறையையோ, உன்னதப் பரம்பொருளையோ, ஆன்மிக வாழ்க்கையின் மதிப்பையோ என்றும் சந்தேகித்தது இல்லை. அவர் அறவழிகளை நன்றாகக் கடைப்பிடித்தொழுக வேண்டும் என்று அடிக்கடி வற்புறுத்தி வந்ததும், கருத்துகளைப் பகுத்தறிவு என்னும் சாணை

யில் அடிக்கடி தீட்டிச் சோதனைக்கு உட் படுத்திவந்ததும், உறுதியான தீவிரமான கருத்தினை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டனவேயாகும். தருமக் கோட்பாடே அவருக்கு உன்னதமான பரம்பொருளாகும். அதுவே மனித விருப்பிற்கும், பிழைப்புக்கும் உரிய விடையாகும். இதன்மேலேதான் இவ்வுலகத்தின் முழுமையான நிலைபேறும் நிருமாணிக்கப்பட்டிருக்கிறது. இதுவே சரித்திரத்தின் பொருளும், எல்லா சீவராசிகளின் இரட்சிப்புமாகும்.

காணக் கிடைக்கும் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு, புத்தர் உண்மையை வெளியிடாவிட்டாலும், அவருக்கு உண்மை தெரியுமென்று நாம் பாவிப்போமானால், இவ்வுண்மையே நாஸ்திகவாதத்தின் கருத்தாக ஏன் இருக்கக்கூடாது? ஆன்மிக உணர்வை—ஒப்பற்ற அப்பரம்பொருளோடு கலந்துறவாடும் தன்மையைப்—பிரத்தியட்ச அனுபவமாகக்காட்டுவதைத் தடுத்து, அதற்கு ஒரு களங்கத்தை ஏற்படுத்த முற்படுகிறவர்கள் புத்தருடைய இக்கொள்கைகளைத் தங்களுக்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டுகின்றார்கள். 'நிருவாணம் என்பது சாசுவதமான இரவில் ஏற்பட்ட முடிவற்ற தூக்கமே' அன்றோ? கடவுள் இல்லாத வானலோகமும், ஆன்மாவே யில்லாத பிறப்பற்ற நிலையும், தொழுதலின்றித் தூய்மையடைதலும் ஆகிய இவைகளே அவருடைய கோட்பாட்டின் பொழிப்பாகும். டி. எச். ஹக்ஸ்லி என்பவர் பின்வரும் செய்தியில் ஒரு நம்பிக்கையை எதிர்பார்க்கிறார்: "மேலை நாட்டுக் கலை விளக்கப்படி, கடவுளே இல்லாததும், மனிதனுக்கு ஆன்மா இல்லை என்று மறுப்பதும், சீவனது நிலை பெற்ற தத்துவத்தின் கொள்கையை ஒரு மோசடியாகக் கருதுவதும், அதை எதிர்பார்ப்பதுகூடப் பாவமாகக் கருதப்படுவதும், பத்தியீடுபாட்டிற்கும் பலிகளுக்கும் எவ்வித நற்பலனும் கிடையாது என்று

மறுத்து மொழிவதும், தங்களுடைய சொந்த முயற்சி யாலே யன்றி மற்றச் சத்தியினுல் விடுதலே அடைய முடியாதாகையால் அச்சத்தி யொன்றினையே பற்றுக் கோடாகக் கொள்ளவேண்டுமென்று அறை கூவலும், ஆதியில் இருந்த புனிதத் தன்மையின் நியதிகளை அறியாது அயலாரின் கைகளை எதிர்பாராத நிலைமை யைக் கொண்டிருத்தலும், கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய அனுட்டான விரதம் யாதொன்றும் தெரியாம லிருத்தலும் ஆகிய இக்கருத்துகள் அடங்கிய கோட் பாடுகள் பழைய உலக அரங்கில் பரந்தும், வெகு விரைவாக விரிவடைந்தும், வெளிநாட்டு மூடநம்பிக்கை களுடன் சேர்ந்து காணப்படினும், இவையே மனித குலத்தின் பெரும் பகுதியின் கொள்கையாகப் பரிண மித்திருக்கிறது."[1] அக்காலத்திய மனதத்துவ நிலை யில் பார்க்கும்பொழுது, அது சூனியவாதமா யிருந் தால், புத்தருடைய போதனைகளுக்குத் தகுந்த வர வேற்பு இருந்திருக்கும் என்ற எண்ணத்துக்கே இடம் இராது. இந்தியாவின் சூழ்நிலையில் காணப்பட்ட மதப் பிரசாரத்தின் தன்மையை நன்குணர்ந்த யாவரும், மத வளர்ச்சிக்கு ஏற்றதாய் உள்ள கோட்பாட்டிற்குச் சூனியவாதம் எனப்படும் 'ஒன்றும் இல்லாத' மாயா வாதத்தையே காரணமாகக் குறிப்பிடுவது முடியாத செயலேயாகும்.

கடவுளரில் மிகவும் மேம்பட்டவரான பிரமாவின் ஆதிகாலப்புகழும், இருப்பும், ஆற்றலும் சந்தேகத்துக்

---

1. ரோமேன்ஸ் சொற்பொழிவு 1893. பாலி அகராதி யில் 'நிப்பாணு' என்னும் பகுதியில் சில்டர்ஸ் என்பார் எழுது கிறுர்: "சாக்கிய முனிவரின் போதனையான சூனிய வாதத்தைவிடத் தெளிந்த போதனை வேறெங்கும் காண முடி யாது (பக்கம் 267, 274).

பர்னுப் என்னும் அறிஞர், 'புத்த மதத்தின் இறுதிக் குறிக் கோள் சூனியவாதமே,' என்றகொள்கைக்கு மிகுந்த ஆதரவு காட்டுகிறுர்.

கிடமானவை என்று புத்தர் வாதித்தாலும், பிரமாவைத் தலைவராகக் கொண்டவர்கள், அவரைவிட மேலான ஒரு பரம்பொருளைக் காணும் பொருட்டு அவர் அவ்வாறு சொல்லியிருக்க வேண்டுமென்று சமாதானம் செய்து கொண்டார்கள். மற்றைய கடவுளர்களைத் தொழுது வந்தவர்கள், தங்களுடைய தொழுகையை வேறோர் உருவத்திற்கு மாற்றி விட்டார்கள். **சிவன், விஷ்ணு** என்னும் இப்பெருங் கடவுளர்களின் புகழ் ஓங்கிய காலம் அது; சிறிது காலத்துக்குள்ளாகவே, புத்தரே, தம் சீடர்களால் மறுத்துரைக்கப்பட்டார். அவருடைய போதனையைக் கேட்டு நடந்து வந்தவர் எவ்வாற்றாலும் நாஸ்திக மதத்தின்பால் பற்றுக் கொண்டவர் அல்லர்.

புத்தருடைய போதனைகளை அவருடைய சூழ்நிலைக்கேற்றவாறு பொருத்திக் கூறினால், அவை மிக்க சுவை யுள்ளனவாயும், சரியானவையாயும் இருக்கும். மற்றும், அழிந்து போகும் இவ்வுலகிற்கு அப்பாலும், பின்பும் உள்ள பேருண்மையை அவர் நம்புகிறாரா இல்லையா என்றும், மனித ஆன்மாவுக்கு மேலானதும், அப்பாற்பட்டதுமான பரமாத்துமாவில் நம்பிக்கை கொண்டிருக்கிறாரா என்றும், நித்திய சீவனே நிருவாணத்தின் உண்மைத் தன்மையாகுமா என்றும் பல கேள்விகளைக் கேட்டலே பொருத்தமானதாகும். இதுவே அவர் நாஸ்திகரா அல்லது உன்னத ஆன்மிக உண்மையில் அதாவது பாரமார்த்திகத்தில் நம்பிக்கை கொண்டவரா என்பதைப் பாகுபடுத்தி அறிந்து அக் கேள்விக்குத் தகுந்த விடையைப் பெற உதவும்.

1. தர்மம் என்பதன் கோட்பாடானது, சுவைமிக்க வரலாற்று விளக்கத்தைக் கொண்டுள்ளது. 'ருதம்' என்று கூறப்படும் நல்லொழுக்கத்துக்கும், நல்லுடம்பிற்கும் உகந்த ஒழுங்குமுறைப்பாட்டின் கருத்து

இந்திய—ஈரானியரின் கொள்கையாகும்.[1] எல்லாப் பொருள்களும் சீவராசிகளும் ஒரு நியதிக்கு உட்பட்டன வேயாகும்; அவை தமக்கெனத் தனியே நிருமாணிக்கப்பட்ட பாதையைப் பின்பற்றிச் செல்கின்றன. வேத காலத்தில் அவ்வெண்ணம் உடல் ஒழுங்குபாட்டி னின்று அறவழி ஒழுங்குபாட்டிற்கு விரிவடைந்து, தன்னுள்ளே சட்டம், வழக்கம், நாகரிகப் பண்பு ஆகிய மனிதன் மேற்கொள்ள வேண்டியவற்றைக் கொண் டுள்ளது. 'ருதம்' என்ற ஒழுங்குமுறைப்பாடானது கடவுள் ஒருவரை நிருமாணிப்பதன்று. அது தானே தெய்விகத்தன்மை பொருந்தியதாயும், தெய்வங்களி னின்று தனித்தே நிற்பதாயும் விளங்குகின்றது; வருண பகவானும் ஆதித்தியர்களும் அதற்குரிய பாது காப்பாளர்களாக மட்டும் விளங்குகின்றார்கள். உபநிஷத் துகளில், 'தர்மத்தை விடச் சிறந்த பொருள் இல்லை. எது தர்மமெனப்படுகிறதோ, அதுவே சத்தியம் அல்லது உண்மையாகும்' என்பன போன்ற வாக் கியங்களை நாம் காண்கின்றோம்.[2] ருதமும் (ஒழுங்கு முறை), சத்தியமும் (உண்மை) ஒரே உண்மைப் பொருளின் அனுபவ அனுமானிகப் பக்கங்களாகக் கருதப்படுகின்றன.[3] உண்மை எனப்படுவது முழுமை யான சந்தவிகற்பமில்லா உலகமேயாகும்.

சரிவர ஒன்று பொருந்தாத் தன்மையும், தனித்து நிற்குந் தன்மையும் உடன்பாடில்லாத் தன்மையும், இசைவு பெறாத் தன்மையும் ஆகிய இவை யாவும் நம்முடைய நிலையற்ற வாழ்க்கையின் அறிகுறிகளாகும்.

---

1. வேதத்திலும், பழைய பாரசீக மொழியிலும், அது சட்டம் அல்லது நியதி என்ற பெயராலேயே வழங்கப்படு கிறது. வேதகாலத்து 'ருதம்' (Rta), புராதன பாரசீக அர்த்தா (Arta), அவஸ்தானின் அஷா (Asha) என்னும் யாவும் ஒன்றே.
2. பிருகதாரணியக உபநிஷத்து, 1. 4, 14.
3. தைத்திரீய உபநிஷத்து, 1. 1, 9.

ஒழுங்குமுறையின் மீது ஏற்படும் அரிய பற்றும், உண்மையைக் காண விழையும் ஆர்வமும், மறு உலகத்தோடு நாம் தொடர்பு கொண்டிருக்கிறோம் என்பதை ஏற்றுக்கொள்வதாகக் காட்டுகின்றன. ஆயினும், உபநிஷத்துகளில் பரம்பொருளே உண்மையான பொருளென்றும், சத்தியமும் தருமமும் அப்பரம்பொருளுக்கு உரிமை ஆக்கி, அவைகளை ஒன்றுபடுத்திக் கூறியிருப்பினும், முன்னர்த் தோன்றிய புத்த மதத்தில், அவ்வுண்மைப் பொருளே பிரகிருதியில் உழன்று வேலை செய்யும் தன்மை கொண்டுள்ளதென்பது வலியுறுத்தப் பட்டிருக்கிறது. பரம்பொருளே உண்மைப்பொருளாகும் என்பதில் சிந்தனையை நிலைநிறுத்துவதிலேற்பட்ட கவனக்குறைவும் அதற்குக் காரணமாகும். தருமம் என்பதே என்றும் நிலைபெற்று நிற்கும் நியதியாகும். இது இயற்கையின் நியதிகளை விவகரித்தும், பிறப்பிற்குரிய காரணத்தின் சங்கிலித் தொடர்பைக் கூறியும், சாதிகளுக்கான சட்ட திட்டங்களை வகுத்தும் நிற்கிறது. "ஐயன்மீர், எவர் அரசர்க்கு அரசராவார்?" "தர்மமே அரசர்க்கு அரசராகும்."[1] அசைக்க முடியாத, உணர இயலாத, அழிவில்லாத சத்தியக் கோட்பாடே அது என்றால், நம்முடைய இவ்வுலக நியாயமென்பது அதன் நிழலின் ஒரு சிறு பகுதியோகும். அதுவே பொருளின் தன்மைக்கும், நிலைக்கும் மெள்ள மெள்ள ஏற்றப்பட்டு, அதன் அடிப்படைக்கும் தோற்றத்துக்கும் காரணமாக்கப்பட்டுள்ளது.

எண்ணற்ற வழிகளில், நேருக்கு நேராகப் பரம்பொருளை நாம் உணர முயல்கின்றோம். ஒவ்வொரு மதமும் அவைகளில் குறிப்பிட்ட ஒரு சாயலை மட்டும் எடுத்துக்கொண்டு, அதையே மையமாக்கி, மற்றவை யாவும் அதைச் சூழ்ந்துள்ளனவாகவே குறிப்பிடுகின்றது. புத்தர் நல்லொழுக்க முறையையே, அதாவது அற

1. அங்குத்தரா, iii.

வழியையே வற்புறுத்திக் கூறினர். அவர் கொள்கையின்படி, சுழலும் நட்சத்திரம் முதல் வாழ்க்கையின் மிகச்சிறிய அசைவு வரையிலும் காணப்படும் எல்லா இயற்கை வழிபாடுகளும், நியதியால் கட்டுப்படுத்தப் பட்டனவேயாகும். நமது கற்பனை நிலையிலும், சிந்தனை உலகத்திலும் இப்பிரபஞ்சம் முழுவதும் உண்மையல்ல வென்றும், இது, ஒழுங்கீனமுற்றிருக்கிறதென்று நினைத்தாலும், அனுபவ முறையில் அக்கொள்கையைப் பயன்படுத்துவதில்லை. உலகம் ஒரு நியதிக்கடங்கிய தத்துவத்தின் தன்மையே என்பதையும், நம்முடைய நம்பிக்கையின் அனுபவத்தால், பெருவாரியாக அது நியாயமானதே என்ற காரணத்தையும் கருதி நாம் பணியாற்றிச் செல்கின்றோம். ஆயினும், இந்த நியதி அறவழியேயாகும். 'மனம் துன்புற்றிருக்கிற பொழுது இப்பிரபஞ்சம் ஒழுங்கற்றுத் தாறுமாருய்த் தோன்றுகிறது; அன்பற்றிருக்கிறது; கொடுமை வாய்ந்ததாகத் தோன்றுகிறது,' என்பதைச் சிந்தனைச் செய்து பார்த்தாலும், நாம் இப்பிரபஞ்சம் ஒழுங்காகச் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டிருக்கிறது என்ற எண்ணத்தோடேயே நடந்துகொள்கிறோம். அறவழிக் கோட்பாடுகள் பரிணமத்தினுல் வெளியே உந்தப்பட்ட தனிப்பட்ட பொருளோ அல்லது பொருளைத் தழுவிய எண்ணங்களோ அல்ல. அவை இப்பிரபஞ்சத்தில் வேர் கொண்டு உள்ளனவே. புத்தருக்குத் தருமம் அல்லது சத்திய வாழ்க்கையானது இப்பிரபஞ்சம் நன்ருக நடப்பதற்குரிய ஊடுருவிச் செலுத்துங் கொள்கையாம். அதுதான் நடைமுறையில் வாழ்வுக்குரியதாகக் கொண்டுவர நாம் எதிர்பார்க்கப்படுகிறோம். ஒவ்வோர் அறவழிபாடும் இருவிதத் தன்மைகளைக் கொண்டுள்ளது. அவை மனிதனுல் பெறக்கூடியதும், பிரபஞ்சத்தினுல் போற்றிப் பாதுகாக்கப்படுவதுமாகும். அதை வாழவைக்க வெளிக்கொணரும் சத்தி

நம்மிடத்தில் இல்லாவிட்டால், அதற்காக நம்மைப் பணியாற்றச் சொல்வதில் பொருளே இல்லை. கிடைக்க முடியாத பலன்கள் அழகாகச் சிந்தனை செய்ய உதவலாம்; ஆனால், அவை நடைமுறைக்கு—அறவழிபாட்டிற்கு—ஏற்றனவாகா. அவை நம்முடைய நன்மதிப்புக்குப் பாத்திரமானவையல்ல. முழுப்பலனை நாம் அடைய முடியும் என்று நாம் நன்றாக வாதிக்கலாம். ஆனால், பிரபஞ்சமானது நம்முடைய விருப்புகள் யாவற்றையும் தகர்த்தெறிய, அதனால் நம் முயற்சிகள் யாவும் பயனற்றுப் போய்விடும். பொருள்களை அவை இருக்கும் தன்மையைவிட நன்றாக விளங்கச் செய்தலை நாம் எதிர்பார்க்க முடியாது. அறவழி முழுமையாகும் நிலையில் இடை வெளியீட்டுக் கொள்கை உண்டு என்ற உறுதிப்பாடு நமக்கு முக்கியமாகத் தேவை; அதற்குரிய கோட்பாட்டை, அழிந்துபோகும் நாம் ஒவ்வொருவரும், அவரவருடைய எல்லை கோலிய சத்திக்குள்ளாகக் கொடுத்து உதவுகிறோம். புத்தர் அத்தகைய உறுதிப்பாட்டினை நமக்கு அளிக்கிறார். நாம் எந்த உண்மையை எளிதில் உறுதியுடன் பற்றுக்கோடாகக் கொள்ளலாமோ, அதுவே தருமம் அல்லது அறவழி என்று கூறுகிறார். இவ்வுலகத்தின் விமோசனமென்பது, தருமத்தின் காரியானுகூலத்தினாலேதான் நிலைபெற்றுள்ளது. "இந்த உலகத்தில் உள்ள எல்லாச் சீவன்களும் தங்களுடைய சிக்கல் பொருந்திய உருவத்தை அறவே ஒழித்துவிடுமாக!"[1] என்று அவர் கூறுகிறார்.

---

1. "சிறந்த வேறுபாடொன்றினை இங்குக் குறிப்பிட வேண்டும். புத்தருடைய தத்துவமானது எல்லாச் சீவராசிகளும் இறுதியிலடையும் நிருவாணத்தைக் குறிப்பிடுகின்றது. கிறிஸ்தவ மதம், இவ்வளவு மேம்பாடு அடைந்திருந்தும், இப்பொழுதும் பலரை முடிவற்ற வேதனைகளுக்கும், தீராத பாவங்களுக்கும் ஆளாக்கி, அவர்களைக் கண்டிக்கின்றது."

(ஜெ. ஈ. கார்பெண்டர் : புத்த மதமும், கிறிஸ்தவ மதமும், 1923. பக்கம், 306.)

எங்கும் நிறைந்ததும், எல்லாம் வல்லதுமான ஒப்பற்ற ஒரு பரம்பொருளால் இவ்வுலகம் ஒழுங்குபட்டு வருகிறது என்ற கொள்கையைப் புத்தர் நம்பாவிட்டாலும், இப்பிரபஞ்சம் அறவழியில் வாழும் வாழ்க்கையைப் புறக்கணித்து நிற்கவில்லை. தருமத்தின் சீரிய உண்மையானது. நம்முடைய முயற்சிகளில் இப்பொழுதுள்ளதைவிட இன்னும் சிறந்த முன்னேற்றத்தைக் காண உந்துவதேயாகும். அனுமானத் தொடர்ச்சியான பிறப்பு இறப்பினுக்கப்பால் மகத்தான ஓர் உண்மை உள்ளது. அது தன்னை நம்புகிறவர்களுக்கு உறுதிப்பாட்டை அளிக்கிறது. தருமம் என்பது கண்ணுக்குப் புலப்படாத சிந்தனையின் உருவமன்று; உணர்ச்சியோடு தன்னை உருவாக்கிய உலகத்தாரின் இதய ஆழத்தில் புதைந்துள்ள உண்மையேயாகும். இந்த அனுமானப் பிரபஞ்சத்தில் யாவும் மறைந்து போகின்றவையாயினும், மறைந்து போகாத ஒன்று இருக்கத்தான் செய்கிறது. அதுவே உலகத்தில் இயற்கை நியதியாகவும், ஆன்மிக நியதியாகவும் பரிணமிக்கிறது. அதுவே இவ்வனுமானப் பிரபஞ்சத்தினை மேன்மையடையச் செய்யும் பண்பாகும். அதற்கு நம்முடைய மரியாதையையும் வணக்கத்தையும் செலுத்த வேண்டுவது அவசியமே. போதியடைந்த பிறகு புத்தர் தருமத்தின் நிழலிலேயே தங்கியிருக்க விரும்பினர். அத்தருமத்துக்குரிய கண்ணியமும் மரியாதையும் கொடுத்தருளினர்[1] தருமத்தின் உள்ளே ஊடுருவிப் பார்த்தலே ஞானப்பேறு பெறுவதாகும் (தம்மவிபசன்ன).

எண்வகைப் பெரு வழிகளின் இறுதிக்கட்டமே உள்ளொளியை வெற்றியாகப் பெறுதலாகும். அதுவே இப்பிறவியிலேயே பற்றறுத்தலும், உட்கிடக்கையின் நோக்கத்தினின்று விடுதலை பெறுதலும், தெளிவடை

1. சம்யுத்தா ii. 138 அடிக்குறிப்பு; அங்குத்தரா, ii. 20 அடிக்குறிப்பு.

தலும் உணர்தலும் ஆகும். இந்த உள்ளொளி மானசிக மான உடல் நிலையா? அதாவது, புத்தர் கூறுவதுபோல காதலுக்குரிய பொருள் ஒன்று இல்லாமலே, அதன் மீது காதல் கொள்ளும் நிலையா? இதில் நாம் நேர்முறை யானதும், உடனடியானதுமான உண்மைப் பேரொளியை இங்கேயே இப்பொழுதே பெறுகிறோம் என்று அவர் கூறுகிறார்.[1] முளைத்தெழும் புலன்களுக் குள்ளாக மறைந்திருக்கும் ஆன்மிகச் சத்தியை நேரடி யாக நாம் பற்றிக்கொள்கிறோம்; குழறுபடியிலிருந்து ஒழுங்குபாட்டிற்கு, அநித்தியத்திலிருந்து நித்தியமான பரம்பொருளை அடைகின்றோம். இதுவே பிரபஞ்ச உற்பத்தியின் உண்மைப் பொருளாகும். இந்த உள் ளொளி, மனத்தைப் புறத்தே காணப்படும் உண்மைப் பொருள்கள் மீது பற்றில்லாதவாறு செய்வதனாலேயே கிடைக்கப் பெறுகிறது. அறவழிப் போதனாமுறையில் நம் மனத்தைத் தூய்மையாக்கும் பொழுதும், நம் மனத் தின் ஆழத்தில் படிந்து அழுந்திக் கிடக்கும் மொத்த ஞாபக சத்தியை ஒரு மையத்தில் தோன்றச் செய்து பார்க்கும்பொழுதும், நமது உள்ளே பதிந்துகிடக்கும் தெய்விக அனுபவங்களை நாம் தட்டி எழுப்பிவிடு கிறோம்; அது காரணமாக, உள்ளொளி தீட்சணியம் அடைந்ததும், ஆனந்த விடுதலையோடு கூடிய ஒரு புதிய அனுபவம் உண்டாகிறது. 'புத்த பிரானுக்கு ஆன்மிக அனுபவம் மட்டுமே உண்டு; ஆனால், ஆன் மிகப் பொருள் எதுவும் இல்லை,' என்று நமக்குக் கூறு கிறவர்கள் பௌத்த நூல்களை எதிர்ப்பவர்களும், கார

1. முந்திய பாலி பாடங்களுள் ஒன்றில், நிருவாணம் பின் வருமாறு வருணிக்கப்பட்டுள்ளது. "அது துல்லியமானதும், ஞானிகளால் மட்டும் நிருணயிக்கப் படக்கூடியதும், விவரிக்க முடியாததும், தனக்குள் தானே அறியுந்தன்மைவாய்ந்தது மாகும்."
"நிபுணோ பண்டிதவேதநீயோ, அடக்கவிசாரோ, பச்சத்தம் வெதிதப்போ விந்நூஹி."

ணமேதுமின்றித் தம் கூற்றைத் தாமே மறுக்கிருர் என்ற குற்றச்சாட்டினை அவர் மீது சுமத்துபவர்களும் ஆவார்கள்.

உபநிஷத்துகள் கூறும் பிரமம் என்னும் ஒன்றினுக்கு ஏற்பட்ட விளக்கத்தைத் தருமம் என்ற வேறு பெயரால் குறிப்பிடுகிருர் புத்தர். என்றும் நிலையில்லாத இவ்வுலகில் நீதியின் பாகுபாட்டினை எடுத்தியம்பும் குணத்துக்காக அதைத் தருமம் அல்லது அறவழி என்றே வழங்கத் தைரியங்கொண்டார். தருமத்தின் வழியே பிரமத்தின் வழியுமாகும்.[1] தருமத்தில் வாழ்வது பிரமத்தில் வாழ்வதாகும்.[2] ததாகதர் தருமத்தையும் பிரமத்தையும் தம் உடலாகக் கொண்டிருப்பதாகக் கூறப்படுவதால், அவர் தருமத்திலும் பிரமத்திலும் ஒன்றிக் காணப்படுகிருர்.[3] எண் வகை மார்க்கமே **பிரமயானம்** அல்லது **தருமயானம்** என்னும் பெயரால் எப்பாகுபாடுமின்றியே வழங்கப் படுகிறது.

2. தன்னலமில்லாக்கொள்கை (அனத்தா), அகம் பாவம் ஒரு பொருளாக்கப்படுவதையே வலியுறுத்துகிறது. **அலகுத்தூபம சுத்தாவில்**[4] பரம்பொருளாகியபேருண்மையும் அழியக்கூடியதொன்றே என்னும் கோட்பாட்டினைப் போதனை செய்வதாகக் குற்றச்சாட்டு ஒன்று புத்தர் மீது சுமத்தப்படுகிறது. ஆனுல், அவர் அதை நிர்த்தாட்சணியமாக மறுக்கிருர். மனிதர்களை ஐந்து பிரிவுகளாகிய உடல் உருவம், நுகர்ச்சி, உணர்ச்சி, கோபதாபங்கள், விவேகம் ஆகியவற்றுள் அடக்கும் அநாத்துமாவைமட்டும் உதறித் தள்ளவேண்டும் என்று கட்டளையிடுவதாக அவர் வாதிக்கிருர். அவர்

---

1. சம்யுத்தா, i. 141.
2. அங்குத்தரா, i. 207.
3. தீகா, iii. 84,81.
4. மஜ்ஜிமா, i. 140.

ஒருபொழுது, மன உறுதியில்லாத இளைஞர் முப்பது பேர் கூட்டமாய்த் தத்தம் மனைவியருடன் ஒரு நந்த வனத்தில் தம்பொழுதைக் கழித்துக் கொண்டிருப்பதைக் கண்ணுற்றார். அவர்களுள் ஒருவனுக்கு மட்டும் மனைவி என்ற முறையில் ஒரு மங்கை இல்லாத காரணத்துக் காகப் பணிப்பெண் ஒருத்தியை அவர்கள் தங்களுடன் அழைத்துச் சென்றார்கள். அவர்கள் யாவரும் தங்கள் கருத்தை எங்கோ செலுத்திக் கொண்டிருந்தபொழுது, யாவரும் அறியாவண்ணம் அப்பணிப்பெண் அவர்களு டைய பண்டங்களையும் பொருள்களையும் கவர்ந்து எங்கோ மறைந்துவிட்டாள். யாவரும் அச்சேடியைத் தேடி அலையுந்தருணம், புத்தரை அணுகி, "இங்கு நீவிர் மங்கை நல்லாள் ஒருத்தியைக் கண்டதுண்டோ?" என்று வினவினர். அவர், "இளைஞர்காள், நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? பெண் ஒருத்தியைத் தேடிக் கொண்டு செல்வது நல்லதா? அல்லது உங்களை நீங்களே தேடிச் செல்வது நல்லதா? இவற்றில் எது மேலானது? கூறுங்கள்," என்று கேட்டார். அதற்கு அவர்கள், "போதகரே, எங்களை நாங்கள் தேடிச் செல்வதே மேலானது,"[1] என்று பதிலிறுத்தார்கள்.

**தம்மபதம்** கூறுகிறது: "ஆன்மா என்பதே ஆன்மா வின் போதகர் (எசமானர்); வேறு யார் போதகராக (எசமானராக) இருக்க முடியும்? நன்கு அடக்கப்பட்ட ஆன்மா, மற்றவர் காண அரிதாயுள்ள தலைவரைத் தான் கண்டுகொள்ளுகிறது."[2] அற்புதமான ஒரு பகுதி யில்[3] அவர் கூறுகிறார்: "என் சீடர்காள், உங்களுக்குச் சொந்தமில்லாத யாவற்றையும் உடன் துறந்து

---

1. *விநயம், 1.23.*
2. " அத்தாஹி அத்தனோ நாதோ கொ ஹி நாதோ பரோ ஸியா
   அத்தநாஹி சுதந்தேன நாதம் லபதி துல்லபம்."*(160)*
3. மஜ்ஜிமா, 22.

விடுங்கள். ஒருவன் இந்த ஜேதவனத்தில் உள்ள புற்கள், கிளைகள், கொம்புகள், இலைகள் ஆகிய யாவற்றையும் எடுத்துக்கொண்டாலும், அல்லது கொளுத்தினுலும், அல்லது தன் பயனுக்காகப் பயன்படுத்திக் கொண்டாலும் அப்பொழுது நீங்கள் நம்மையெல்லாம் எடுத்துக் கொண்டதாகவோ, கொளுத்தியதாகவோ, தன் பயனுக்காகப் பயன்படுத்துவதாகவோ உங்களுக்குத் தோன்றுமா?'' "இல்லை, இல்லை; அறவே இல்லை போதகரே!'' "அப்படியாயின், ஏன் அவ்வாறு தோன்றுவதில்லை?'' "ஏனெனில் போதகரே, அது எம்முடைய ஆன்மாவாகவாவது அல்லது அதற்குச் சொந்தமாகவாவது இல்லை.'' "அதேபோல ஸ்கந்தங்களாகிய பொறிகளின் உணர்ச்சிகளைத் தகர்த்தெறியுங்கள்,'' என்று புத்தர் உரைத்தார். இதனுல் பொறிகளும் அவைகளின் இயக்கங்களும் உண்மையான ஆன்ம சொருபத்துடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளவில்லை என்பதும், அவன் இருக்கும் காட்டிற்கும் அவனுக்கும் உள்ள தொடர்பு எவ்வாறு சம்பந்தமில்லாமலிருக்கிறதோ, அவ்வாறே புலன் நுகர்ச்சிக்கும் ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பு எவ்வித சம்பந்தமும் இல்லாததாகும் என்பதும் தெளிவாகின்றன. "என்னுடையது என்று சொல்லத் தக்க எதையும் என்னிடம் விட்டு வைக்காதே,'' என்று **பிளாட்டினஸ்** கூறுகிருர். மனிதனிடத்தில் நிலைத்து நிற்கக்கூடிய உண்மைப் பொருள் ஒன்று உண்டு. அது சாதாரணமாயும், தானே இயங்குந் தன்மை கொண்டதாயும், அழிந்து மாறுதலடையும் மற்றப் பொறிகளின் இயக்கங்களோடு மாறுபடுத்திக் காட்டக்கூடியதாயும் இருக்கிறது. மாறுதலடையக் கூடியதும், அழிந்துவிடக் கூடியதுமான எதையும் ஆன்மா என்ற சொல்லால் வழங்க முடியுமா என்று புத்தர் கேட்கும்பொழுது, அத்தகைய ஆன்மா

என்னும் ஒன்று எங்கோ இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறார் என்பது வெளிப்படையாகத் தெரிகின்ற தன்றோ?[1] இந்தக் கருத்து, புத்த மதக் கோட்பாட்டால் உறுதிப்படுத்தப்படுகிறது. "இது என்னுடையதன்று; இது நான் அன்று; நான் இது அன்று." இந்த எதிர் மறைகள் ஆன்மாவுக்கும், ஆன்மா அல்லாத பொருளுக்கும் உள்ள முக்கியமான வேற்றுமையைத் தெரிவிப்பதில் முனைகின்றன. அது அனுமான உறுதிப்பாடுகளுக்கு முற்றிலும் வெளியே நிற்கும் ஒன்றாகும். நம் ஆன்மாவினையே விளக்காக (அத்த தீபம்) பயன்படுத்தும்படி புத்தர் கூறும்போதும், ஆன்மாவையே புகலிடமாக (அத்த சரணம்)[2] அடைய வேண்டும் என்று அவர் கூறும்போதும், உண்மையில் அவர் குறிப்பிடுவது நம்முள் நிற்கும்—எங்கும் பரந்து நிற்கும்—பரமாத்துமாவினையேயன்றி, மாறுதலடையும் பொறிகளின் இயக்கங்களை அன்று.

அனுமானக் கூட்டுறவைத் தவிர ஆன்மாவில் வேறொன்றும் இல்லையா? ஐம்புலன்களால் மட்டும் ஒருவன் அறிந்துகொள்ளப்படுகிறானா? இந்தக் கேள் விக்கு, 'அவ்வித உறவு, சொற்களால் விவகரிக்க முடியாத தொன்றாகும்,' என்று எப்பொழுதும் சொல்லக் கூடியதே விடையாகும்.[3] பஞ்சபூதங்களின் கூட்டுறவுப்

---

1. ஒப்பு நோக்குக: "மூட்டையும் மூட்டைத் தூக்கி யும்," என்ற போதனையைப் பார்க்க.

2. மகாபரிநிப்பாண சுத்தா ii. 26; சம்யுத்தா நிகாயா, 1-75 (உதான 47). "எவர் ஒருவர் இவ்வுலகில் ஆன்மா வைக் காட்டிலும் அபூர்வமான பொருள் இல்லை என்பதைக் கண்டு கொள்ளுகிறாரோ, அவரே அத்தகாமோ என்று ஒப்புக் கொள்ளப்படுகிறார்." "நா...பியதரம் அத்தன க்வஸி."

3. அவருடைய இந்த விடை உடன்பாடானாலும், எதிர் மறையானாலும், அனர்த்தத்தை விளைவிக்கக் கூடியதே என்று புத்தர் கருதுகிறார். உடன்பாட்டுப் பதிலானது நிலைபெற்ற கொள்கையை (சாசுவதவாதம்) நிலை நாட்டுவதிலேயும், எதிர்

பொருள்களே அவன் என்று ஒன்ருென்று ஒப்புமை காட்டக் கூடியதன்று; அவைகளினின்று பிரிந்து தனித்து வேறுபட்டு நிற்பவன் என்ருவது சொல்லக் கூடியதுமன்று.

சாரிபுத்தர் **சதி**[1] என்பவருடன் உரையாடல் நிகழ்த்தும் பொழுது, ததாகதர் பஞ்ச பூதங்களின் கூட்டுறவுப் பொருளாலாகியவரோ அல்லது அவை களிலிருந்து தனித்து வேறுபட்டவரோ அல்லர் என்பதைக் கவனத்திற்குக் கொண்டுவருகிருர். பற்பல பகுதிகளில் உண்மையான ஆன்மாவானது, நிலை யான தர்மம்[2] என்று சொல்லப்படும் பரமாத்துமாவோடு சேர்ந்ததே என்பது நமக்கு நன்கு எடுத்துக் காட்டப் படுகிறது.

மனிதனது கருப்பொருளும் மையமும் எங்கும் நிலைகொண்டிருக்கும் உயிர்ப் பொருளாகிய ஆன்மாவே என்று உபநிஷத்துகள் நிலைநிறுத்தும்பொழுது, புத்த பிரானுர் புதிய மனித சொரூபத்தின் பரிணுமத்தையும், குணத்தின் புனரமைப்பையும் வற்புறுத்திக் கூறுகிருர்.

---

மறைப் பதிலானது ஒன்றுமேயில்லாத சூனியவாதத்தை (உச்சேதவாதம்) நிலை நாட்டுவதிலேயும் கொண்டுவிடும். புத்தர் இவ்விரு அதிதீவிரக் கொள்கைகளையும் புறக்கணிக் கிருர்.

ஒப்பு நோக்குக: அத்வய வஜ்ரசங்கிரகம்:

"ஸாஸ்வதோச்சேத நிர்முக்தம் தத்வம் ஸௌகத சம் மதம்." (பக்கம் 62). நாகார்ஜுனர் புத்தர்கள் போதித்த தாகச் சொல்லுகிருர்: "ஆன்மா உண்டு; ஆன்மா அல்லாத பொருள் உண்டு (அநாத்துமா - பிரகிருதி); மற்றும் இத்துடன் ஆன்மாவோ அல்லது அநாத்துமா-பிரகிருதியோ எதுவும் இல்லை."

"ஆத்மேதி அபிபிரஞ்னபீடம் அநாத்மேதி அபிதேசிதம்
புத்தைர் நாத்துமா நா ஸஞத்மா கஸ்சித் இதி
அபிதேசிதம்."

(மூலமாத்யமிக காரிகா, xviii. 6).

1. மஜ்ஜிமா, 1.256 அடிக் குறிப்பு.
2. அங்குத்தரா, 1.149.

மனித சொரூபம் முழுவதையும் மாற்றியமைத்தா லொழிய, அழுந்திக் கிடக்கும் ஆன்மாவைக் கண்டு பிடிக்க முடியாது. மனிதனது குறிக்கோள் அவன் யாதாகி இருக்கவேண்டுமோ, அதுவாகி யிருப்பதே யாகும். ஒருவன் ஆன்மாவின் உள்ளீட்டிலேயே வளர்ச்சியடைய வேண்டும். நாம் சாரத்தில் தெய்விகத் தன்மை அடைந்தவர்களாய் விளங்கும் காரணத்தால், உண்மையில் நாம் பிரிக்கப்பட்டவர் அல்லேம் என்பதைச் சிந்தனை செய்யும் அபாயத்திலிருந்து மீள புத்தர் நம்மை எச்சரிக்கிறார். உண்மையில் நாம் தெய்விக மடைவதே நமது இறுதிக் கட்டமாகும். "இந்தப் பிறவியிலேயே, இடர் நீக்கப்பட்டு, சாந்த மடையப் பெற்று, ஆன்மாவே பிரமமாக (பிரமபூதம்) ஆகிவிட்டிருக்கும் ஆனந்தமாகிய அனுபவத்தில் திளைத்து விட்டார்."[1] ஆன்மானுபவத்தை உணர்வதற் குத் தளைகளையும் திரைகளையும் நீக்கி வைப்பது இன்றியமையாததும், கடினமான நீதி வழியுமாகும். 'மனிதன் ஞானத்தால் விடுதலை பெறுகிறான்,' என்று உபநிஷத்துகள் கூறினால், 'ஆசையை விட்டொழித்த வனெவனோ, அவன் ஆனந்தமடைகிறான்,' என்று புத்தர் வற்புறுத்துகிறார். எவனது வாழ்க்கை சுக போகங்களில் பயத்துடனும் வெறுப்புடனும் பாழ்பட்டு நிற்கின்றதோ, கோபத்தாலும் சிறுமையாலும் மூடிக் கிடக்கின்றதோ, அவன் அத்தகைய ஞான சித்தியைப் பெறவோ அல்லது ஆனந்தத்தை அடையவோ முடி யாது. 'குறிக்கோளைவிட அற வழியே (மார்க்கம்) சிறந்தது,' என்று புத்தர் வற்புறுத்துகிறார். ஆயினும், பிரபஞ்ச முழுவதும் வியாபித்துள்ள ஆன்ம சத்தியின் உண்மையினை, மாறுதலடையும் தன்மை வாய்ந்த ஐம்புலன்களின் அனுமானக் கூட்டுறவு இயக்கமாக நினைத்து மனம் குழம்பக் கூடாது என்று குறிப்பிடு கிறார்.

1. மஜ்ஜிமா, 1.344; ii.159; அங்குத்தரா, ii. 211.

ஒவ்வொருவரும் முயற்சி செய்து முடிவில் அடைய வேண்டிய ஆனந்தக் கடலாகிய நிருவாணம் என்னும் கொள்கையை அன்றுடம் நிலவி வருகின்ற சிந்தனைச் சுடர்களிலிருந்து எடுத்து புத்தர் உருவாக்கியிருக்கிறார்; அது உபநிஷத்துகள் கூறும் மோக்ஷம் (விடுதலை) என்பதற்கு இணையாகச் செல்கின்றது. 'நிருவாணம்' என்னும் சொற்குறியீடு உபநிஷத்துகளிலும் பகவத் கீதையிலும் வருகிறது. அதற்கு, ஆசாபாசங்களைத் தகர்த்தெறிதலும், பிரமத்தினிடத்தில் அல்லது பரமாத்மாவினிடத்தில் மீண்டும் ஐக்கியமாகிவிடுதல் (பிரம நிருவாணம்) என்பதே பொருளாம். ஒன்றுமில்லாமல் போவதென்பதோ, சூனியத்தில் முடிவு பெறுவதென்பதோ அதன் பொருள் அன்று; ஆனால், அஃது ஆசை என்னும் பெரு நெருப்பினை அணைத்துச் சாம்பலாக்குதலும், முழுமைப் பொருளுடன் கலந்து ஆனந்தமுறுதலும் ஆகும்.[1] அதில் உற்பத்திக்குரிய காரணச் சங்கிலி அறவே அறுபட்டு, மறு பிறப்பென்பதே இல்லையாகிவிடுகிறது. 'பிரமப்பிராப்தி, பிரமபூதா' என்னும் சொற்களை உன்னத நிலையைத் தெரிவிக்கப் புத்தர் பயன்படுத்துகிறார். அது இந்தப் பிறவியிலேயே, உடல் இறந்து போவதற்கு முன்னரே அடையக் கூடிய தொன்றும். பிறப்பும் மூப்பு மற்ற, பிணியும் இறப்புமற்ற, நோயும் குறைபாடு மற்ற, சொற்களால் விவகரிக்க முடியாத உன்னத நிருவாண நிலையினைத் தாம் எப்படி எய்தினார் என்பதைப் புத்தர் வருணிக்கின்றார். **விசாகன்** என்ற பெயர்

---

1. விஷ்ணு புராணத்தில், கடவுளிடத்தில் தன்னலமற்றுக் காட்டும் பத்தியானது நிருவாணத்தையடைய உதவி செய்கிறது என்பது கூறப்பட்டிருக்கிறது. "பிராபனேதி ஆராதிதே விஷ்ணே நிர்வாணம் அபிசோத்தமம்."

பூண்ட பாமரன் ஒருவன் **தம்மதின்ன** என்ற பௌத்த பிக்ஷுணியை நோக்கி, "நிருவாணம் என்பது யாது?" என்று கேட்டான். அதற்கு அவள், "விசாகனே, நீ உன் கேள்வியை மிக ஆழ்ந்து சிந்தித்துக் கேட்கிறாய்! மத நம்பிக்கையுள்ள ஆசார வாழ்க்கையே நிருவாணத்தில் அழுந்திக்கிடக்கிறது; அதன் குறிக்கோள் நிருவாணமே; அதன் முடிவும் நிருவாணமே. உனக்கு விருப்ப மிருப்பின், போதகரிடம் சென்று கேட்பாயாக! அவர் விவகரிக்கிறபடி உன் மனத்தில் பதித்துக்கொள்," என்றாள். புத்தர் அம்மனிதனைப் பார்த்து, "பிக்ஷுணி தம்மதின்ன மிகவும் படித்தவள்; மிகுந்த ஞானம் கைவரப்பெற்றவள்; என்னை அக்கேள்வி கேட்டிருந்தால், நானும் அவள் கூறியபடியேதான் விடை கூறியிருப் பேன். அதுதான் அதற்குரியவிடை. அதை நீ உன் மனத் தில் நன்கு பதித்துக் கொள்வாயாக,"[1] என்று கூறினார். நாம் இப்பிறவியிலேயே துன்பத்துக்கு ஒரு முடிவை உண்டாக்கலாம்.[2] சவக் குழியில் இடப்பட்ட பின்னர் நிறைவேறக் கூடிய வாக்குறுதிகளைக் கொடுப்பதில் புத்த பிரானார் திருத்தி அடையவில்லை; ஆனால், நம் உயிர் உடலில் இருந்து, நாம் வாழும்பொழுதே பெறக் கூடிய ஆன்ம தரிசனத்தைப் பற்றிப் பேசுகிறார். புனித மான மலைமீது ஏறிச் சென்றவர், தம் முகம் ஒளி பெற்றுத் திரும்பி வருகின்றனர். மோகலானா என்பவர் சாரிபுத்தரை நோக்கி, "அன்பரே, உம்முடைய சித்தாந் தங்கள் மிகவும் தெளிவாய் இருக்கின்றன; உமது தோலின் நிறம் சுத்தமாயும், தூயதாயும் உள்ளது; அதனால் நீவிர் அமரத்தன்மையை அடைந்துவிட்ட தாகக் கூறமுடியுமா?" என்று வினவினார். "ஆம், அன்பரே, நான் அமரத்தன்மை அடைந்துவிட்டேன்,"

---

1. மஜ்ஜிமா, 1·304.
2. "தித்தே தம்மே துக்கஸ் அந்தகாரோ ஹோதி." (மஜ்ஜிமா, 9).

என்ருர் சாரிபுத்தர். நிருவாணமென்பது இப்பிறவியிலேயே கிடைக்கக் கூடிய ஆன்மிக நிலையும், புத்தியினுலும், சமூகத் தொண்டினுலும் பொருந்தக் கூடிய நிலையுமாகும். தன்னயம் என்னும் உணர்ச்சி அதில் முழுவதும் கொல்லப்படுகிறது. புத்தருடைய சீடர் இருவர் அவரை நோக்கி, "போதகரே, எவன் ஒருவன் ஞான நிலையாகிய நிருவாணம் அடையப் பெறுகிருனே, அவன் மீண்டும் முன் போலப் பிறவி எடுக்கும் இறக்கையை இழந்து விடுகின்ருன். உயர்ந்த ஞானத்தால், முழுமையான ஞானத்தால்', விடுதலை பெறுகின்ருன். அவனுக்கு, 'மற்றவன் என்னைவிடச் சிறந்தவன்; எனக்கு ஈடானவன்; என்னைவிடத் தாழ்ந்தவன்,' என்ற எண்ணம் எப்பொழுதும் உண்டாவதில்லை," என்றனர். அதற்குப் புத்தர், "உண்மையான வாழ்க்கை வாழ்பவர் தாம் அடைந்த ஞானப் பேற்றினை அவ்வாறே எடுத்துரைக்கின்றனர்; தாம் அடைந்த இலாபத்தைக் கூறுகின்றனரே தவிர, 'நான்' (அத்தா) என்பதைப் பற்றிப் பேசுவதே இல்லை,"[1] என்று கூறினுர்.

இறப்பும் பிறப்பும் நிருவாணம் அடைந்தவர்களைக் கட்டுப்படுத்துகிறதில்லை என்ற காரணத்தால், அது அழிவில்லாத நிலைபெற்றதொன்ருகும். அது தன்னுடன் மிகவும் உன்னத நிலைவாய்ந்த ஆனந்தத்தைக் கொண்டுவருகிறது. அது தேர, தேரீ ஆகியவர்களின் பெரும்பான்மையான செய்யுளாக்கத்திற்கு ஊக்கமளிக்கிறது. உடல் இறந்தபொழுது என்ன நிகழ்கிறது? ஞானப் பேறு பெற்றவன் அத்துடன் நின்றுவிடுகிருனு, அல்லது அனுபவ உலகத்திேைடு கொண்ட தொடர்பை மட்டும் நீக்கிவிட்டு விளங்கும் வேறு உலகத்தின் ஆனந்தத்தில் நிலைகொள்ளச் செய்கிருனு? இவற்றில் உண்மையான நிலை எது? புத்த

1. அங்குத்தரா, iii. 359.

பிரானுர் இக்கேள்விக்குப் பதிலளிக்க மறுத்துவிடுகிருர். நிருவாணம் என்பது சூனியவர்தம் என்ற கொள்கையை நிறுவப் போதிய மதத் தொடர்புள்ள கோட்பாடுகளேக் காட்டுதல் அருமைப்பாடுடையதாகும். மிகவும் சிறந்த சொற்களால், ஆவேசப் பேச்சால், புனிதத் தன்மையின் நிலேயையும், அறவழியில் அடைந்துள்ள முழுமைத் தன்மையையும் நமக்குப் பௌத்த மத நூல்கள் அறிவிக்கும்பொழுது, அவை பேசுவது இறப்பைப்பற்றியன்று. பண்பாடு மிக்க வழியின் பலனும், ஆசையினின்று விடுதலே பெறுதலும், இடையீடு என்பதே அறியாத ஓய்வும், தேவர்களும் பொருமை கொள்ளத்தக்க அத்தகைய பிறப்பும், சகல சீவராசிகளின் முடிவிடமும், ஆகிய இவற்றைத் தெரிவிக்கும் நிருவாணம் என்பது சூனியமன்று. அது தனித்து வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்பட்ட இன்னல்களேத் தகர்த்தெறிவதாகும்; கால வரையில்லாத முழுமைத்தன்மையில் என்றும் மாறுபாடடையாத வாழ்க்கையாகும். அது பழைய பிறப்பிணமட்டும் திருத்திக்கொண்டு வாழ்வதன்று; ஆனுல், அது இப்பொழுது வாழ்வதும், முன்னே வாழ்ந்தது மாகிய எல்லா நிலேகளின் முடிவாகும்; அதை இப்பொழுது, இங்கே இருக்கும் நிலேயிளுேடு எதிர் ஒப்புமைப்படுத்தலாம். 'இறப்பற்ற, முடிவற்ற, மாற்றமற்ற' என்ற சொற்களால் அதைக் குறிப்பிடும் போது, அவை அதன் குணத்திணக் குறிப்பிடுகின்றனவேயன்றி, அது எவ்வளவு காலம் இருந்தது என்பதைக் குறிப்பிடவில்லே. "எவர் ஒருவர் பேரின்ப வாழ்க்கையை அடைந்தாரோ, அவரை எந்தவித அளவாலும் அளவிட்டுக் கூறமுடியாது. அவரைப் பற்றிப் பேசச் சொற்களே இல்லே. பிறவிக்குரிய காரணங்கள் யாவும் ஒழிக்கப்பட்டுவிடுவதால், அவ்வாறே சொல்லக் கூடிய வழிகள் யாவும் ஒழிக்கப்பட்டுவிடுகின்றன."

**அக்கி - வச்சகொத்த சுத்தா**[1]வில் எரிபொருள் முழுவதும் தீர்ந்தவுடன், எரிவது தோன்ருமல் நின்று விடுகிறதென்று கூறப்படுகிறது. அதேபோல், வாழ்க்கைத் தீக்கு எரிபொருளாகப் பயன்படும் ஆசாபாசங்கள் மறைந்துவிட்ட பொழுது, அதன் எரிபொருளும் தீர்ந்து விடுகிறது. வெளிப்படையாகத் தோன்றுந்தீயினை அறவே அணைத்து விடுவது மட்டும் நிரந்தர விடுதலை பெற்று விடுவதாகாது.[2] உண்மையில் அணைத்து விடுவது மோகமாகிய தீயும், வெறுப்புத்தீயும், சஞ்சலத் தீயுமேயாகும். **பசெநடி** என்ற அரசரிடம் பிக்ஷுணி **கேமா,** "போதகர் அதை விவகரித்துக் கூறவில்லை," என்கிருள். "ஏன் போதகர் விவகரிக்கவில்லை?" "அரசே, உம்மை ஒரு கேள்வி கேட்கிறேன். உமக்கு எப்படித் தோன்றுகிறதோ, அவ்வாறே பதில் கூறும். அரசரே நீங்கள் நினைப்பது யாது? கங்கைப் படுகையில் காணப்படும் மணலின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு இவ்வளவு மணல்—நூறு, ஆயிரம், அல்லது நூருயிரம் என்று எண்ணிக் காட்டக்கூடிய—கணக்கியல் கற்ற கணக்கப்பிள்ளை எவனுகிலும் உங்களிடம் இருக்கிருனு?" "இல்லை, பூசிக்கத் தகுந்தவரே!" "உங்களிடம் சமுத்திரத்தில் காணப்படும் நீரின் அளவினை அளந்து அது இத்தனைபடி—நூறு படி, ஆயிரம் படி அல்லது நூருயிரம் படி என்று அளந்து காட்டக் கூடிய—கணக்கியல் கற்ற கணக்கப்பிள்ளை எவனுகிலும் இருக்கிருனு?" "இல்லை, பெருந்தகையீர்!" "ஏன் இல்லை?" "சான்ருேரே, கடல் ஆழமாயும் அளவிட முடியாததாயும் இருக்கிறது." "அதே போல அரசரே, எந்த உடம்பினுல் ததாகதர் மறைந்து விட்டார் என்று

---

1. மஜ்ஜிமா, i. 487.

2. ஸ்வேதாஸ்வர உபநிஷத்துக் கூறுகிறது : "அகண்ட ஆன்மாவானது தீர்ந்துபோன எரிபொருளின் தீயினுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது."

விவகரித்து விளக்கம் அளிக்கப்படுகிறதோ, வேரில் பிளக்கப்பட்டுக் கீழே கிடத்தப்படுகிறதோ, ஒன்றுக்கும் உதவாத இனிமேல் முளைத்தெழாதவாறு தென்னை மரம்போலச் சாய்க்கப்பட்டுக் கிடத்தப்படுகிறதோ, அந்த உடல் என்ற பெயரினின்று முழுவதும் விடுதலையடையப்பெற்ற ததாகதர் என்ற சாகரம், சமுத்திரத்தைப் போலவே மிகவும் ஆழமானது; அளவிட முடியாதது; ஆழத்தை அளக்க முடியாதது.''[1]

அழிந்து போகும் இப்பூத உடலினின்று விடுதலை பெற்றுச் சென்ற ஆன்மா உண்மையே; ஆயினும், அது சொற்களால் விவகரிக்க முடியாததொன்ரும். தீயவை யாவும் அழியப்பெற்ற பிக்ஷு ஒருவர் இறக்கும் பொழுது அவர் நிருவாணம் அடைகிருர் என்றும், அவர் மீண்டும் பிறப்பதில்லை என்றும் **யமகர்** என்பவர் ஆதரித்துப் பேச, சாரிபுத்தர் அதைக் கட்டுக்கதை என்றும், கேள்விச் செய்தியே யென்றும், இந்தப் பிறவியிலேயே துறவிகளின் இயற்கைத் தன்மையானது நம் அறிவுக்கு எட்டாப் பொருளாய் விளங்குகிறதென்றும் வாதிக்கிருர். **வாச்சா** என்பவரிடம் புத்தர் கூறுகிருர் : "உருவம் என்பதிலிருந்து விடுதலை பெற்ற துறவியார், சமுத்திரத்தைப் போன்று மிகவும் ஆழ்ந்தும், அளவிட முடியாதவராயும், ஆழத்தை அளக்க முடியாதவராயும் காணப்படுகிருர்.'' அது நினைக்க முடியாத (அனனுவெஜ்ஜோ), முற்றிலும் மாருன, வாழ்க்கையின் ஆழ்ந்த நிலையாகும். அதை விவகரிக்க வேண்டுமானுல், 'இல்லை' என்னும் சித்தாந்தத்தாலேதான் முடியும். நாஸ்திகவாதக் கோட்பாடுகளுள், தெய்விக இருள், எல்லையற்ற கடவுள், கரையில்லாச் சமுத்திரம், அகண்ட பாலைவனம் ஆகிய இச்சொற்ருெடர்கள் அடிக்கடி வருகின்றன. அது மிகவும் சாதாரணப்பொருளில் 'இல்லாத

1. சம்யுத்தா, iv.374.
2. அலகுத்தூபம சுத்தா.

தன்மை'யே யாயினும், அது உண்மையான நிலை பெற்ற 'இருக்கும் தன்மை'யே யாகும். அதைப்பற்றி நினைக்கவும் கருத்துகள் இல்லை; மொழியில் தகுந்த விவகரிப்பும் இல்லை. இவ்வுலகம் முடிவற்ற நிலையினைச் சேர்ந்ததனுல், எப்பொழுதும் மாறிக்கொண்டே இருப்பதனுல், நிருவாண மென்பது பரம்பொருளின் இதய கமலத்தில் காணப்படும் சாந்தமும் அமைதியுமாகும். நிருவாணம் என்பதில் குறிக்கப்பட்டுள்ள சூட்சும அறிவு சாதாரண மனிதனிடத்தில் காணப்படும் சூட்சும அறிவிலிருந்து வேறுபட்டு நிற்பதால், அது ஒரே பெயரை ஏற்கக்கூடாது. அது ஒருவாறு சட—அறிவு என்றே வழங்கப்படலாம். ஏனெனில், வரையறுக்கப்பட்ட எல்லாச் சூட்சும அறிவுகளும், அநாத்துமாவின் சூட்சும அறிவேயாகும்; மற்றும் அது வெளி விவகாரமுமாகும். உபநிஷத்துகள் கூறுவதுபோல, 'அது அவனுக்குத் தெரியாதிருக்கும்பொழுது, அவன் அதைத் தெரிந்து கொண்டே இருக்கிறுன்; தெரியாவிட்டாலும் தெரிகின்றது.'[1] ஏனெனில், அறிவதென்பது அறியப்பட்டவனிடமிருந்து தனியே பிரித்தெடுக்க முடியாத தொன்றும்; காரணம், அது அழியமுடியாது என்பதே. ஆனுல், இரண்டாவது என்பதே இல்லை; தான் அறிய வேண்டுவது தன்னைத் தவிர வேறு எப்பொருளும் தனியாக இல்லை. "அது தண்ணீர் போன்று ஊடுருவப் பார்க்கக் கூடியதாய்விடுகிறது; மற்றும், இரண்டாவது என்பது இல்லாமலே தனித்து நிற்கும் சாட்சியாகவும் விளங்குகின்றது. இதுதான் பிரமத்தின் உலகமாகும்."[2] எல்லாம் நிர்மலமானது; ஒன்றும் இருள் அன்று; எதுவும் எதிர்ப்பை யளிக்காது. நிலையில்லாதது என்ற கலப்பே இல்லை. பிருஹதாரணியக உபநிஷத்தில் உள்ள

---

1. பிருஹதாரணியக உபநிஷத்து, iv. 3. 30.
2. "ஸலில ஏகோ திருஷ்டாத்வைதோ பாவதி ஈஸா பிரம்மலோக." (பிருஹதாரணியக உபநிஷத்து, iv. 3-32.)

மிகவும் புகழ்பெற்ற பகுதியில், **யாஞ்ஞவல்கியர்** தம் மனைவி மைத்திரேயிக்கு, விடுதலை பெற்ற ஆன்மாவின் நிலை உன்னதமான பேருண்மை நிலையே என்றும், அது வேறெந்த விதத்தாலும் விவகரிக்க முடியாத தொன்றும் என்றும் விளக்கி, "ஓர் உப்புக் கட்டிக்குச் சுவையென்ற ஒன்று இருப்பதுபோல, உள் என்றும் புறம் என்றும் எவ்வாறு இல்லையோ, அவ்வாறே இந்த ஆன்மாவுக்கும் உள் (அகம்) என்றும், வெளி (புறம்) என்றும் இல்லை. இது ஞானத்தைத் தவிர வேறொன்றும் அன்று. இது பஞ்சபூதங்களுடன் புறமாகக் கிளம்பியதால், ஆன்மா இதனோடு மறைந்து விடுகிறது. இது போன பிறகு (இறப்பிற்குப் பிறகு), தன்னுணர்ச்சி காணப்படுவது இல்லை," என்று கூறுகிறார். அவள் தன் குழப்பத்தை வெளியிடுகிறாள். அதன் பின்னும் யாஞ்ஞவல்கியர் தொடர்ந்து, "நான் ஏதும் குழப்பமான பொருளைக் கூறவில்லை. என் உழுவலன்பே, அந்த ஆன்மா என்பது அழிவற்றது; அழிக்க முடியாதது. அது இரண்டாய் (துவைதமாய்) இருக்கும்பொழுது, ஒருவன் மற்றவனைப் பார்க்கிறான்; ஒருவன் மற்றவனை நுகர்கிறான்; ஒருவன் மற்றவனுக்கு அஞ்சலி செய்கிறான்; ஒருவன் மற்றவன் சொற்களைக் கேட்கிறான்; ஒருவன் மற்றவனைத் தொடுகிறான்; ஒருவன் மற்றவனை அறிந்து கொள்கிறான். ஆனால், இவை யாவும் ஆன்மாவாகவே இருந்தால், நாம் எப்படிப் பார்ப்பது, சுவைப்பது, கேட்பது, தொடுவது அல்லது மற்றவரைத் தெரிந்து கொள்வது? எவருடைய சத்தியால் நாம் இவை யாவற்றையும் அறிகிறோமோ, அவரை எங்ஙனம் நாம் அறிந்துகொள்வது? அந்த ஆன்மாவை 'இல்லை, இல்லை' (நேதி, நேதி) என்பவற்றால் விவகரிக்கவேண்டும். அவர் பார்க்க முடியாதவர்; ஏனெனில் பார்வைக்கு அகப்படாதவர்; அவர் அழிக்கமுடியாதவர்; ஏனெனில், அவரை அழித்துவிட முடியாது; அவர்

பற்றின்றி நிற்பவர்; ஏனெனில் அவர் எதையும் தம்மைப் பற்றவிடுவதில்லை; அவர் தளை என்பது என்ன என்பதே அறியாதவர்; துன்பத்தை அறியாதவர்; தளர்ச்சியை அறியாதவர். அவ்வாறிருக்க, என் அன்பரே, ஒருவர் எல்லாம் அறிந்தவரை அறிவது எங்ஙனம்?''[1] ஓர் அழகுமிக்க பகுதியில்[2] கூறப்படுகிறது: "தம் ஆன்மாவிலேயே பிரமத்தைக் கண்டு கொள்ளும் ஞானிக்கே நிரந்தர சாந்தி உண்டே தவிர, மற்றவர்களுக்கு இல்லை. அவர்களே, அத்தகைய சொல்லமுடியாத உன்னதப் பேரானந்தத்தை உணர்கிறார்கள். அப்பொழுது, 'இதுதான் அது' என்று கூறுகிறார்கள். நான் அதை எங்ஙனம் புரிந்துகொள்வது? அதற்குச் சுயமாகவே ஒளி உண்டா? அல்லது ஒளியினைப் பிரதிபலிக்கிறதா? எந்தச் சூரியனும் அங்குப் பிரகாசிப்பதில்லை; சந்திரனுமில்லை; நட்சத்திரங்களும் இல்லை; மின்னல்களும் இல்லை; இந்த நெருப்புக்கூடச் சிறிதேனும் இல்லை. அவர் (பிரமம்) பிரகாசிக்கும் போது, மற்ற யாவும் பிரகாசிக்கின்றன; அவருடைய ஒளியால், இவ்வுலகம் முழுவதும் பிரகாசிக்கிறது.'' புத்தருடைய நிலையை **'உதானு'** சரியாக விளக்குகிறது: "அது பேராசைக்கும், அஞ்ஞானத்துக்கும் இருவிதத் துவைத தோற்றங்களுக்கும் அப்பால் உள்ள உண்மைப் பொருளாகும். எவ்லாவிதப் பற்றுகளினின்றும் விடுதலையடைந்தது; மிகவும் உறுதி பெற்ற, அழிவேயில்லாத, எவ்விதப் புயலும் அழிக்கமுடியாத, அடுத்துநிற்கும் கரை போன்றது. நிருவாணம் அந்த வகையைச் சேர்ந்தது.'' புத்தர் கூறினார்: "ஏனெனில் நிலனும் நீரும், ஒளியும் காற்றும், முடிவற்ற இடைவெளியும் முடிவற்ற சூட்சும அறிவும், ஒன்றுமேயில்லாத சூனியமும் உணர்ச்சியும்

---

1. பிருகதாரணியக உபநிஷத்து, iv. 5. 5.
2. கடோபநிஷத்து, ii. 5-13.15.

உணர்ச்சியற்ற தன்மையும், இவ்வுலகமும் அல்லது அவ்வுலகமும், சூரியனும் சந்திரனும் ஆகிய இவ்வேறுபாடுகள் இல்லாத ஓர் உலகம் இருக்கிறது. அதை நான் வருகிறதென்ருவது, போகிறதென்ருவது, நிற்கிறதென்ருவது, ஓடிக்கொண்டிருக்கிறதென்ருவது, ஒரே நிலையில் ஒய்வு பெற்று உள்ளதென்ருவது, இறப்பும் இல்லை பிறப்பும் இல்லை என்ருவது கூறவில்லை. அது ஏதும் உறுதிப்பாடு இல்லாதது; தொடர்ச்சியற்றது; ஊன்றுகோல் இல்லாதது; அதுதான் துன்பத்தின் முடிவாகும்.''[1] அதை ஆகாசம் கொள்ள முடியாது; ஏனெனில், அதற்கு ஒரு குறிப்பிட்ட நிலையில்லை. காலம் அதை அடக்கிக்கொள்ள முடியாது; ஏனெனில், அது எவ்வகை மாற்றத்துக்கும் அப்பாற்பட்டது. அது செயலாற்றுவதோ அல்லது துன்பமனுபவிப்பதோ இல்லை. ஒய்வும், சலனமும் அதற்கு ஒன்ருகவே காணப்படுகின்றன.[2]

---

1. உதான : ஆங்கில மொழிபெயர்ப்பு : ஜி. ஸ்டிராங் : பக்கம், iii.

2. இக்கேள்வியின் முழு விவரத்திற்கு Indian Philosophy, Vol I, 2nd Edition(*1922*), பக்கங்கள் *676* ff; *446* ff; *465* ff; பார்க்க.

V

# ஆன்மிகப் பாரமார்த்திகம்

புத்தருடைய கோட்பாடுகளின்படியும், காலவர்த்த மானத்தைக் கருதியும், விளக்கங்களாக அளிக்கப்படும் விமரிசனங்களைக் கொண்டு, அவருடைய கருத்து களில் சூனியவாதத்தையோ, நாஸ்திகவாதத்தையோ வற்புறுத்துவது மதியீனச் செயலேயாகும். அவை களுக்கு வேறு வியாக்கியானங்கள் செய்யமுடியும். புத்தருடைய முதலனுபவமான எல்லாப் பொருள்களின் நிலையற்ற தன்மையை உணர்தலும், அது காரணமாக வாழ்க்கையின் குறைபாடும், உன்னதமானதும் நிலை யானதுமான நன்மையின் நிரந்தர அனுபவமின்றி, அவற்றை எவராலும் துய்க்க முடியாது. சிறுமையும் நிலையற்றதுமான வாழ்க்கைப் பொருளின் வீண் ஆர வாரத்தின் சித்திரத்தை நன்ருக விளக்கும் பெருமதிற் சுவராய் அது விளங்குகின்றது. புத்தர் இந்தப் பரம் பொருளின் தத்துவத்தை விளக்க மறுத்தார் என்ருல், அல்லது அவர் 'இல்லை' என்னும் சித்தாந்தக்கோட்பாடு களில் திருத்தியுற்ருரென்ருல், அது இப்பரம்பொருளா னது எல்லாவித எண்ணங்களுக்கும் அப்பாற்பட்ட தாகும் என்பதைக் குறிப்பிடவேயாகும்.[1]

---

1. மௌனமாய் இருந்து போதனை செய்வது, பழங்காலந் தொட்டு இந்தியாவில் காணப்படும் வழிவழி வந்த வழக்க மாகும். கேனேபநிஷத்து, "கண்கள் அவ்விடத்துக்குச் சென்று காண்பதில்லை; பேச்சும் அப்படியே; நினைவும் அப் படியே. அதை ஒருவர் எவ்வாறு போதிப்பார் என்பது நமக்

குப் புரியவில்லை; நமக்குத் தெரியவும் இல்லை. அது அறிந்த வற்றுக்கு முற்றிலும் மாறுபட்டும், அறியாதவற்றுக்கு அப் பாற்பட்டும் இருக்கிறது என்பதை அதைப் போதித்த பழம் பெருஞ்சான்றோரிடமிருந்து தெரிந்து கொண்டோம்,'' என்று கூறுகிறது. (i. 2-4).

பிருகதாரணியக உபநிஷத்து, ''ஆன்மா என்பதை 'இது இல்லை; இது இல்லை' என்ற விளக்கத்தாலேதான் விவரிக்க முடியும். அது எண்ணத்தால் அறிய முடியாதது; அதனால் எண்ணத்திற்கு அப்பாற்பட்டது,'' எனக் குறிப்பிடுகிறது.

''ஸ ஏஷ நேதி நேதி ஆத்மா அக்ருஹ்யோ
ந ஹி கிருஹ்யதே.'' (iii. 9.26; iv. 2-4; iv. 4-22).

தைத்திரீய உபநிஷத்து, ''சொற்கள் அதற்கு எதிராக மனத்துடன் திரும்பிவிடுகின்றன,'' என்கிறது. பிரம சூத்திரத்தின் வியாக்கியானத்தில் சங்கரர், 'குருவானவர், ஆன்மாவின் தத்துவத்தை விளக்கும்படி தம் சீடர் வேண்டியபோது, மௌனம் சாதித்தார். மீண்டும் மீண்டும் சீடர் கேட்டபோது, ''நான் சொல்லிக் கொண்டே இருக்கிறேன்; ஆனால், நீங்கள் அறிந்து கொள்ளவில்லை. ஆன்மா என்பது சாந்தமான அமைதியுள்ள மௌன நிலையே,'' என்று கூறுகிறார். ''ப்ரூமா கலுத்வம் து ந விஜாநாஸி உபஸாந்தோ யம் ஆத்மா.'' (iii 2.17)

தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது: ''அந்த அரசமரத்தின் கீழ்க் காணப்படும் சீடன் வயோதிகமடைந்தும், குரு இளமையாகவும் காணப்படுவது ஆச்சரியமேயாகும். குருவின் உபதேசமொழிகள் மௌனத்தின் விளக்கமேயாகும்; ஆயினும், சீடனுடைய சந்தேகங்கள் யாவும் அறவே நீக்கப்படுகின்றன.''

''சித்ரம் வடதரோர் மூலே விருத்தா சிஷ்யோ குருர் யுவா
குரோஸ்து மௌனம் வியாக்யானம் சிஷ்யஸ்து
சின்ன சம்ஸயா.''

இவ்வாறு புத்தரது மௌனமானது, பழைய சித்தாந்தமான மௌனம் என்பதை அடியொட்டி நிற்கின்றது.

இலங்காவதார சூத்திரம் கூறுகிறது: 'பாரமார்த்திக உண்மையை விளக்கச் சொற்களே இல்லை.' ''பரமார்த்தஸ் த்வனக்ஷரா.'' ''போதகரே, ததாகதர்கள் மௌனிகளே.'' ''மௌனஹி பகவன்ஸ் ததாகதா.''

மாத்யமிகக்கோட்பாடு, ''பரம்பொருளை இருத்தல், இல்லாமலிருத்தல், இரண்டிற்குச் சேர்ந்தும் சேராமலும் இருத்தல் என்னும் தத்துவத்திற்கு அப்பாலுள்ள சுதந்தர சத்தி,'' என்கின்றது. ''அஸ்தி நாஸ்தி, உபய அனுபய சதுஷ்கோடிவினிர் முக்தம்''. அதனால், புத்தர் அதைப்பற்றி எதையும் எவருக்கும் போதித்ததில்லை என்று நாகார்ஜுனர் கூறுகிறார். ''நா க்வ

**டையனீசியஸ்** என்பவரின் முன்னோர்கள் உருவாக்கிய கிறிஸ்தவகூட மதத்தின் உன்னதக் கடவுளினின்றும், அத்துவைத வேதாந்தம் கூறும் பிரமம் என்னும் பரம் பொருளினின்றும் இதை வேறுபடுத்திக் கூறுவது மிகவும் கடினமான செயலாகும்.

புத்தர் ஆன்மிக உலகத்தின் அனுபவத்தைக் கண்டிப்பது, பரம்பொருள் ஒன்று உண்டு என்ற கொள்கை மீது எழுப்பப்பட்டதேயாகும். ஆனால், அதைக் குறைபாட்டிற்கு அடிப்படை என்று அவர் சொல்ல மறுத்த தன்காரணம், அது தக்க பிரமாணத்துடன் மெய்ப்பிக்கப் படாததாகும் என்பதே. பரம்பொருளின் தத்துவத்தை விவகரிப்பதில் தயக்கமும் பயமும் கொள்வது இந்திய மனப்பண்பிற்கு நியாயமானதும் இயற்கையானது மாகும். தெய்வத்தை ஓர் எல்லைக்குள்ளடக்கி, அதற்குள் அதை விவரிப்பதோ, சுருங்க விளக்குவதோ உபநிஷத்துகள் செய்ததில்லை. ஒன்றை வரையறை செய்வதில் புத்தரின் மறுப்பு முழுவதும் நேர் எதிரான பாதையில் மிக நுணுக்கமான முறையில் விளக்கி வைப்பதைக் காணலாம் இதே போல மற்றப் போதகர் பலரும் ஈடுபட்டுள்ளனர். இது நிழலின் பயனை ஒதுக்கி வைக்கும் அதிக

---

சித் க்வஸ்ய சித் கஸ்சித் தர்மோ புத்தேன தேசிதா.'' மாதயமிக காரிகா, (x v. 24).

சந்திரகீர்த்தி, ''ஆசாரியர்களுக்கு மௌனமே உண்மைப் பரம் பொருளாகும்,'' எனக் கூறுகிறார். ''பரமார்த்தோ ஹி ஆர்யாணும் தூஷ்ணீம் பாவா'' (மாத்யமிக விருத்தி, பக்கம். 56). ''மற்றும், விவரிக்கமுடியாத உண்மையைப் போதிப்பதும் கேட்பதும் எப்படி முடியும்? ஆயினும் அனுமானத்தால் அது போதிக்கப்பட்டும் கேட்கப்பட்டும் வருகிறது,'' என்று கூறுகிறார்.

''அனக்ஷரஸ்யா தர்மஸ்யா ஸ்ருதி கா தேஸனு ச கா
ஸ்ருயதே தேஸ்யதே சாபி சமாரோபாத் அனக்ஷரா.''
(மாத்யமிக விருத்தி, பக்கம்.44).

ஒப்பு நோக்குக: ''எப்பொழுது பேச்சால் விளக்கப்பட முடியாதோ, அப்பொழுது மௌனத்தால் அன்றோ அது விளக்கப்பட வேண்டும்! பேச்சின்றேல் மௌனம்.''

ஒளியின் தன்மையேயாகும். தாம் மௌனமாய் இருப்பதற்குப் புத்தர் கூறும் காரணங்கள் மிகவும் புத்திநுட்பம் வாய்ந்தனவாகும். முதலாவதாக, கி. மு. ஆருவது நூற்ருண்டு இந்தியாவில், உலக சமுதாயத்தின் வரலாற்றில் எக்காலத்திலும் காணப்படக்கூடிய எண்ணற்றனவும் பரந்தனவுமாகிய விபரீதக் கற்பனைகளும், காரசாரமான பேச்சுகளும், ஆன்மிகத்தின் அத்தனை அனுபவங்களும் நம்மிடத்தில் காணப்பட்டன. மக்கள் மூடநம்பிக்கையில் முழுவதும் மூழ்கியிருந்ததோடு, குதர்க்கம் செய்வதும், மயக்கமெய்துவதும் பெரும்பாலும் அவர்களிடம் காணப்பட்டன. பாமர மக்களின் மூடநம்பிக்கைக்கும், கல்வி கற்ருேரின் குதர்க்கவாதத்திற்கும் உள்ள இடைப்பகுதி தனியாக எடுத்துக் காட்டும் அளவு கோடிட்டுப் பிரித்துக் காட்ட முடியாததாயிருந்தது.[1] இந்தக் குழப்பத்தில் மனித இயற்கையும் அனுபவமும் அடங்கிய கொள்கையைச் சரிவரப் புரிந்துகொள்வதைப் புத்தர் வற்புறுத்தினுர். மற்றும், கோட்பாடுகளின் மேல் எவ்விதக் கற்பனையும் நம்பிக்கையும் விவகரிப்போரின் வாக்கு வன்மையால் அப்படியே அங்கீகரிக்கப்படுவதை அறவே தவிர்க்கவேண்டுமென்றும் கூறினுர். மனிதனுடைய பகுத்தறிவுக்கும் மனப்பான்மைக்கும் உணர்ச்சியை ஊட்டுவதால், கோட்பாடுகள் யாவும் ஆளுந்தன்மையைப் பெறுகின்றன. மனித ஆன்மாவானது அதன் இந்த உண்மைத் தன்மையோ அல்லது பயனே பார்க்கப்பட்ட அளவுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அளவுக்கும் கீழ்ப்படிந்து நிற்கிறது. விவேகம், மரியாதை, பயம் ஆகிய இவை சிற்சில சமயங்களில் வணக்கத்தைப் பெற உரியவையாகிவிடுகின்றனவாயினும், இவைகளே சிந்தனைக்குரிய பொருள்களாக ஏற்பட்டுவிட்டால், இவைகளுக்கு உண்மைப் பிரமாணங்கள் எவை

1. பிரம்மஜால சுத்தாவைப் பார்க்க.

யும் இல்லை. 'தைரியத்தையும், சொந்த ஞானத்தையும் பயன்படுத்துவோம்', என்ற கொள்கையையும் கொண்டு, நாம் அனுமானம் என்னும் கொள்கையிலிருந்து செய லாற்றலுக்குப் போகவேண்டுமெனப் புத்தர் எதிர்பார்க் கிறார். இரண்டாவதாக, ஒவ்வொருவரும் தத்தம் சொந்த முயற்சியாலும், அனுபவ கரணத்தாலும் உண்மையை உணர வேண்டும். இதற்கு அறவழி இன்றியமையாததாகும். மத சம்பந்தமான கோட்பாடு களின் விவாதங்கள் அவசர முடிவுக்கு வரும் குணத்தை உண்டாக்குவதுடன், சாந்தமான வழியில் உண்மை யைப் பின்பற்ற முடியாமலும் செய்துவிடுகின்றன. உண்மை என்பது புனிதமான பேறேயன்றி, விமரிசகரின் கைப்பதுமையன்று. ஆன்மிக உலகில் தம் விளக்குத் திரியைத் தூண்டத் தவறுகிற எவரும் ஞானக்கண் கொண்டு பார்க்க முடியாது.[1] மூன்றாவதாக, அவருடைய இயக்கம் கல்வி கற்றோரைமட்டும் ஊக்குவதற்கன்று; பெருமிதமான எண்ணங்களால்—கருத்துகளால்—பாமர மக்களையும் ஊக்குவதற்கும் ஆகும். நல்லறங்களைக் கடைப்பிடித்துவாழும் வாழ்க்கையே அந்த ராஜபாதை என்பதைச்சொல்ல அவர் துடித்து நின்றார். நான்காவ தாக, ஆஸ்திகமதக்கொள்கையானது, பரமாத்துமாவை யும், ஆன்மாவையும் உறவாக்கிவைக்கும் முயற்சியில் —அத்துடிதுடிப்பில்— பரமாத்துமாவையே ஆன்மா

---

1. புத்தர் ஒவ்வொருவரையும் அவரவரே கண்டறி யுமாறு கூறுகிறார். (தீக நிகாயா, ii. பக்கம், 217); விசுத் தமக்கா, பக்கம், 216 ஐயும் பார்க்க: 'ஏஹி பஸ்ஸ இமம் தம்மம்தி ஏவம் பவட்டம் ஏகி-பஸ்ஸ-விதம் அரஹதிதி.'

பிளாட்டினஸ் கூறுவதை ஒப்புநோக்குக: "பிரஸ்தாபங் களிலிருந்து நாம் தீர்க்கதரிசனம் பெறுகிறோம்; எவர் ஞானத் தையடைய விரும்புகிறாரோ, அவருக்கு வழி காட்டுகிறோம். நம்முடைய போதனை, வழிக்கு ஒரு பக்கத்துணையாகும். ஞானக்கண்ணால் பார்ப்பதென்பது, அதைக் கொள்ள வேண்டும் என்ற உறுதி கொண்டவனது செயலேயாகும்."

(என்னியட்ஸ் vi. 9. 4)

வாக்கி விடுகின்றது. அது, கடவுள் இருக்கிருர் என் பதற்குரிய ஆதாரங்களைக் காட்டி, இயற்கை உலகில் காணப்படுவதைப் போன்று, கடைசியில் அடைய வேண்டிய குறிக்கோளாகக் கடவுளை உருவாக்கிவைக் கின்றது. இயற்கை உலகத்துக்கு உண்டான உண்மைத் தன்மையை, அது ஆன்மிக உலகத்திற்கு மாற்றிவைக்கிறது. கடவுள் உண்டு என்பதற்கும், இல்லை என்பதற்கும் ஏற்பட்ட வாதங்கள் யாவும், தெய் வத்தை இயற்கை வாதியின் போக்கிலே, பொருள் களில் ஒரு பொருளாகவோ, இருக்கிறதென்ருே அல்லது இல்லையென்ருே, நல்லதென்ருே, அல்லது தீயதென்ருே புரிந்துகொள்கின்றன. மனித சத்திக்கும் மேம்பட்ட கடவுள் ஒன்றைக்காண அவர் மறுக்கின்றனர்; அதனுடைய ஆழத்தினையும், அளவிட முடியாத இரகசியத்தையும் காண மறுக்கின்றனர். கடவுளைச் சிருட்டி கர்த்தாவென்ருே, பிதாவென்ருே, காதலனென்ருே, தோழனென்ருே கருதும் எண்ணங்கள் எல்லைக்கோடமைத்து விளக்கும் மதங்களைச் சார்ந் தனவாகும். அவை தங்கள் எல்லைக்குள் இருக்கும் ஒரு குறிப்பிட்ட சத்தியைக் கடவுளின் உண்மைச் சொரூபம் எனக்கொண்டு மயக்கமடைகின்றன. கடவுள் வேறெப் பொருளைச் சார்ந்தோ அல்லது அவைகளுடன் ஒப்பு நோக்கப்பட்டோ இருக்கவில்லை. ஆனல், அது தன் சொந்த உரிமையின்படி, நம்முடைய மனத்தின் எண்ணங்களுக்கும் உயர்ந்ததாயும், இயற்கைத் தத்து வத்திற்கு அப்பாற்பட்டும், வேருன குணங்களையுடைய உண்மைப் பொருளாயும் விளங்குகிறது. அதனல், புத்தர் தம் சொந்தக் கருத்தால் கடவுளை உருவாக்கிய யாவருக்கும் எதிராகப் பணிபுரிய உறுதி கொண்டார். சிருட்டியில் காணப்படும் முழுமைத்தத்துவம் யாவும் அப்படியே கடவுளிடத்திலும் காணப்படுகின்றன என்று அவர்கள் கூறும் பலவிதக்கூற்றுகள்,

சிருஷ்டித் தொழிலைக் காட்டுவதற்குப் பதிலாக, அதன் பாலுள்ள நம்பிக்கையையே உறுதிப்படுத்துவனவாகின்றன. தொழுதல் என்பது தனிப்பட்ட உறவுமுறையில் போக்குவரத்து ஏற்படுத்திக் கொள்ளும் குணத்தைக்கொள்கிறது; அது கடவுளிடத்தில் பேசப்படும் சுயநலப் பேரமாகும். அது உலக ஆசைகளுக்குரிய பொருள்களைத்தேடி, சுயநலம் என்னும் தீயைத் தூண்டி நிற்கிறது. ஆனல், தியானம் என்பது வேறுவகையில் சுயநல மாற்றமேயாகும். அது ஆன்மாவின் மறுமலர்ச்சியும், பரம்பரை வழியூடே வந்த மிருக இச்சைகளை முற்றிலும் மாற்றியமைத்தலும், சமுதாய பாரம்பரியமுமாகும். ஐந்தாவதாக, பரம்பொருளின் உண்மை, தர்க்க வாதங்களுக்கு அப்பாற்பட்டதாகும்; அதற்குத் தர்க்க முறையாக விவரங்களைத் தரவேண்டுமென்று வற்புறுத்துவது, பொழுது போக்கேயன்றி வேறன்று. இங்குக் கூறப்பட்ட வரம்புகள் நீங்கலாக, புத்தர் நிருவாணத்தின் உண்மையையும், பரமாத்துமாவின் உண்மையையும், 'தருமம்' என்ற பெயரால் தாம் வழங்கும் பரம்பொருளின் உண்மையையும் சுட்டிக்காட்டினுர். தமது மௌன அநுஷ்டானத்துக்கும், உபநிஷத்துகளில் காணப்படும் 'இல்லை' என்னும் பாரமார்த்திகத்தத்துவத்திற்கும் அவருக்குப் பெரும் ஈடுபாடு இருந்தது. "அங்கே கண்கள் செல்லா; பேச்சும் செல்லா; மனமும் செல்லா; நாம் அதை அறியவில்லை; ஒருவர் அதை எவ்வாறு போதிப்பார் என்பதும் நாம் அறிய முடியவில்லை."[1]

---

1. பிளேட்டோவில், 'எப்பாலுக்கும் அப்பால் உள்ள' கடவுளின் தன்மையைப் பற்றிய தீர்க்க தரிசனம் ஒன்று கூறப்பட்டுள்ளது. டையநீசியஸ் என்பவர் தகப்பன் - மகன், ஆன்மிகச்சிந்தனையாளர், அவரது நிரந்தர கருத்து என்கிற உறவினங்களுக்கப்பால் தியானத்தைச் செலுத்துகிருர்; தமது பார்வையை இவ்விரண்டுக்கும் இடையே உள்ள பெரும் இடைவெளியில் செலுத்துகிருர். மிகவும் உன்னதமானஇவ்வனுபவம் விவகரிக்க முடியாதது. இதன் வினையாற்றல்கள் விவகரிக்க முடி

வரலாற்றுத் தொடர்பிலும், மற்றத் தொடர்பிலும் இந்து மதத்துக்கும் புத்தர் கருத்துக்கும் பிற்காலத்தில் ஏற்பட்ட சிற்சிலக் குறைபாடுகளைச் சுருக்கமாகக் கூறு கிறேன் :

1. தத்துவம் என்பது மனித மனத்தின் இயற்கை யான தேவையாகும். புத்தர் கூட மோக்ஷ சாதனம் முதலிய இறுதிப் பொருள்களில் அவரவருடைய கருத் துப்படியே முன்னேறும்படி தம்மைக் கேட்போர்களை வற்புறுத்துவதில் வெற்றி கண்டாரில்லை. ஆணித்தர மான குறிப்பிட்ட ஒரு கட்டுப்பாடுக்குட்பட்ட வழியை ஆசிரியர் மூலமாகப் பெற்றுக்கொள்ளாத காரணத்தால், பலவித மன—உடல்—தத்துவங்களும் பகுப்புகளும் புத்தரின் பெயருடன் ஒட்டவைத்து, புத்த மதத்தின் வாழ்க்கைப் பாதையில் ஒன்றி நிற்கும்படி செய்யப் பட்டன.

2. புத்தருடைய உன்னதக் கோட்பாடாகிய 'தருமம்' என்பதே பரம்பொருள் என்று கூறியது அனுபவ காரியங்களுக்கு முற்றிலும் உதவாமலிருந்தது; உறுதியற்றிருந்தது. திபெத்தியர்கள் செய்வது போல, நாமும் சக்கரங்களோடு சேர்ந்து பிரார்த்தனை யைச் செலுத்தலாம்; ஆனால் சக்கரங்களுக்கு அல்ல. படிப்படியாகப் புத்தர் ஓர் அவதார புருஷர் ஆக்கப்பட் டார்.

3. வாழ்க்கையின் சோதனைகளில் முழுதும் பங்கெடுத்துக் கொண்டவர்களுக்குமட்டும் வாழ்க்கைப் பாதையிலிருந்து விடுதலை பெற உரிமை உண்டு என்று பிராமண போதகர்கள் நிருணயித்திருந்த பொழுது,

---

யாதவை. பகுத்தறிவினைக் காட்டாத இதைப் பகுத்தறிவு என்று கூற டையநீசியஸ் அஞ்சினார்; சொல்ல முடியாத சொல்லாகும் என்று கூறுவதற்கும், அது என்றுமே இருந் திராத உன்னதப் பொருளானதால், இருப்பனவற்றிற்கெல் லாம் அப்பாற்பட்டதாகும் என்று கூறுவதற்கும் அஞ்சினார்.

சீடனது குருகுல ஆரம்ப வாழ்க்கையும் திருமணம் புரிந்துகொண்டு இல்லறம் நடத்தும் வர்ணாச்சிரம தரும வாழ்க்கையும் முக்கியமானவை அல்ல என்றும், ஒருவர் இவ்வுலக வாழ்க்கைப் போராட்டத்தினின்று எந்த நிலையிலும் ஓய்வு பெறலாம் என்றும் புத்தர் போதனை புரிந்தார். புத்தர் காலத்தில் ஆன்மிக வாழ்க்கையானது மதாபிமானிகள், சடங்குக்காரர்கள், உலகபந்தங் கொண்ட இலௌகீகர்கள் ஆகிய மூவர் எதிரிலும் போராடவேண்டியிருந்தது என்பதைச் சரிவரப் புரிந்து கொண்டால், மேற்கூறிய மூன்றுவித மிகைபடக் கூறிய விளக்கங்களையும் எளிதாகப் புரிந்துகொள்ள முடியும்.

கௌத்தம புத்தரிடத்து, மிகவும் சத்தி வாய்ந்த கூட்டுறவாக ஆன்மிகச்சத்தியின் ஆழ்ந்த கருத்தையும், உன்னத நிலையைச் சார்ந்த அறவழி வலிமையையும், மிகவும் நுணுக்கம் பெற்றதாயுள்ள புத்தி நுட்பப் பெற்றியையும் நாம் காண்கின்றோம். மனிதர்கள் தங்கள் தெய்விகச்சத்தியைத் தாங்களே உணருமாறு செய்த தனிப்பட்ட ஆன்மாவைச் சேர்ந்த புண்ணிய சீலர்க ளுள் புத்தரும் ஒருவராவார் ஆன்மிக வாழ்க்கையை அற்புதச் சஞ்சாரங்கள் உடையதாயும், கவர்ச்சியுடைய தாகவும் செய்து, அதனால் மக்கள் உலக வாழ்க்கையில் புதிய ஊக்கத்துடனும், இதயத்தில் புதிய மகிழ்ச்சி யுடனும் நுழைந்து பங்கெடுத்துக் கொள்ளுமாறு செய் தவரும் அவ்வபூர்வ மனிதரேயாவார். அவருடைய சிறந்த புத்தி நுட்பமும், ஞானமும், உன்னத உண்மையையறிய உதவியளித்து நின்றபொழுது, அவருடைய வாழ்நாட்களைத் துன்பத்தால் வருந்தும் மனித சமுதாயத்துக்காக அர்ப்பணிக்கச்செய்து விட்டது. இதனால் புத்தர், உண்மையான அமரத்துவம் வாய்ந்த பெருந்தகையாளர்கள், தங்கள்பால் தெய்விகச் சத்திவாய்ந்த ஆன்மா வாய்க்கப்பெற்றிருந்தும், மனித

சுகதுக்கங்களைப் போக்க அவர்களுடன் கலந்து உற வாடுகிறார்கள் என்ற உயர்ந்த வழிவழி வந்த யோகியர் களின் பாரம்பரிய குணத்தை நிலை நாட்டிவிட்டார். அவருடைய பெருமிதமான உருவத்தோற்றமும், தீர்க்க தரிசன முழக்கமும், துன்புறும் மக்களுக்காகக் காட்டும் அளவுகடந்த அன்பும், அவர் காலத்தே அவருடன் கூடிப்பழகி வந்த மக்களிடத்தில் சிறந்ததும், ஆழ்ந்தது மான ஓர் எண்ணத்தை உண்டாக்கிவிட்டன. உண்மை நிலையை விளக்க முயலும்போது, பாமர மக்களிடத்தில் சர்வசாதாரணமாகக் காணப்படும் விளக்க வகைகள் எழுவதற்கு அந்தக் கதைகளும் நிகழ்ச்சிகளும் குறிப் புகளும் காரணமாகிவிட்டன. இந்தக் குறிப்பிட்ட இடத்தில், மற்றவர்களைவிடப் புத்தர் எத்துணை மேன்மையுற்றவர் என்பது தெளிந்துரைக்கப்பட்டது. ஆன்மிகக் கட்டுப்பாடு, ஞானம், அன்பு ஆகியவற்றின் தூய தூதரான கௌதமர், ஞானப்பிரானாராகவும், உலகச்சோதியாகவும், உலக இரட்சகராகவும் விளங்கும் புத்தராகிவிடுகிறார். காலம் செல்லச் செல்ல அவருடைய உண்மையான கீர்த்தியும் பெருமையும் பின்னும் தெளி வாயும் ஒளிபெற்றும் விளங்குகின்றன; சந்தேக மனப் பான்மை கொண்ட நாஸ்திகர்கள் கூட அவருடைய சாதனைகளுக்கு மதிப்பு ஈந்து, இன்னும் இதயபூர்வ மான மரியாதை செய்து, உண்மையான வணக்கத்தைச் செலுத்தத் திரும்பியுள்ளார்கள். மனித இன வர லாற்றில் மிகவும் உன்னதமான சாதனைகளைச் செய்த வீரமக்களுள், தம் காலத்துக்கும் மற்றக் காலங்களுக்கும் உரிய தீர்க்கதரிசன மொழிகளைப் புகன்ற புத்த பிரானார் தலைசிறந்தவராவார்.

“ தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.”

—திருக்குறள்

★

# பொருட் குறிப்பகராதி


அக்கி-வச்ச கொத்த சுத்தா—97
அங்குத்தரா—23, 49, 59, 82, 85, 87, 91, 92, 95
அசிதர்—14
அசிரவதி—29
அசோகரின் கல்வெட்டுகள்—13
அசோகர்—11, 13, 65
அஞ்ஞானம்—35, 40, 45
அத்தகாமோ—90
அத்தசரணம்—90
அத்ததீபம்—90
அத்தா—95
அத்துவைத ஐக்கிய வாதம்—56
அத்துவைத வேதாந்தம்—105
அத்யாத்மிகம்—75
அத்வய வஜ்ரசங்கிரகம்—91
அநாத்துமா—87, 99
அநாத்துமா-பிரகிருதி—91
அபிதர்மகோஸா—71
அப்பாலஜி—50
அம்பபாலீ—30
அம்பலத்திகா—25
அரிஸ்தாதல்—51
அரூபம்—48
அர்த்தா—81
அலகுத்தூபம சுத்தா—87, 98
அவஸ்தானின் அஷா—81
அவிஜ்ஜாமூலகா—36
அறுபது சீடர்—19
அனத்தா—87
அனனுவெஜ்ஜோ—98
அனுமான உலகம்—67
அனுமானக் கூட்டுறவு—90
அனுமானப் பிரபஞ்சம்—60, 71, 72, 85
ஆக்ஸ்போர்டு இந்திய வரலாறு—13
ஆதென்சு—32
ஆலாரகாலாமா—16
ஆனந்த நிலை—92
ஆனந்தர்—19, 24, 29, 30
ஆனந்த விடுதலை—86
ஆன்ம அனுபவம்—49, 86, 92
ஆன்ம சொரூபம்—89
ஆன்ம ஞானம்—41
ஆன்ம தரிசனம்—94
ஆன்ம நுகர்வு—71
ஆன்மா—15, 35, 39, 40, 41, 43, 45, 47, 49, 50, 59, 61, 62, 63, 66, 68, 72, 73, 74, 78, 80, 88, 89, 90, 91, 92, 97, 100, 101, 104, 106, 107, 108, 109, 111
ஆன்மிக இழப்பு—26
ஆன்மிக உணர்வு—78
ஆன்மிக உலகம்—105, 107, 108
ஆன்மிகக் கட்டுப்பாடு—77, 112
ஆன்மிகக் கொள்கை—9

ஆன்மிகச் சத்தி—17, 86, 92, 111
ஆன்மிக நியதி—85
ஆன்மிக நிலே—95
ஆன்மிக நோய்—43
ஆன்மிகப் பரிசோதனே—43
ஆன்மிகப் பாரமார்த்திகம்—80, 103
ஆன்மிகப் பொருள்—86
ஆன்மிகப் போர்வை—21
ஆன்மிக முன்னேற்றம்—44
ஆன்மிக வாழ்க்கை—77
ஆன்மிக விடுதலே—25 48
ஆஸ்கலேபியஸ்—32
ஆஸ்திகக் கொள்கை—66, 107
இசெய்க்கல்—37
இதிவுத்தகா—33, 36
இந்திய—ஈரானியரின் கொள்கை—81
இந்தியத் தத்துவம்—102
இயேசு நாதர்—14, 31, 32, 50
இராகுலன்—14
இராயல் ஏஷியாடிக்கு ஸொஸைடித் திங்கள் வெளியீடு—13
இருக்கு வேதம்—12, 58
இலங்காவதார சூத்திரம்—104
இலங்கை வரலாறு—11, 13, 72
இலலிதா விஸ்தாரம்—18
இறுதிக் கட்டுரைகள்—59
உச்சேதவாதம்—91
உதானு—29, 43, 90, 101, 102
உத்தகராமபுத்தா—16
உபநிஷத்துகள்—41, 53, 57, 58, 60, 61, 62, 81, 82, 87, 91, 92, 93, 99, 105, 109
உயிர்ப்பரிணமம்—55
உருவேலா—16
உலகாயதம்—75, 76
எண்வகை மார்க்கம்—21, 38, 41, 42, 45, 87
எமிலி சீஞர்ட்டு—10
என்னியட்ஸ்—107
எஸ்ஸெய் ஸூல லிஜெண்டு டு புத்தா—10
ஏகாம்சவியாகர்நீயா—70
ஐந்து நிகாயங்கள்—11
கங்கை—29, 97
கடவுள்—20, 21, 52, 66, 71, 78, 79, 80, 93, 105, 108, 109
கடோபநிஷத்து—36, 101
கபிலவஸ்து—13
கருட புராணம்—65
கர்த்தர்—52
கர்மம்—36, 59, 68
காசி—13, 33, 77
கார்பெண்டர், ஜெ. ஈ.—84
காலாமா—22, 23
கிரிட்டோ—32
கிறிஸ்தவ மதம்—84, 105
கிறிஸ்து—18, 51
குசி நகரம்—31
கூடதந்தர்—46
கெலாஷியன்ஸ்—51
கேமா (பிக்ஷுணி)—97
கேனேபநிஷத்து—103
கோசாம்பி—75
கோபா—14
கௌதம புத்தர்—9, 10, 111
கௌதமர்—14, 15, 16, 17, 18, 26, 29, 46, 54, 112

சங்கம்—20, 26, 29, 30, 31
சங்கரர்—104
சட-அறிவு—99
சதி—91
சந்திரகீர்த்தி—105
சமணர்—28, 46, 62
சமுசயவாதம்—54
சமுசயவாதிகள்—55, 73
சம்ஞாஞ—38
சம்யுத்தா—39, 59, 61, 72, 75, 85, 87, 98
சம்யுத்தாநிகாயா—90
சம்ஸ்காரம்—38
சம்ஸ்கிருத இலக்கிய வரலாறு—12
சம்ஸ்கிருதம்—11, 12, 33
சரயூ—29
சர்வம் அநாத்மம்—62
சர்வஸ ஜீவத்வ வாதம்—56
சாக்கிய முனிவர்—13, 79
சாக்கியர்—13
சாங்கியம்—61
சாசுவதவாதம்—90
சாஞ்சி—11
சாந்தோக்கிய உபநிஷத்து—58
சாரநாத்து—19
சாரிபுத்தர்—23, 24, 91, 94, 95, 98
சாஸ்திரீய ஞானம்—71
சித்தார்த்தர்—13
சிமியோன்—14
சிலுவை—50
சில்டர்ஸ்—79
சிவன்—80
சின்சுபாச்சோலை—75
சிஹா—28
சீவராசிகள்—18, 38, 47, 64, 78, 81, 84, 96
சீவன்—73, 84
சீவாத்துமா—59
சீன மொழி—11
சீனம்—33
சுத்த நிபாதா—14, 59
சுத்தபிடகம்—11
சுத்தாதிகினி—11
சுத்தோதனர்—13, 14
சுவர்க்கம்—37
சூட்சும அறிவு—99, 102
சூனியம்—73, 93, 102
சூனியவாதம்—73, 79, 91, 96 103
சோக்ரதர்—19, 25, 31, 32, 50
ஞானேசாரம்—23
டெஸ்டமெண்ட் ஆப் பியூடி—51
டையநீசியஸ்—105, 109, 110
ததாகதர்—24, 29, 87, 91, 97, 98, 104
தத்துவப்பொருள்—69
தம்மகதிகா—11
தம்மபதம்—33, 36, 88
தம்மதின்ன—94
தம்ம விபசன்ன—85
தருமயானம்—67
தர்மச் கோட்பாடு—36, 59, 78
தன்ஹா—34
தக்ஷிணமூர்த்தி ஸ்தோத்திரம்—104
தாமஸ் அக்வினஸ் முனிவர்—51
திபெத்தியர்கள்—110
திபெத்து—33

திருஸ்ஞ—*34*
தீகநிகாயா—*107*
தீகா—*21, 41, 87*
தீபவம்ஸா—*72*
துவைதம்—*56, 60, 100*
துறவறம்—*57, 58*
துன்பம்—*33, 34, 36, 38, 39, 41, 50, 60, 61, 71, 76, 94, 101, 102, 111*
தெய்வம்—*48, 67, 81, 105, 108*
தெய்வ வணக்கம்—*57*
தேர—*95*
தேரீ—*95*
தேவகணம்—*71*
தேவதத்தன்—*29*
தேவதை—*57, 67*
தேவர்—*19, 34, 57, 65*
தேவலோகம்—*57*
தேவனும்பிரிய பிரியதரிசின்—*13*
தேவிஜ்ஜசுத்தா—*21*
தைத்திரீய உபநிஷத்து—*58, 72, 81, 104*
நகரசுத்தா—*59*
நரகம்—*37*
நாகசேனர்—*70*
நாகரிகம்—*36*
நாகார்ஜுனர்—*63, 91, 104*
நாத்திகம்—*54*
நாமரூபம்—*30, 35*
நானுவிதத்தத்துவம்—*56*
நான்—*63, 64, 95*
நான்கு பேருண்மைகள்—*33, 41*
நாஸ்திக மதம்—*80*
நாஸ்திகர்—*73, 77, 80, 112*
நாஸ்திகவாதம்—*71, 74, 78, 98, 103*
நாஸ்திகவாதி—*73, 74*
நிகாயங்கள்—*11*
நித்திய சீவன்—*19, 80*
நித்தியத்துவம்—*44*
நிப்பாணு—*79*
நியாயப்பிரமாணங்கள்—*31, 73*
நியாயவாதம்—*55*
நிரதிசய நிலே—*73*
நிருவாணம்—*11, 21, 48, 57, 60, 73, 74, 75, 78, 80, 84, 86, 93, 94 95, 96, 98, 101, 109*
நீதி நூற்போதகர்—*11*
நீதி விளேவு—*37*
நேதி நேதி—*100, 104*
நேப்பாள தேசம்—*13, 33*
நேப்பிள்ஸ்—*51*
பகவத்கீதை—*36, 64, 93*
பகுத்தறிவு—*35, 77, 110*
பசனேகாயிகா—*11*
பசெநடி—*97*
பஞ்ச பூதங்கள்—*90, 91, 100*
பதினெட்டுப் பிரிவுகள்—*72*
பத்தகச்ச—*14*
பத்தி மார்க்கம்—*16*
பரசியம்—*24*
பரமாத்துமா—*58, 59, 60, 61, 62, 80, 91, 93, 107, 109*
பரம்பொருள்—*73, 77, 78, 80, 82, 85, 87, 103, 104, 105, 109*
பரலோகம்—*50*
பரவச நிலே—*45, 51*
பரிணுமம்—*83, 91*
பர்ணுப்—*79*

பவுல் முனிவர்—50
பவ்விய சீவன்—19
பாப்ரு ஸ்தூபி—11
பாரசீக மொழி—81
பாரமார்த்திகம்—80, 104, 109
பாலி மொழி—11, 33, 79, 86
பாவம்—47, 78
பிடகங்கள்—11
பிரகிருதி—82
பிரதிபிரச்சாவியாகர்ணீயா—70
பிரத்தியட்சாத்துமதரிசனம்— 54
பிரபஞ்சம்—42, 60, 64, 65, 66, 67, 72, 74, 77, 83, 84, 85, 86, 92
பிரம சூத்திரம்—104
பிரம ஞானம்—58
பிரம தேவர் –18
பிரமத்தோடு ஐக்கியமாதல்—21, 93
பிரம நிருவாணம்—93
பிரம பூதம்—92
பிரம பூதா—93
பிரமப் பிராப்தி—93
பிரமம்—36, 47, 57, 87, 92, 93, 99, 101, 105
பிரமயானம்—87
பிரமவிஹாரம்—21
பிரமா—21, 79, 80
பிரம்மஜாலசுத்தா—106
பிரவசனம்—12
பிராமணர்கள்—29, 110
பிருகதாரணியக உபநிஷத்து—15, 35, 47, 61, 81, 99, 100, 101, 104
பிளாட்டினஸ்—89, 107
பிளேட்டோ—32, 109
பிக்ஷு—11, 28, 29, 46, 59, 98
பிக்ஷுணி—94, 96
பீடோ—32
புத்தகோசர்—40
புத்த சாக்கிய முனிவர்—13
புத்த மதமும் கிறித்தவ மதமும்—84
புத்த மதம்—28, 42, 52, 54, 59, 79, 90, 110
புத்தவசனம்—13
பூதம்—36
பூரணத்துவம்—60, 64, 71
பெரிடேல் கீத்து, ஏ—74
பேடகி—11
பைசாசம்—19
பொல்லாத விதி—36
போதகர்—22, 76, 88, 89, 94, 95, 97, 104, 105
போதி—18
போத் கயா—18
பௌத்தக் கதைகள்—18
பௌத்த சங்கம்—29, 32
பௌத்த தத்துவம்—74
பௌத்த பிக்ஷு—11, 42
பௌத்த மத நூல்கள்—96
மகத்தான துறவறம்—15
மகாநிதான சுத்தா—40
மகாபதான சுத்தந்தா—52
மகாபரிநிப்பாண சுத்தா—24, 25, 31, 33, 90
மகாபாரதம்—36
மகா பிரசாபதி—14
மகா போதி—18
மகாவக்கா—28

Q4:33
N63



மகாவம்சா—72
மந்திர மதங்கள்—61
மலுஸ்ய புத்தர்—75
மஜ்ஜிமா—28, 41, 49, 72, 74, 87, 88, 91, 92, 94, 97
மாக்ஸ் முல்லர்—59
மாத்யமிக காரிகா—64, 105
மாத்யமிகக் கோட்பாடு—104
மாத்யமிக விருத்தி—105
மாயாவாதம்—17, 79
மாயாவாதி—73
மாரன்—17
மாஹீ—29
மிலிந்த பாஞ—71
முண்டகோபநிஷத்து—29, 61
மூலமாத்யமிக காரிகா—91
மெமோராபிலியா—32
மெலேதன்—50
மெஸ்ஸையா—18
மேக்டானல்—12
மைத்திரேயி—100
மோகலாஞ—94
மோக்ஷம்—59, 93, 110
மௌனம்—73, 103, 104, 105
யசோதரை—14
யமகர்—98
யமுனே—29
யாக மதங்கள்—61
யாஞ்ஞவல்கியர்—100
யூத குருமார்கள்—32
யோக சாதனே—16, 17, 58
ராபர்ட் பிரிட்ஜெஸ்—51
ருதம்—80, 81
ரூபம்—38, 48
ரெய்ஞல்ட்ஸ்—51
ரெஜினுல்டு—51
ரோமேன்ஸ் சொற்பொழிவு—79
வருண பகவான்—81
வாச்சா—98
விக்கிரக வழிபாடு—51
விசாகன்—93, 94
விசுத்தமக்கா—107
விஞ்ஞானம்—9, 39, 54
வித்தியா—58
விநயம்—11, 16, 88
விபஜ்ஜியவியாகர்நீயா—70
வின்சென்ட் ஸ்மித்து—13
விஷ்ணு—80
விஷ்ணு புராணம்—93
வேத காலம்—81
வேத கீதங்கள்—57
வேத ஞானம்—59
வேதம்—59, 81
வேதஞ—38
வேதாந்த ஞானம்—59
வேதாந்தம்—29
வைசாலி—11
வைசியர்கள்—29
வைதிகக் கொள்கை—31
ஸத்வ—71
ஸெனபன்—32
ஸ்கந்த—71
ஸ்கந்தங்கள்—89
ஸ்டிராங், ஜி—102
ஸ்தாபநீயா—71
ஸ்வேதாஸ்வதர உபநிஷத்து—97
ஜாதகங்கள்—49
ஜாதகா—66
ஜேத வனம்—89
ஜேம்ஸ்—41
ஹக்ஸ்லி, டி. எச்—78
ஹ ல்ட்ஸ்—13

ARCHIVES
109924

தமிழாக்க ஆசிரியருடைய பிற நூல்கள்

## இந்திய ஜனாதிபதி

## டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் நூல்களின் தமிழாக்கம் :

1. இந்தியப் பெரியார்கள்
2. மதத்தில் கிழக்கும் மேற்கும்

பிற நூல்கள் :

3. பாஹியான்
4. யுவான் சுவாங்
5. மார்க்கோ போலோ
6. மணிமேகலை
7. அன்னை சாரதாமணி தேவியார்
8. காந்திப் பெரியார்
9. விஜயலட்சுமி பண்டிதையார்
10. செந்தமிழ்ச் சிலம்பு
11. இராபின்சன் குருசோ
12. புது நாடு கண்ட பெரியார்கள்
13. வெனிசு நகரத்து வணிகன்
14. கலிவரின் யாத்திரைகள்
15. ரிப்வான் விங்கிள்
16. சிந்துபாது
17. அறவழி காட்டிய ஆன்றோர்கள்
18. இயேசு நாதர்
19. கிரேக்க ஞானி சோக்ரதர்
20. குட்டிக் கதைகள்
21. சிறுவர்க்கான சிறு கதைகள்
22. சிறுவர் நீதிக் கதைகள்
23. நகைச் சுவைக் கதைகள்
24. தமிழ் நாட்டுச் சிறுவர் கதைகள்
25. பல்சுவைக் கதைகள்

மற்றும் பல.

★

6A
4-28

வள்ளுவர் பண்ணை 137, பிராட்வே சென்னை-1